janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2023 ஜனவரி 22 - ஜனவரி 28 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 42




போர்! போர்! போர்! ப 02



“சே” மகள் அலெய்டா குவேரா ப 03



மனிதர்களின் துன்பங்களை, துயரங்களை அறிந்தவர்தான் மிகச்சிறந்தவர் ப 16



# ஜீவாவின் லட்சியம் வெற்றிபெற நம்மை அர்ப்பணித்துக் கொள்வோம்!

## 60ஆம் ஆண்டு நினைவு தினத்தில் இரா.முத்தரசன் முழக்கம்



**இலக்கியப் பேராசான் தோழர் ப.ஜீவானந்தத்தின் 60ஆம் நினைவு நாளை முன்னிட்டு சென்னை காசிமேட்டில் உள்ள அவரது நினைவிடத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு, மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், மாநில துணைச் செயலாளர்கள் நா.பெரியசாமி, மு.வீரபாண்டியன், மாநில செயற்குழு உறுப்பினர் எம்.ரவி, ஏஐடியுசி மாநில பொதுச் செயலாளர் ம.ராதாகிருஷ்ணன், கட்சியின் சென்னை மாவட்டச் செயலாளர்கள் த.கு.வெங்கடேஷ் வேம்புலி, பா.கருணாநிதி, எஸ்.கே.சிவா உள்ளிட்ட கட்சியின் முன்னணி நிர்வாகிகள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.**

அப்போது மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் பேசியதாவது: ஜீவா குறித்து நாம் அனைவருக்கும் தெரியும். தேசத்தின் தந்தை எனப் போற்றப்பட்ட மகாத்மா காந்திக்கு, கொள்கை ரீதியாக நீங்கள் மேற்கொள்கிற சனாதன கொள்கை தவறானது என்று மிக துணிச்சலாக ஒரு இளைஞன் கடிதம் எழுதினான் என்று சொன்னால், அது நமது பேராசான் ஜீவா என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

அந்த கடிதத்தின் அடிப்படையில்தான் காந்தி காரைக்குடிக்கு வந்தபோது, ஜீவா குறித்து விசாரித்து அந்த ஜீவாவை பார்க்க வேண்டும் என்று காந்தி அவர்கள் தனது விருப்பதை தெரிவித்தபோது, உடன் இருந்த ராஜாஜி போன்ற மிக முக்கியமான தலைவர்கள், ஜீவாவாவை நாங்கள் இங்கு அழைத்து வருகிறோம் என்று சொன்னபோது, அவரை நீங்கள் இங்கு அழைத்து வரக் கூடாது, அவர் இருக்கும் இடம் சென்று நான் பார்க்க வேண்டும். அவர் எங்கே இருக்கிறாரோ, அங்கே என்னை அழைத்துச் செல்லுங்கள் என்று காந்தி சொன்னார். நமக்கு தெரியும் நம்முடைய நாட்டில் காந்தி எங்கே இருக்கிறாரோ அங்கே தான் எல்லா தலைவர்களும் தேடிச் செல்வார்கள். பண்டித ஜவஹர்லால் நேருவாக இருக்கலாம், ராஜேந்திரப் பிரசாத்தாக இருக்கலாம், வேறு யாராக இருக்கலாம் காந்தி எங்கே இருக்கிறாரோ அவரைத் தேடித்தான் மற்றவர்கள் சென்றார்கள்.

ஆனால், தேசப்பிதா காந்தி ஜீவா இருக்கும் இடம் தேடிச் சென்றார். சென்று அவர் நடத்திய அந்த ஆசிரமத்தை பார்த்து வியந்துபோய், அவரைப் பாராட்டி இப்படி ஒரு சிறப்பான ஆசிரமத்தை நடத்துகிறீர்கள், உங்களுக்கு எவ்வளவு சொத்து இருக்கிறது? என்று கேட்டபொழுது ஜீவா மிகுந்த அடக்கத்தோடு சொன்னார், தேசம் தான் என்னுடைய சொத்து என்று. திரும்ப அதற்கு காந்தி பதில் சொல்லும்போது, இல்லை இல்லை நீங்கள்தான் இந்த தேசத்தின் சொத்து என்று சொன்னார். இந்த நிகழ்வு ஒரு சாதாரணமான நிகழ்வு அல்ல. இந்த நிகழ்வு குறித்து நமது மாநில மாநாடு திருப்பூரில் மிக வெற்றிகரமாக நடைபெற்ற போது, அதன் அழைப்பிதழை முதலமைச்சர் அவர்களிடம் கொடுக்கச் சென்ற போது, இந்த சம்பவத்தை நினைவு கூர்ந்து சிராவயலில் ஜீவாவுக்கு நினைவு மண்டபம் அமைக்க வேண்டும் என்று ஒரு கோரிக்கையை வெறும் வார்த்தைகளால் சொன்னோம். அதை அவர் ஏற்று நம்முடைய மாநில மாநாட்டில் காந்தி – ஜீவா சந்திப்பு நிகழ்வு நடைபெற்ற இடத்தில் நினைவு மணி மண்டபம் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் மாநாட்டிலேயே தெரிவித்தார். அதை அடுத்து இப்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவர், வருவாய்த்துறை அலுவலர் ஆகியோர் மணிமண்டபம் கட்ட எந்த இடம் பொருத்தமாக இருக்கும் என்று ஆய்வு செய்து வருகிறார்கள்.

ஏற்கனவே நாகர்கோவிலில் மணி மண்டபம் கட்டப்பட்டிருக்கிறது. அரசின் சார்பில் சிலையும் வைக்கப்பட்டிருக்கிறது. இப்போது சிராவயலில் காந்தி – ஜீவா சந்திப்பு நினைவாக மணி மண்டபம் கட்டப்பட இருக்கிறது.

தமிழ்நாட்டில் இருக்கிற அனைத்து தலைவர்களாலும் போற்றப்பட்ட, மதிக்கத்தக்க தலைவர் ஜீவா. அவருக்கு இங்கே சிலை இருக்கிறது. இந்த சிலையை அன்றைய மதிப்புமிக்க தலைவர்கள் ஏற்பாடு செய்து அமைத்துள்ளனர். கம்யூனிஸ்ட் கட்சியில் பொதுவாக யாருக்கும் சிலை வைப்பது கிடையாது. பிறந்தாநாள் கொண்டாடுவதும் கிடையாது. நினைவு நாளில் நினைவு கூர்ந்து சபதமெடுக்கிற நாளாக நாம் மேற்கொண்டு வருகிறோம்.

ஆனால் கடந்த காலத்தில் ஜீவாவுக்கு ஒரு சிலை அமைக்க வேண்டும் என்கிற முயற்சி எடுத்து அதற்காக நிதி வசூலில் ஈடுபட்டிருக்கிறார்கள். ராஜாஜியிடம் போய் சிலை வைக்கப் போகிறோம், நிதி வேண்டும் என்று கேட்டபொழுது ராஜாஜி திரும்பக் கேட்டிருக்கிறார், ஜீவா இருந்தால் சிலை வைப்பதை ஏற்றுக் கொள்வாரா? என்று கேட்ட போது, நிச்சயமாக ஏற்க மாட்டார் என்பது போல தலைவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அவர் விரும்பாத ஒன்றை நீங்கள் செய்கிறீர்கள் என்று கூறிவிட்டு, நீங்கள் வந்து விட்டீர்கள், இரண்டு ரூபாய் தருகிறேன் என்று வெறும் இரண்டு ரூபாய் நிதியாக வழங்கி இருக்கிறார். இப்படி பலரும் கொடுத்து இருக்கிறார்கள்.

பிறகு எம்.ஜி.ஆரை சந்தித்து நிதி கேட்ட போது, இதற்கு எவ்வளவு செலவாகும் என்று சென்ற தலைவர்களிடம் கேட்டிருக்கிறார், ஒரு குறிப்பிட்ட தொகையை இவர்களும் சொல்லியிருக்கிறார்கள். யாரிடமும் வசூலிக்க போகவேண்டாம், மொத்த தொகையையும் நானே தருகிறேன் என்று எம்.ஜி.ஆர். சொல்லியிருக்கிறார். சிவாஜி அவர்களிடம் மிக நெருக்கமான உறவு உண்டு. அண்மையிலே ஒரு செய்தி வந்தது. ஜீவாவை கண்டித்து அண்ணா ஒரு அறிக்கை வெளியிடுகிறார்.

அதைப் பார்த்து எஸ்.எஸ்.ராஜேந்திரன் மிகச்சிந்த நடிகர் உங்கள் எல்லோருக்கும் தெரியும். அவர் உடனடியாக கோபித்து அண்ணா வீட்டிற்கு சென்று நீங்கள் எப்படி ஜீவாவை கண்டித்து அறிக்கை விடலாம்,? என்று சண்டை போட்டிருக்கிறார். அண்ணா பொறுமையாக கேட்டுக் கொண்டு, நீ உள்ளே போய் உட்கார், பிறகு வந்து நான் விளக்கம் சொல்கிறேன் என்று கூறியிருக்கிறார். எஸ்.எஸ்.ரஜேந்திரன் மிகுந்த கோபத்தோடு உள்ளே சென்றிருக்கிறார், அங்கே உள்ளே போனால் ஜீவா இருக்கிறார். பிறகு அண்ணா சொல்கிறார் போலீஸ் ஜீவாவை தேடிக்கொண்டிருக்கிறது, அவர்கள் இங்கே வந்துவிடக் கூடாது என்றுதான் கண்டித்து அறிக்கை விட்டேன் என்று அண்ணா கூறியிருக்கிறார். இப்படி ஏராளமான சம்பவங்கள் உண்டு.

தந்தை பெரியாரோடு மிக நெருக்கமாக இருந்து பழகி பயணம் செய்தவர். அந்த கொள்கைக்காக பிரச்சாரம் செய்தவர். ஆனால், திருத்துறைப்பூண்டியில்தான் பெரியாரிடத்திலிருந்து ஜீவா வெளியேறினார். பெரியார் தலைமை தாங்குகிற மாநாட்டிலேயே ஜீவா பெரியாரை கண்டித்துப் பேசுகிறார், நீங்கள் ஏற்றுக் கொண்ட கொள்கையை கைவிட்டுவிட்டீர்கள், நிலப்பிரபுகளுக்கு ஆதரவாக செயல்படுகிறீர்கள் என ஏறத்தாழ ஒரு மணிநேரம்பேசி இருக்கிறார். எந்த குறுக்கீடும் இல்லை. அந்த ஒருமணிநேர உரையும் தந்தை பெரியார் பின்பற்றிய தவறான கொள்கையை கடுமையாக விமர்சனம் செய்து பேசியதுதான். பேசிவிட்டு, ஆகவே உங்களிடமிருந்து நான் விலகுகிறேன் என்று கூறினார். இன்றைக்கு அரசியலில் யாராவது இப்படி செய்வார்களா? செய்ய முடியுமா? அந்த

தொடர்ச்சி 7ம் பக்கம்

கட்சிக் கடிதம்

# போர்! போர்! போர்!



பேரன்புமிக்க தோழர்களே !

**நீண்ட பல ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கிய போர் தீவிரமாக நடந்து கொண்டிருக்கிறது. இது ஆதிகாலத்தில் நடந்த வில், அம்பு, கத்தி, கஜை கொண்டு நடைபெறும் போர் அல்ல. மத்திய காலங்களில், மன்னர்களும், மாமன்னர்களும் நடத்திய காலாற்படை, குதிரைப்படை, யானைப்படை பங்கேற்ற போர் அல்ல. நவீன காலத்தில் அறிமுகமாகி, நாளும் நடைபெற்று வரும் துப்பாக்கி, பீரங்கி, ராக்கெட், ஏவுகணை என வான் வெளியிலும், தரை மற்றும் கடல் வழியிலும் நவீன யுத்தக் கருவிகளுடன் நடந்து கொண்டிருக்கும் போர் அல்ல. இந்த வகைப் போர்களை காட்டிலும் மிக வலிமையான தாக்குதல் நடத்தும் தத்துவக்களத்தில் போர் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது.**

விஞ்ஞான வளச்சியில், அறிவியல் கருத்துக்களால் விழிப்புணர்வு பெற்று பகுத்தறிவு ஆயுதம் தாங்கிய மனிதர்களை எதிர்கொள்ள இயலாத பழமைவாதிகள், மக்கள் கவனத்தை திசை திருப்பி, தப்பிப் பிழைக்க பல்வேறு சாகசங்களை மேற்கொண்டு வருகின்றார்கள்.

குறிப்பாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்நாடு ஆளுநரின் அதிகார அத்துமீறலை கண்டித்து, அரசியலமைப்புச் சட்டம் மாநிலங்களுக்கும், மக்களுக்கும் வழங்கியுள்ள உரிமைகளை பாதுகாக்கவும் கடந்த 2022 டிசம்பர் 29 ஆம் நாள், ஆளுநர் மாளிகை முற்றுகைப் போராட்டம் நடத்தியது.

தலைநகர் சென்னையில் நடந்த இப்போராட்டத்தில் திருவள்ளூர் மாவட்டம் தொடங்கி, கன்னியாகுமரி மாவட்டம் வரையிலும், சென்னை முதல் கோவை வரையிலும் கட்சி அமைப்பில் உள்ள 44 மாவட்டங்களில் இருந்தும் பல்லாயிரம் பேர் ஆளுநர் மாளிகை முற்றுகைப் போரில் பங்கேற்றனர்.

தலைநகர் சென்னையில் திரண்ட மாபெரும் கூட்டத்தில் ஆண்களும், பெண்களும், இளைஞர்களும் எழுச்சியோடும், உணர்ச்சி ததும்பும் முழக்கங்களோடு ஆர்ப்பரித்து சென்ற காட்சி இன்னும் கண்களை விட்டு அகலவில்லை.

உழைக்கும் மக்கள் சென்னை அணி வகுப்பு, அத்துமீறி செயல்படும் ஆளுநருக்கும், ஒன்றிய அரசுக்கும் எச்சரிக்கையாக அமைந்தது.

முற்றுகைப் பேரணி அணிவகுத்து சென்ற சாலைகளின் இருபுறங்களிலும் கடைகள் திறந்திருந்தன. அப்பகுதி மக்கள் வாழ்த்துக் கூறி மகிழ்ந்தனர்.

பேரணியில் பங்கேற்றோர் கட்டுப்பாட்டுடன் இறுதி வரை முழக்கம் எழுப்பி வீறு நடைபோட்டனர். பனகல் மாளிகை அருகில் காவல்துறையினர் இடைமறித்து, அனைவரையும் கைது செய்வதாக அறிவித்தது. அனைவரும் தாமாக முன்வந்து கைதானார்கள். கைது செய்யப்பட்டவர்களை ஒய்.எம்.சி.ஏ. உடற்பயிற்சி வளாகத்தில் இறக்கி விட்டு, அங்கு அனைவரையும் விடுதலை செய்துவிட்டதாக காவல்துறை அறிவித்தது. கைது செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கையை முறையாகயும், முழுமையாகவும் பதிவு செய்ய முடியாமல் நாலாயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டதாக தகவல் பரப்பி தப்பித்துக் கொண்டது.

உண்மையில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஒருவர் பாக்கியின்றி அனைவரும் கைதாகினர் என்பதை காவல்துறையால் ஒப்புக் கொள்ள முடியவில்லை.

கம்யூனிஸ்டு கட்சி முன்னெடுத்த இந்தப் போராட்டம், ஆர்.என்.ரவி என்ற தனி மனிதரை எதிர்த்து நடந்த போராட்டம் அல்ல; மாறாக நாடும், மக்களும் ஏற்றுக் கொண்டுள்ள, நாட்டு நிர்வாகத்தை வழி நடத்துகின்ற அரசியலமைப்பு சட்டம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உணர்வை வெளிப்படுத்தும் போராட்டமாகும்

அரசியலமைப்பு அதிகாரம் பெற்ற பொறுப்பில் உள்ளவர்கள், அதற்கு உரிய பொறுப்புணர்ந்து நடந்து கொள்ள வேண்டும்.

அரசியலமைப்பு அதிகாரத்தை அத்துமீறி, தன்னகங்காரத்துடன், அதன் மாண்புக்கும், மரபுக்கும் குந்தகம் விளைவிக்கும் செயலில் ஈடுபட்டால், அதனை குடிமக்கள் ஒரு போதும் அனுமதிக்க மாட்டார்கள்.

தமிழ்நாட்டின் ஆளுநராக பொறுப்பேற்றுள்ள திரு ஆர்.என்.ரவி, அரசியலமைப்பு அதிகாரத்தை அலட்சியம் செய்துவிட்டு, அநாகரிக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதை தடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் கம்யூனிஸ்டு கட்சி போராட்டத்தை முன்னெடுத்தது.

டிசம்பர் 29 ஆளுநர் மாளிகை முற்றுகை என நவம்பர் 13 ஆம் தேதி அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பு வெளியாகி மகத்தான போராட்டமாக நடைபெற்றது.

ஜனநாயக சக்திகள், மதச்சார்பற்ற சக்திகள், அரசியலமைப்பு சட்டத்தின் மீது நம்பிக்கை கொண்டோர், மாநில உரிமைகளுக்கு குரல் கொடுப்போர் என அனைவரும் ஆதரித்து வாழ்த்துக் கூறினர்.

பெரும்பாலான அரசியல் கட்சிகளும், அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களும் போராட்டத்திற்கு ஆதரவு தெரி வித்தன

மக்கள் பிரதிநிகளை தேர்வு செய்வதன் மூலம் சட்டமன்றங்களையும், நாடாளுமன்றத்தையும் அமைக்கும் உரிமை 18 வயதான குடிமக்களிடம் வழங்கப்பட்டிருக்கிறது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகள் அரசை வழிநடத்தும் அமைச்சரவையை தேர்வு செய்து, பேரவைக் கூட்டங்கள் மூலம் பிரதிநிதிகள் ஒப்பதல் பெற்று, அரசை வழி நடத்துகிறார்கள். ஆகவே தான் இதனை மக்களாட்சி என்று அழைக்கிறோம்.

சட்டமன்றப் பேரவைக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் சட்டமன்றத்தின் மூலம் மக்களின் உணர்வுகளையும், தேவைகளையும், கோரிக்கைகளையும் பிரதிபலிக்கிறார்கள்.

உறுப்பினர்கள் வெளிப்படுத்தும் உணர்வுகளை உள் வாங்கும் ஆளும் தரப்பினர், உறுப்பினர் கருத்தை முழுமையாகவோ, பகுதியளவோ ஏற்கிறது. ஒரு சிலவற்றை ஏற்க மறுப்பதும் உண்டு.

சட்டப் பேரவையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களும், சட்ட மசோதாக்களும், சட்டத் திருத்த மசோதாக்களும், அரசின் தலைவர் என்ற முறையில் “ஆளுநர்” ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

பேரவைச் செயலகமும், தமிழ்நாடு அரசும் அனுப்பி வைக்கும் தீர்மானங்கள் மற்றும் மசோதாக்களை பரிசீலனை செய்து ஐயப்பாடுகள் இருப்பின் அரசிடம் விளக்கம் கேட்கலாம், .

விளக்கம் பெற்ற பின்னர் அதற்கு, ஆளுநர் ஒப்புதல் அளித்து, ஆட்சி நடத்துவோருக்கு முழு ஒத்துழைப்பை கொடுக்க வேண்டும்.

ஆளுநர் என்பவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர் அல்ல; அவர் ஒன்றிய அரசின் பரிந்துரை அடிப்படையில் குடியரசு தலைவரால் நியமனம் செய்யப்படுபவர்.

வழிவழியாக அமைந்துள்ள அரசுக் கட்டமைப்புக்கு சட்டப்படி தலைமை ஏற்பவர். அரசின் தலைவர் அவ்வளவுதான்.

மக்கள் பிரதிநிதிகள் ஆட்சி முறையில், அரசியலமைப்பு சட்டம் முறையாக கடைப்பிடிக்கப்படுகிறதா?. மக்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படுகிறதா? சட்டம் ஒழுங்கு, உள்நாட்டு பாதுகாப்பு நிலவரங்கள் கட்டுக்குள் இருக்கிறதா என்பதை அறிந்து, ஆட்சியில் இருப்போரின் ஆலோசனை பெற்று, கடமை ஆற்ற வேண்டியவர் ஆளுநர்

இதற்காகத்தான் ஆளுநர்கள் மாநிலத் தலைநகரில் குடும்பத்துடன் தங்கி பணியாற்ற பணிக்கப்படுகிறார்கள்.

பிரம்மாண்டமான ஆளுநர் மாளிகை, அவருக்கு மாதச் சம்பளம், பயணங்கள் செல்லும் வழிகளில் பலத்த பாதுகாப்பு, செயலாளர், உதவியாளர்கள், வாகன வசதி, தொலைபேசி வசதி என ராஜ வாழ்க்கை வாழ்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆளுநர் மாளிகை செலவீனங்களை மாநில அரசுகள் ஏற்க வேண்டும்.

ஆளுநர் ஒன்றிய அரசுக்கும் மாநில அரசுக்கும் இணைப்புப் பாலமாக இருந்து செயல்பட வேண்டியவர்.

அவரது சொந்த விருப்பத்தை வெளிப்படுத்தவோ, அரசியல் கருத்துக்களை வெளியிடவோ, சர்ச்சைக்குரிய கருத்துக்களை தெரிவிக்கவோ கூடாது என்பதை அவர் ஏற்கும் உறுதிமொழி அறிவுறுத்துகிறது.

ஆளுநர் மாளிகை என்பது அரசியல் அலுவலகமாக மாறக் கூடாது.

ஆளுநர் பதவி என்பது கண்ணியம் குறையாத, மாண்பமைந்த பொறுப்பாகும். இந்த மாண்புக்கு கலங்கம் ஏற்படாமல், ஏற்படுத்தாமல் செயல்பட வேண்டும்

ஆனால், தமிழ்நாடு ஆளுநர் திரு ஆர்.என்.ரவி அவர் பொறுப்பேற்ற, ஆரம்ப நாளிலிருந்து தற்போது வரை, அவர் வகித்து வரும் பொறுப்புக்கு ஏற்றவராக செயல்படவில்லை என்பது உண்மையாகும்.

அவர் அரசியலைப்பு அதிகாரப் பொறுப்பில் இருப்பதை மறந்து விட்டு, ஒரு இயக்கக் கொள்கை சார்ந்தவராக செயல்பட்டு வருகின்றார்

ஆளுநர் ஒரு மனிதன், இந்தியக் குடிமகன் என்ற முறையில் ஒரு இயக்கத்தை சார்ந்து இருக்கக் கூடாதா?




எனக் கேட்கலாம்.

அவர் எந்த இயக்கத்தை சார்ந்தவர் என்பது “உள்ளங்கை நெல்லிக் கனி” போல் அனைவருக்கும் தெரிந்த செய்திதான்.

அவர் விரும்பும் ஒரு இயக்கத்தில் இருப்பதும் தவறல்ல.

ஆனால் ஆளுநர் பொறுப்பை வகித்துக் கொண்டு, அரசியலமைப்பு கடமைகளை ஏற்றுக் கொண்டு, அதற்கு உண்மையாக நடக்காமல், எதிராக செயல்பட உரிமை யில்லை. அது மட்டும் அல்ல, அவருக்கு வழங்கப்பட்ட அரசியலமைப்பு அதிகாரத்தை, அவர் சார்ந்த அமைப்பின் அல்லது கட்சியின் கொள்கை பரப்ப பயன்படுத்துவது அரசியலமைப்புச் சட்டத்திற்கு இழைக்கப்படும் துரோகமாகும் .

அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 17 “தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டது. மற்றும் அதன் செயற்பாடு எந்த வடிவில் இருந்தாலும் அது தடை செய்யப்பட்டுள்ளது. தீண்டாமை காரணமாக பாகுபடுத்தும் நடவடிக்கை எதுவும் குற்றச் செயலாகும். அது சட்டப்படி கடுமையான தண்டனைக்குரியதாகும்” எனக் கூறுகிறது.

இந்த நிலையில் ஆளுநர் ஆர்.என்.ரவி “சனாதனத்தை”

தொடர்ச்சி 5ம் பக்கம்



மு.வீரபாண்டியன்

# "சே" மகள் அலெய்டா குவேரா



**கியூபா புரட்சியாளர் சே அவர்களின் மகள் அலெய்டா குவேரா மற்றும் அலெய்டா மகள் எஸ்டோ பாளி சென்னை வருகை தந்தார்கள். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு அலுவலகம் பாலன் இல்லத்தில் பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது. தமிழ் கூறும் நல் உலகம் அவர்களை முழுமனதோடு வரவேற்றது என்பதில் தயக்கம் இல்லை.**

பொலிவிய புரட்சிக்கு செல்லும் முன் சிறுமியாக இருந்த அலெய்டாவுக்கு சே எழுதிய பிரசித்திப் பெற்ற கடிதம் அறிந்ததுதான். அலெய்டா சே மகள் என்பதோடு அவர் கியூபாவின் வாழ்நாள் மருத்துவ சேவையாளர். மருத்துவம் வருவாய்க்கானதல்ல, சேவைக்கானது என்பதை தனது தந்தை வழியில் கடைபிடிப்பவர். இவர் கியூபாவின் குடிமகள். கியூபா இந்தியாவின் உற்ற நண்பன்.

1959ல் புரட்சி வெற்றி அடைந்தது. பாடிஸ்டா ஆட்சி அகற்றப்பட்டது. பிடல் தலைமையிலான புரட்சி அரசை அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகள் அங்கீகரிக்க மறுத்தன. முதன் முதலில் நேரு தான், புரட்சியை வரவேற்றதோடு, கியூபாவை அங்கீகரிக்கவும் செய்தார்.

'சே' தொழில்துறை, வங்கி துறையின் அமைச்சராக பொறுப்பேற்றவுடன், எகிப்தின் நாசர், சீனாவின் சூ என்லாய், நமது நாட்டின் நேரு ஆகியோரை சந்தித்தார். இதில் நேருவின் சந்திப்புதான் தன்னை மிகவும் கவர்ந்ததாக அவர் கூறினார். நாம் சகோதரர்கள், நாம் சகோதர நாடு என இந்தியர்கள் அடிக்கடி உச்சரித்ததாக சே, பிடலிடம் பகிர்ந்து கொண்டார்.

இந்தியா, அக்டோபர் புரட்சியை வரவேற்றது. தனது நிலப்பரப்பின் அருகில் உள்ள சீன புரட்சியை ஆதரித்தது. தொலைதூர தீவு நாடான கியூபாவின் புரட்சியையும் அங்கீகரித்தது. இந்தியா போன்ற உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாட்டின் இச்செயல் வியப்பளிக்கிறதென உரையாடல்களில் வெளிப்படுத்தினர்.

ஐக்கிய நாடுகள் சபையில் கியூபா, எப்பொழுதும் இந்தியாவின் தீர்மானங்களை ஆதரித்தே வந்துள்ளது. அதே போல் கியூபாவின் மீதான அமெரிக்க பொருளாதார தடைகளை நீக்க இந்தியா எப்போதும் குரல் எழுப்பி வந்துள்ளது.

கியூபாவிடமிருந்து உலக நாடுகள் பெறுவதற்கான எத்தகைய பொருளாதார வளங்களும் இல்லை. அது முழுக்க முழுக்க இயற்கை சூழ் தீவு. எனினும், அதன் மருத்துவச் சாதனைகள், கல்விக்கான முயற்சிகளை உலகம் எளிதில் கடந்து செல்ல முடியாது.

ஆப்பிரிக்க நாடுகளை 'எபுலாக்' நோய் தாக்கிய போது அச்சமூட்டிய அத்தகைய கொடிய நோயை எதிர்கொள்ள, ஆப்பிரிக்க மக்களுக்கு உதவிட கியூபா தனது முழு பலத்தையும் பயன்படுத்தியது. வளர்ந்த நாடுகளின் உதவியைவிட கியூபாவின் மருத்துவ உதவிகள் அபாரம் என உலக சுகாதார நிறுவனம் பாராட்டியது நினைவில் கொள்ளத்தக்கது.

அதே போல நிகழ்கால கொரோனா நோய் தொற்றில் பல மேற்கு நாடுகளுக்கு, அவை தங்கள் மீது பொருளாதார தடை விதித்தவை என தெரிந்தும், அதனை மனதில் கொள்ளாமல், மருத்துவப் பணிகளுக்காக கியூபா மருத்துவக்குழு சென்று கடமை ஆற்றியதை உலகம் அறியும். இதனை 'மகத்தான மானுட நிகழ்வு' என அறிஞர்கள் பலரும் பாராட்டினர்.

இன்றைய உலகமய சூழலில் உலகம் கிராமமாக மாறிவிட்டதாக (குளோபல் வில்லேஜ்) முதலாளித்துவ சிந்தனையாளர்கள் கூறி வருகிறார்கள்.

இல்லை, ஒரே கிராமம் என்றால் அதில் ஏன் இவ்வளவு ஏற்றத்தாழ்வுகள். பணக்கார நாடுகளுக்கும் – ஏழை நாடுகளுக்குமான இடைவெளிக் குறித்து கியூபா எழுப்பும் கேள்விகள் நிகழ்கால அரசியல் உரையாடலுக்குரியவை.

கியூபாவின் ஜனநாயக சிந்தனைகளும் எளிதில் கடந்து செல்ல முடியாதவை. பிடல் அடிக்கடி கூறுவதுண்டு, மேலைய ஜனநாயகம் தன்னுள் புறவெளி ஆதிக்கத்தை கொண்டுள்ளது. பிரிட்டன் தனது சொந்த நாட்டில் ஜனநாயக பற்றுறுதியோடு திகழும். அதே நேரத்தில் புறவெளியில் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் மீது மேலாதிக்கம் நிறைந்திருக்கும்.

இதை விட இந்திய ஜனநாயகம் குறித்த பிடல் சிந்தனைகள் அபாராமானது, பலரும் அறியாதது.

உலகில் அமெரிக்க, ஐரோப்பிய ஜனநாயகம் குறித்து நாம் அதிகம் பேசுகிறோம். ஒப்பீட்டளவில் இந்திய ஜனநாயகத்திடம் தான் நாம் கற்க வேண்டியுள்ளது. கியூபா பிற நாடுகளிடமிருந்து ஜனநாயகத்தை கற்க வேண்டுமென்றால் நாங்கள் இந்தியாவையே தேர்ந்தெடுப்போம் என்றார் அவர். இத்தகைய பின்னணி கொண்ட நாட்டிலிருந்துதான் அலெய்டா நிறைய செய்திகளோடு இந்தியா வருகிறார்.

உலகம் முழுவதுமுள்ள உணவு பொருட்களை பாதுகாப்பது, அதனை வறிய நாடுகளுக்கு பகிர்ந்து கொடுப்பது எனும் கியூபாவின் மீட்புத் திட்டங்களை அவர் சுமந்து வருகிறார். உலகில் உள்ள அனைவருக்கும் உணவுப் பொருட்களை வழங்க முடியுமெனில் ஏன் பாதிக்கும் மேற்பட்ட மக்கள் பட்டினியால் வாடுகிறார்கள். ஊட்டச் சத்து குறைவால் மரணம் அடைகிறார்கள் என்ற கேள்விகளும் மீட்புதிட்டம் எழுப்புகிறது.

வரலாற்றில் என்றுமில்லாத நுட்பயுகத்தில் நாம் வாழ்கிறோம். இந்த நுட்பங்களில் சிறிது கூட பல ஏழை ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளுக்கு ஏன் கிட்டவில்லை. இப்படி கியூபா எழுப்பும் கேள்விகளோடு அலெய்டா சென்னை வருகிறார்.

# ஜனவரி 26ஐ அரசியலமைப்பு தினமாகவும், 30ஐ மதச்சார்பின்மை பாதுகாப்பு தினமாகவும் கடைபிடிக்க வேண்டும்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள்

**2023 ஜனவரி 26 ஆம் நாளை அரசியலமைப்பு தினமாகவும், ஜனவரி 30 ஆம் நாளை மதச்சார்பின்மை பாதுகாப்பு தினமாகவும் கடைபிடிக்க வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி. ராஜா அறைகூவல் விடுத்துள்ளார். இது குறித்து வெளி யிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:**

அன்பார்ந்த தோழர்களே,

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு கூட்டம் கடந்த டிசம்பர் மாதம் 3 மற்றும் 4 ஆகிய இரு நாட்கள் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நாட்டில் நிலவும் அரசியல் சூழ்நிலை குறித்து விவாதிக்கப்பட்டது. பா.ஜ.க ஆட்சிப் பொறுப்பேற்றதில் இருந்து, மதச்சார்பின்மை, ஜனநாயகம் மற்றும் தேசத்தின் அரசியலமைப்பின் மீதும் தாக்குதல் அதிகரித்து வருகிறது. நமது குடியரசைத் தகர்த்தெறிந்து, வரலாற்றைத் திரித்து எழுத முயன்று வரும் ஆர்.எஸ். எஸ் – பா.ஜ.க அணியின் மோசமான சூழ்ச்சியை முறியடித்திட வேண்டும் என்று கட்சி அணிகளுக்கு தேசிய நிர்வாகக் குழு அறைகூவல் விடுக்கிறது.

டாக்டர் அம்பேத்கரைத் தலைமைச் சிற்பியாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்திய அரசியலமைப்பானது, இந்திய அரசை ஒரு மதச்சார்பற்ற, கூட்டாட்சி முறையிலான, மக்கள்நல அரசாகவே வரையறுக்கிறது. மதத்தின் அடிப்படை யிலான ஒரு அரசை நிறுவிட, பிரி வினைவாத, மதவெறிபிடித்த பாசிச செயல்திட்டத்தைப் பின்பற்றி வரும் ஆர்.எஸ்.எஸ்–பா.ஜ.க அணி, இந்திய அரசியலமைப்பின் அடிப்படையான அம்சங்களை எல்லாம் தகர்த்தெறிந்திட அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

அரசியலமைப்பைப் பாதுகாத்திட, நமது கட்சி அணிகள் மக்களை அணுகி, மக்களிடம் ஒன்றுபட்டு, அவர்களை அணிதிரட்டி, அரசியல்படுத்த வேண்டும். 2023 ஜனவரி 26 அன்று நமது கட்சி அலுவலகங்களிலும், வாய்ப்புள்ள இதர இடங்களிலும், நமது கட்சி அணிகள் தேசியக் கொடியை ஏற்றிட வேண்டும். விடுதலைப் போராட்டத்திலும், இந்தியக் குடியரசை உருவமைப்பதிலும் நமது கட்சி ஆற்றிய மகத்தான பாத்திரத்தை எடுத்துரைக்கும் வண்ணம் பலவகை நிகழ்ச்சிகளைநமது கட்சி அணிகள் ஏற்பாடு செய்திட வேண்டும். அரசியலமைப்பின் முகவுரையை வாசித்து, உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சியையும் கட்சி அணிகள் மேற்கொள்ள வேண்டும்.

இந்து வெறியன் கோட்சேவால் காந்தியடிகள் படுகொலை செய்யப்பட்ட ஜனவரி 30 ஆம் நாள் அன்று ஒட்டுமொத்த தேசமும் அவருக்கு புகழஞ்சலி செலுத்தும். தேச விடுதலைப் போராட்டத்தில் அவரது மகத்தான பாத்திரம் மட்டுமின்றி, இந்து முஸ்லீம் ஒற்றுமை, மத நல்லிணக்கம் ஆகியவை அவர்தம் வாழ்வு விட்டுச் சென்றுள்ள மகத்தான செய்திகளாகும்.

வெறுப்புணர்வைப் பரப்பி, வகுப்புவாத சூழலை உருவாக்கி, முஸ்லீம்கள், தலித், பழங்குடி மக்கள் மற்றும் இதர சிறுபான்மை யினரின் உணர்வுகளில் அச்சவுணர்வு மற்றும் பாதுகாப்பின்மையை உண்டாக்கிட ஆர்.எஸ்.எஸ் – பா.ஜ.க அணி தீவிரமாக முயன்று வரும் இந்தச் சூழலில், ஜனவரி 30 ஆம் நாளை நமது கட்சி அணிகள் மதச்சார்பின்மை பாதுகாப்பு தினமாகக் கடைபிடிக்க வேண்டும்.

புரட்சிகர வாழ்த்துகள்!

இவ்வாறு கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா கூறியுள்ளார்.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 42

# ஆளுநரை அடுத்து, துணை ஜனாதிபதி ஆழம் பார்க்கிறார்!

அகில இந்திய சட்டப்பேரவை தலைவர்களின் 83வது மாநாட்டை குடியரசுத் துணைத்தலைவர் ஜெகதீப் தன்கர் ஜெய்ப்பூரில் ஜனவரி 11ல் தொடங்கிவைத்தார்.

1973இல் கேசவானந்த பாரதி வழக்கில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அரசியலமைப்புச் சட்டத்தை நாடாளுமன்றம் திருத்தலாம் ஆனால் அதன் அடிப்படைக் கட்டமைப்பை மாற்ற முடியாது என அந்த தீர்ப்பு கூறியது. அந்தத் தீர்ப்புடன் தான் முரண்படுவதாகவும், அது ஒரு தவறான முன்னுதாரணம் என்றும் அவரது பதவிக்கு பொருத்தமே இல்லாத ஒரு வாதத்தை அங்கு எழுப்பியுள்ளார்.

அதாவது நாடாளுமன்றம் நினைத்தால், அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை கட்டமைப்பை மாற்றி அமைக்கலாமாம்! நாடாளுமன்றம் தான் உயர் அதிகாரம் கொண்டது; அரசியலமைப்புச் சட்டம் அல்ல என்பது அவர் வாதம்.

ஆனால் அந்த நாடாளுமன்றமே, அரசியலமைப்பு சட்டத்தினால் உருவாக்கப்பட்ட ஜனநாயகத்துக்கான கருவிதான். அந்த பதவியில் அமர்ந்து கொண்டே, அரசியலமைப்புச் சட்டத்தை என் விருப்பத்திற்கு மாற்றுவேன் என்று கூறுவதுதான் தவறான முன் உதாரணம்.

ஒரு வழக்கறிஞரான அவர், அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையையே மாற்றியமைப்பதற்கு, நாடாளுமன்ற பெரும்பான்மையை தடையற்ற உரிமமாகப் பயன்படுத்துவது, ஜனநாயகத்தை எத்தகைய ஆபத்துக்கு உள்ளாக்கும் என்பதை அறிந்திருக்க வேண்டும். இந்திய மக்கள் தீரத்தோடு நடத்திய போராட்டத்தின் இறுதியில் கிடைத்த விடுதலைக்குப் பின், இந்தியா எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கான அடிப்படைக் கட்டமைப்பின் மீது அரசியலமைப்புச் சட்டம் எழுதப்பட்டது. அதன் அடிப்படை மாற்றப்பட்டு விட்டால் அது வெறும் செல்லாத நோட்டு ஆகிவிடும்.

அவசரநிலை காலத்தில் ஜனதா தளத்தில் இருந்து இந்திராகாந்தியை எதிர்த்தும், பிறகு காங்கிரஸ் கட்சியிலேயே சேர்ந்தும் தொடர்ந்து பதவிகளை அனுபவித்து வரும் இவர், இப்போது பாரதிய ஜனதா கட்சியில் இருக்கிறார்.

இருக்கிற இடத்துக்கு எப்போதும் நல்ல பிள்ளையாக இருக்கும் அவர், எப்படியாவது அரசியல் சட்டத்தை முற்றாக மாற்றி விட வேண்டும் என்ற இந்துத்துவக் கும்பலின் அடங்காத தாகத்தை, இவ்வாறு எல்லை தாண்டி முன்மொழிகிறார்.

குரங்கு, குட்டியை விட்டு ஆழம் பார்க்குமாம். தமிழ்நாடு என்ற பெயரே பிரிவினைக்கானது, எனவே தமிழகம் என்று சொல்ல வேண்டும் என ஆளுநர் மூலமாகச் சொல்ல வைத்து, தமிழ்நாட்டு மக்களின் செருப்படியாக அடி வாங்கிய பிறகு, தமக்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்பது போல் நடிக்கும் பாஜக, அரசியலமைப்புச் சட்டம் பற்றி குடியரசு துணைத் தலைவர் வாய் வழியாகப் பேசுகிறது. எப்படியாவது இதை விவாதத்துக்கு கொண்டு வந்து விட வேண்டும் என்பதே அதன் நோக்கம்.

ஆர்எஸ்எஸ்ஸின் கனவான இந்துராஷ்ட்ரத்திற்குத் தடையாக நிற்பது, இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படை கட்டமைப்பு தான். இன்றைக்கு இந்தியாவின் வலிமையான அரசு சாராத அமைப்பு ஆர்எஸ்எஸ் என்பதில் ஐயம் இருக்க முடியாது. அதன் தலைவர் மோகன் பகவத் அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றியே தீருவோம் என முழங்குகிறார்.

ஒரு மதத்திற்கு மற்ற மதத்தை விட முதன்மை இடம் தந்தால், சாதி, மதம், இனம், வட்டாரம், மொழி என்ற வேறுபாடின்றி அனைத்து குடிமக்களும் அரசால் சமமாக நடத்தப்படுவார்கள் என்று அரசியல் சாசனம் அளித்துள்ள உத்தரவாதம் முற்றிலுமாகத் தகர்த்தெறியப்படும்.


எனவே அரசியலமைப்புச் சட்டத்தை விட நாடாளுமன்றம் உயர்ந்தது என வைக்கப்படும் வாதத்தில், ஜனநாயகத்திற்கும் இந்திய நாட்டுக்கும் எவ்வளவு பெரிய ஆபத்து இருக்கிறது என்பதை ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டும். கொடூரன் ஹிட்லர் இதே போலப் பேசித்தான், தனது நாடாளுமன்ற பெரும்பான்மையைப் பயன்படுத்தி, ஜெர்மனி நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டத்தை ஒதுக்கி வைத்து, தன் நாட்டு மக்களுக்கும் உலகத்துக்குமே மாபாதகத் தீமை செய்தான் என்பதை வரலாறு சுட்டுகிறது

ஆர்எஸ்எஸ்பிஜேபி கூட்டணி, ஒரு மதவாத அரசை நிறுவுவதற்காக தனது பிளவுபடுத்துகிற, மதவெறி ஊட்டுகிற, ஒற்றைத் தன்மை கொண்ட பாசிச நிகழ்ச்சி நிரலைப் பின்பற்றுகிறது. அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படைகளைக் கலைத்து முடிக்க, துடியாய்த் துடிக்கிறது.

அரசியல் அமைப்புச் சட்டத்தை காக்க வேண்டியதன் அவசியத்தை மக்களிடம் எடுத்துச் சென்று விளக்குமாறும், அனைத்து இடங்களிலும் மூவண்ணக் கொடியை ஏற்றுமாறும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தனது கிளைகளைக் கேட்டுக் கொண்டுள்ளது. அதே நேரத்தில் இந்திய விடுதலைக்காக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய போராட்டங்களையும், செய்த அளப்பரிய தியாகங்களையும் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்றும் வழிகாட்டி இருக்கிறது.

நிறைவேற்றுவோம்!

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் மாற்றுக் கட்சியினர் இணைந்தனர்!



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சி மாநகர் மாவட்ட அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் எஸ்.சிவா தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாற்றுக் கட்சியைச் சேர்ந்த சி.மௌலானா, ஆர்.மாணிக்கம், எஸ்.ஜான் பாஷா, எம்.ஜெய்லானி, ரபிக், குலாம், கனகராஜ், சுப்பிரமணியன் உள்ளிட்ட 15 தோழர்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர்.

இவர்களை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் டி.எம்.மூர்த்தி, மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம், தேசிய கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் எம்.செல்வராஜ், ஏஐடியுசி மாநில தலைவர் காசிவிஸ்வநாதன் ஆகியோர் சால்வை அணிவித்து வரவேற்றனர். நிகழ்வுக்கு ஏ.ஐ.டி.யு.சி திருச்சி மாவட்ட செயலாளர் க.சுரேஷ், மேற்கு பகுதி செயலாளர் இரா.சுரேஷ் முத்துசாமி, மாணவர் பெருமன்ற தலைவர் க.இப்ராகிம் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய கிளைகள் துவக்க விழா

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி ஒன்றியம் கொத்தங்குளம், கோரங்கோட்டை, கீழவலசை ஆகிய கிராமப் பகுதிகளில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய கிளைகள் தொடக்க விழா நடைபெற்றது.

ஏஐடியூசி மாவட்ட பொதுசெயலாளர் என்.கே.ராஜன் கட்சியின் கொடியை ஏற்றினார். கட்சியின் மாவட்ட செயலாளர் என்.எஸ்.பெருமாள் சிறப்புரையாற்றினார்.

ஏஐடியூசி உள்ளாட்சித்துறை மாவட்ட செயலாளர் பா.சண்முகராஜன், திருப்புல்லாணி ஒன்றியசெயலாளர் எம்.சொக்கலிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

கோரங்கோட்டை கிளைச் செயலாளர் பக்ருதீன், கீழவலசைச் செயலாளர் மலைச்சாமி, கொத்தங்குளம் செயலாளர் ம ராஜீவ்காந்தி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் இராமநாதபுரம்



நகரச்செயலாளர் கே.களஞ்சியம், ஆர்.இராஜேந்திரன், மாவட்டக் குழு உறுப்பினர்தர்வேஸ்கான், பகுர்தின், தமிழ் உள்ளிட்ட ஏராளமானோர் கொண்டு, புதிய கிளை செங்கொடி ஏற்றும் நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடைபெற்றது.

# கராத்தே போட்டியில் வென்றவர்கள் இரா.நல்லகண்ணுவிடம் வாழ்த்து



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர், தகைசால் தமிழர் இரா. நல்லக்கண்ணு அவர்களை அவரது இல்லத்தில், இந்திய கலாச்சார நட்புறவு கழகம் சார்பில் மூத்த வழக்கறிஞர் க.தேசிங், மாவட்ட செயலாளர் பா.செந்தில்குமார், துணைத் தலைவர் ஏ.அருள்சுந்தர் ஆகியோர் சந்தித்தனர்.

மேலும் டிசம்பர் மாதம் 27 முதல் 29 தேதிகள் வரை வங்கதேச தலைநகர் தாகாவில் நடைபெற்ற சர்வதேச கராத்தே போட்டியில், ஆல் இண்டியா கராத்தேடு கோஷு ரியு அசோசியேஷன் தலைவரும், வேல்டு கராத்தே பெடரேஷன் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியாளருமான இஸ்கஃப் ஷிகான் மூ.சீனிவாசன் அவர்களால் பயிற்சி அளிக்கப்பட்டு தங்கம், வெள்ளி, வெண்கலம் என பதக்கங்கள் வென்று வந்த குழந்தைகளும்,

அசாம் மாநிலம் கௌகாத்தியில் சைக்கிளிங் பெடரேஷன் ஆஃப் இந்தியா நடத்திய சைக்கிளிங் ட்ராக் நேஷனல் சாம்பியன்ஷிப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற வேலம்மாள் மெட்ரிக்குலேசன் உயர்நிலைப் பள்ளியில் 9ஆம் வகுப்பு பயின்று வரும் ஜெய் ஜோத்ஸ்னாவும் வாழ்த்துகளைப் பெற்றனர்.

# கலசலிங்கம் கல்லூரிகளின் கழிவு நீர் கலந்து கிராமங்களின் குடிநீர் ஆதாரம் பாதிப்பு

## நடவடிக்கை கோரி விவசாயிகள் சங்கம் பெருந்திரள் ஆர்ப்பாட்டம்

விருதுநகர் மாவட்டம் கிருஷ்ணன் கோவிலில் கலசலிங்கம் பல்கலைக்கழகம் உள்ளது . இதில் பல்வேறு கல்லூரிகளில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் படிக்கின்றனர். தங்கும் விடுதியும் உள்ளது. செப்டிடேங்க் உள்ளிட்ட கழிவுகளை அருகிலுள்ள பாட்டக்குளம் கண்மாயில் ஒடைமூலம் திறந்து விடப்படுகிறது. இக்கண்மாயில் போர்வெல் மூலம் விழுப்பனூர், திருமலாபுரம் மற்றும் சொக்கலாம்பட்டி உள்ளிட்ட கிராமங்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. கலசலிங்கம் கழிவு நீரால் கண்மாய் நாற்றமெடுத்து சுகாதார சீர்கேடும் குடிநீர் வீச்சமெடுத்தும் உள்ளது. ஊராட்சி தலைவர்கள், ஊர் நாட்டாமை கலசலிங்கம் நிர்வாகத்திடம் நேரில் சொல்லியும் மாவட்ட நீர்வாகத்திற்கு மனு எழுதியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்டவில்லை. கலசலிங்கம் கல்லூரிகளின் கழிவு நீரை பாட்டகுளம் கண்மாயில் கலப்பதை தடுத்து நிறுத்த கோரி தமிழ்நாடு விவசாயிகள்




சங்கம் சார்பில் கிருஷ்ணன் கோவிலில் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடந்தது. தவிச வட்ட தலைவர் பாரதிதாசன், விழுப்பனூர் ஊராட்சி தலைவர் தமிழ்செல்வன் ஆகியோர் தலைமை வகித்தார்கள்.

பாட்டகுளம் நாட்டாமை பால்ச்சாமி, விழுப்பனூர் நாட்டாமை முத்துமுனி ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிபிஐ தேசிய கழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார், வி.பொன்னுபாண்டி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட நிர்வாககுழு உறுப்பினர் கோவிந்தன், தவிச மாவட்ட செயலாளர் சவுந்திரபாண்டியன், ஒன்றிய செயலாளர் பலவேசம், வட்ட விச ராஜேந்திரசோழன், வழக்கறிஞர் பால்ராஜ், வட்ட துணை செயலாளர் செல்வம் ஆகியோர் பேசினார்கள் . ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் உள்பட 200க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள்.

2 ம் பக்கத் தொடர்ச்சி

ஆதரித்து பேசி வருகிறார். சாதியப் பிளவுகளை நியாயப்படுத்தும் “சனாதனம்“ தான் நாட்டை ஒற்றுமைபடுத்தியது என கூச்சநாச்சமின்றி, அப்பட்டமாக பொய்யுரைத்து வருகிறார்.

இவை மட்டுமல்ல, அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு நேர் எதிரான முறையில் “உலகில் உள்ள ஒவ்வொரு நாடும் ஒரு மதத்தை சார்ந்த நாடாகத்தான் இருக்கிறது. அதுபோல் இந்தியாவும் ஒரு மதத்தை (இந்துத்துவா) சார்ந்த நாடு தான்” என்று பேசி வருகிறார்.

நமது அரசியல் அமைப்புச் சட்டம் “இந்தியா, மதச்சார்பற்ற ஜனநாயக சோசலிச குடியரசு” என்று அறிவித்துள்ள உயர்ந்த நோக்கத்தை ஆளுநர் தகர்த்து வருகிறார்.

ஒரு மாநிலத்தின் ஆளுநர் அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிராக, புறம்பாக பேசுவது அவர் எடுத்துக் கொண்ட, அரசு உறுதிமொழிக்கு எதிரானது அல்லவா?

சட்டமன்றம் நிறைவேற்றிய இருபதுக்கும் மேற்பட்ட சட்ட மசோதாக்களை எவ்வித முடிவும் எடுக்காமல் கிடப்பில் போட்டுள்ளார்.

ஆளுநர் மாளிகையில் முடங்கிக் கிடக்கும் மசோதாக்களில் “ஆன்லைன் சூதாட்டத்தை தடை செய்யும் மசோதாவும் ஒன்றாகும். இதற்கு ஒப்புதல் அளிக்க மறுத்து வருவது மட்டுமல்ல சூதாட்டத்தை தொடந்து நடத்திக் கொண்டு இருக்கின்ற, பலரின் உயிர்களை பலியாக்கும் குற்றச் செயலுக்கு காரணமானவர்களை ஆளுநர் மாளிகைக்கு அழைத்து, விருந்து கொடுத்து, ஆளுநர் கலந்தாலோசிப்பது குற்றவாளிகளை ஊக்கப்படுத்தும் செயல் அல்லவா?

அடுத்து, மருத்துவக் கல்வி சேர்க்கைக்கு ஒன்றிய அரசு அறிமுகப்படுத்தியுள்ள நுழைவுத் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளிக்கக் கோரும் சட்ட மசோதாவும் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

மாநில மக்களின் வாழ்க்கை முன்னேற்றம் கருதி நிறைவேற்றப்படும் மசோதாக்கள் அனைத்தையும் கிடப்பில் போடுவேன் என்று ஆளுநர் அடம் பிடித்தால், பின் சட்டப்பேரவை எதற்கு?

மாநிலத்தின் ஆளுநராக நியமனம் பெறுவர் அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 159 ன் படி பின்வரும் உறுதிமொழி அளித்து, பதவிப்பிரமாணம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என பணிக்கிறது.

“ஆகிய நான் இறைவன் பெயரில், உளமாற ஆணை உறுதிமொழி செய்து மாநிலத்தின் (மாநிலத்தின் பெயர்) ஆளுநராக உண்மையுடன் செயலாற்றுவேன். மற்றும் இந்த அரசியலமைப்பையும், சட்டத்தையும் காப்பதற்கும், நிலைநிறுத்துவதற்கும் என் திறமையைப் பயன்படுத்திப் பாடுபடுவேன். மற்றும் இந்த மாநிலத்தின் மக்களுக்காகவும் அவர்களுடைய நலன் கருதியும் பணியாற்றுவேன் என்று உறுதி எடுத்துக் கொள்கிறேன்” என்று உறுதியளிக்கக் கூறுகிறது.

இதன்படி உறுதிமொழியை எடுத்து, தமிழ்நாடு ஆளுநராக பொறுப்பேற்றுக் கொண்ட திரு.ஆர்.என்.ரவி, தான் ஏற்றுக் கொண்ட, உறுதிமொழிக்கு மாறாக, செயல்பட்டு வருகின்றார்.

ஆளுநர் ரவியின் அத்துமீறல் நடவடிக்கைக்கு, அவரை நியமனம் செய்த ஒன்றிய அரசு பொறுபேற்று, அவரை திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி போராடி வருகிறோம். நாம் அவசரப்பட்டு, ஏதேனும் ஒரு போராட்டத்தை நடத்த வேண்டும் என்ற குறுகிய நோக்கத்தில் போராடவில்லை

கம்யூனிஸ்டு கட்சியின் 25வது மாநில மாநாடு 2022 ஆகஸ்ட் 6 முதல் 9 வரை திருப்பூர் மாநகரில் நடைபெற்றது. இம்மாநாட்டின் நிறைவாக ஆகஸ்ட் 9 நடந்த மாபெரும் உழைக்கும் மக்கள் பேரணி “அத்துமீறி செயல்படும் ஆளுநரே, வெளியேறு” என்று முழங்கியது.

திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியைச் சேர்ந்த 49 நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆளுநர் பொறுப்புக்கு தகுதியற்றவர் என்பதற்கான ஆதாரங்களுடன வலியுறுத்தி குடியரசுத் தலைவருக்கு புகார் விண்ணப்பம் அளித்துள்ளனர்.

புகார் விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்ட குடியரசுத் தலைவரோ, ஆளுநர் பொறுப்புக்கு பரிந்துரைத்த ஒன்றிய அரசோ இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதன் காரணமாக மக்களை திரட்டி வீதியில் நின்று போராட வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து தான் கம்யூனிஸ்டு கட்சி முற்றுகை போராட்டத்தை முன்னெடுத்தது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி முன்வைத்துள்ள கோரிக்கை ஒரு கட்சிக்கு உரியதல்ல. மாறாக தமிழ்நாட்டு மக்களின் ஒட்டுமொத்த உணர்வை பிரதிபலிக்கும் கோரிக்கையாகும்

தமிழ்நாட்டு மக்களின் உணர்வை மதித்து பாஜக ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்ததா என்றால் இல்லை.

மாறாக முன்னைக் காட்டிலும் மூர்க்கத்தனமான முறையில் ஆளுநரின் செயல்பாடு அமைந்திட ஊக்கம் கொடுத்து வருகிறது.

தமிழ்நாடு சட்டப் பேரவையின் நடப்பாண்டின் (2023) முதல் கூட்டம் சனவரி 9ல் நடைபெற்றது. பேரவையில் ஆளுநர் நடந்து கொண்ட முறை கடுமையான விமர்சனத்திற்கும், கண்டனத்திற்கும் ஆளாகியுள்ளது.

ஆளுநர் உரை என்பது அவரது தனிப்பட்ட உணர்வை வெளிப்படுத்தும் உரை அல்ல. மாறாக, மக்களால் தேர்வு செய்யப்பட்ட அரசு தயாரித்து தரும் உரையாகும்.

இதில் அரசின் கொள்கைகளும், செயல்படுத்த உத்தேசித்துள்ள திட்டங்களும் உள்ளடங்கியிருக்கும் உரையாகும்.

ஆளுநர் சட்டப் பேரவையில் ஆற்றவேண்டிய உரையை அரசு தயார் செய்து, அமைச்சரவையின் ஒப்புதல் பெற்று, ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பப்படுகிறது. ஆளுநர் ஒப்புதல் அளித்த பின்னர், ஆளுநர் உரை நிகழ்த்தும் நாளில், அதிகாலையில் (அதாவது 09.01.2023 அதிகாலை 00.30 மணிக்கு), அச்சுக்கு அனுப்பி, அச்சிடப்பட்ட, புத்தகமாக அவையில் உறுப்பினர்களுக்கு ஆளுநர் உரையாற்றும் தருணத்தில் வழங்கப்படுகின்றது

அச்சடிக்கப்பட்ட உரையை ஆளுநர் அவையில் வாசிப்பதும், அவரது ஆங்கில உரையில் தமிழாக்கத்தை பேரவைத் தலைவர் வாசிப்பதும் மரபாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்த மரபு சார்ந்த வழக்க முறைக்கு மாறாக ஆளுநர், உரையின் சில பகுதிகளை தவிர்த்து விட்டு வாசித்தது அத்துமீறலாகும்.

ஆளுநர் தவிர்த்த வார்த்தைகள் அல்லது பகுதி என்பது மிக முக்கியமானவைகள், தமிழ்நாட்டின் தனித்தன்மை வாய்ந்தவைகளாகும். இதுபற்றி நாளேடுகள் விரிவாக வெளியிட்டுள்ளன. அவைகளை திரும்பவும் எடுத்துக் கூற வேண்டிய அவசியம் இல்லை.

ஆளுநர் அத்துமீறி உரையாற்றுவதை கவனித்த தமிழ்நாடு முதலமைச்சர், பேரவையில் எழுந்து, “அச்சிட்டு கொடுக்கப்பட்டுள்ளதைதான் அவை குறிப்பில் இடம் பெற வேண்டும் ஆளுநர் சில பகுதிகளை தவிர்த்து விட்டு படித்ததற்காக வருந்துகிறேன்” என்கிற தீர்மானத்தை முன்மொழிந்தார். இது ஒருமனதாக ஏற்கப்பட்டது.

பேரவையில் முதலமைச்சர் தீர்மானத்தை வாசித்துக் கொண்டிருந்த நிலையில் ஆளுநர் இருக்கையை விட்டு எழுந்து பெரும் ஓட்டமாக வெளியேறினார். ஆளுநர் உரை நிகழ்வின் நிறைவாக தேசிய கீதம் இசைக்கப்படும் முன்னதாக வெளியேறிய ஆளுநர் தேசிய கீதத்தை, தேசத்தை அவமதித்துள்ளார்

ஆளுநர் பேரவையில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை அறியாதவர் அல்ல. அந்த நடைமுறையை நன்கு அறிந்தவரே!

மாநில ஆட்சி எல்லைக்குள் வம்பிழுத்து நுழையும் ஆளுநரின் அத்துமீறலை தமிழ்நாட்டின் ஜனநாயக சக்திகள் ஒரே குரலில் கண்டித்து வருகிறது.

ஆனால், ஆளுநரின் அத்துமீறலை திமுகவிற்கும், ஆளுனருக்கும் இடையிலான மோதலாக, முதல்வருக்கும், ஆளுநருக்கும் இடையிலான மோதலாக திசை திருப்ப முயல்கிறார்கள் .

ஆளுநரின் அத்துமீறல் கட்சிக்குரிய பிரச்சினையோ, முதலமைச்சருக்கு உரிய பிரச்சினை அல்ல.

ஆளுநரின் அத்துமீறல் நடவடிக்கை திட்டமிட்ட செயலாகும். இதன் பின்னணியில் ஒன்றிய அரசின் கை இயங்குவதை அனைவரும் அறிவர்.

இது அரசியல் மோதல் மட்டும் அல்ல; ஆயிரமாண்டுகளாக தொடர்ந்து வரும் தத்துவ யுத்தமாகும்.

திருவாளர் மோடி தலைமையிலான பாஜக ஒன்றிய அரசு தனது இந்துத்துவாக் கொள்கையில் செயப்படுகிறது.

தங்கள் குரு பீடத்தின் உத்தரவுப்படி (ஆர்.எஸ்.எஸ்) அதன் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

இன்றைய அரசியலமைப்புச் சட்டத்தை அவர்கள் ஏற்கவில்லை. அதன் அடிப்படைப் பண்பாக அமைந்துள்ள மதச்சார்பின்மை கொள்கையை அவர்கள் ஏற்கவில்லை.

அனைத்து மொழிகளுக்கும் சமவாய்ப்பு என்பதனை அவர்கள் ஏற்க தயாராக இல்லை.

பல மாநிலங்களைக் கொண்ட ஒன்றியம் இந்திய நாடு என்பதனையும் அவர்கள் ஏற்க தயாராக இல்லை.

அவர்களின் சித்தாந்தம் மனுதர்மம் அதனை அமுல்படுத்திட அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றார்கள். அதனை நிறைவேற்ற தனக்குள்ள ஆட்சி அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்தி வருகின்றார்கள்.

அதன் ஒரு பகுதியே ஆளுநர் ரவியின் அத்துமீறல் நடவடிக்கையாகும்.

மக்களால் நிராகரிக்கப்பட்ட, நிராகரிக்கப்பட வேண்டிய பத்தாம் பசலித்தனமான மிக பிற்போக்குத்தனமான, பகுத்தறிவுள்ள எந்த ஒரு மனிதராலும் ஏற்க இயலாத, ஒரு தத்துவத்தை வலுக்கட்டாயமாக திணிக்க முயல்கின்ற சனாதான கும்பல் தொடங்கி நடத்தும் போரை முடிவிற்கு கொண்டு வரவேண்டும்.

மதத்தை, சாதியை, கடவுளை, மொழியை பயன்படுத்தி வெறித்தனத்தை உருவாக்கி மக்களை பிளவுபடுத்தி அரசியல் ஆதாயம் தேடும் மலிவான அரசியலுக்கு முடிவு கட்ட தீவிரமாகி வரும் போராட்டம் தொடரட்டும். இந்தப் போர் இடைவிடாது தொடரட்டும். தத்துவப்போர் வெல்வதற்கரிய தத்துவத்தின் முன்னால் தவிடு பொடியாகும். வெற்றி முழக்கம் செய்து போரை தொடர்வோம் இறுதி வெற்றி நமதே....

மீண்டும் சந்திப்போம்.

வணக்கம்.

தோழமைமிக்க,



(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

# என் தந்தையைக் காட்டிய ஜீவா



**நள்ளிரவில் பழைய சாதம்**

1948 ஆம் ஆண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டிருந்த காலம். கம்யூனிஸ்டுகளும் மனிதர்கள்தான் என்பதை மறந்து அவர்களை நர வேட்டையாட வேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. கம்யூனிஸ்டுகளை கண்ட இடத்தில் கைது செய்ய வேண்டும். தப்பமுயன்றால்சுட்டுவிட வேண்டும்என்கிற அரசாங்க ஆணை அமலில் இருந்த காலம். அந்த ஆணையில் கையொப்பமிட்டிருந்த டாக்டர்.சுப்பராயனின் புதல்வர், புதல்வி கம்யூனிஸ்டுகள் என்பதும் அன்றைக்கு நாடறிந்த செய்தியாகும்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் அப்பொழுது ஒரு நாள் நள்ளிரவு நேரம். அன்று அமாவாசை நட்சத்திரங்களுக்கு வழிவிட்டு சந்திரன் ஒய்வெடுத்துக் கொண்ட இரவு அது. சென்னை தியாகராய நகரில் முத்துகிருஷ்ணன் தெருவில் ஒரு பழைய வீட்டில் ஒடு வேய்ந்த மேல்மாடியில் ஓர் இளைஞனும் அவன் மனைவியும் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

அந்த இளைஞன் அரசியல் வாடை உள்ளவன்தான். அவன் காங்கிரஸ்காரன். கம்யூனிஸ்டுகளை நர வேட்டை ஆட வேண்டும் என்கிற சட்டம் அமலில் இருக்கும் காலத்தில் கம்யூனிஸ்டுகளின் பக்கம் தலைவைத்துப் படுப்பானா அந்த இளைஞன்? அண்ணன், தம்பி ஆனாலும் அவரவரைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற நிலைமை தோன்றிவிட்ட நேரமல்லவா? இதில் பந்தம், பாசம், சொந்தம், நட்பு என்பதெல்லாம் இரண்டாம் பட்சம் ஆகி விட்ட நிலைமை.

நள்ளிரவில் யாரோ கதவைத் தட்டும் ஓசை கேட்டு அந்த இளைஞனின் மனைவி எழுந்தாள். "யாரோ கதவைத் தட்டுகிறார்கள் என்று மனைவி கணவனை எழுப்புகிறாள். அவன் "என்ன?"என்று உளறுகிறான். "யாரோ கதவை தட்டுகிறார்கள் என்கிறாள். "யாருஇப்போ?" என்று அவன் சிணுங்குகிறான். அதோ கேளுங்கள் என்றாள் மனைவி.

குரல் கேட்டது ஏ.... தம்பி அது ஒரு வெண்கலக்குரல். அந்த "ஏ" என்பதில் ஓர் அர்த்தம் இருந்தது. சடாரென்று எழுந்தான். யாரது? என்று குரல் கொடுத்தான்.

"தம்பி! நான்தான் கதவைத் திற இளைஞன் ஓடினான். கதவை திறந்தான். அது ஓர் ஓட்டைக் கதவு. அவன் திறந்த வேகத்தில் அது மேலும் உடைந்தது.

குறுகிய இடுக்கு முடுக்கான மாடிப்படியின் முகட்டிலே அடர்ந்த இருட்டோடு இருட்டாய், கதவை ஒட்டி அங்கே ஓர் உருவம் நின்றது. வெண்பல் மட்டுமே பளிச்சென்று ஒளிர்ந்தது. வேறு எவரும் அக்காட்சியைப் பார்த்தால் அலறி இருப்பார்கள். ஆனால் இளைஞன். அண்ணா என்றான்.

**கத்தாதே தம்பி**
**இல்லை அண்ணா**

உருவம் உள்ளே நுழைந்தது. இளைஞன் அந்த கையைப் பற்றிக் கொண்டான். அதுதான் ஜீவானந்தம். கம்யூனிஸ்ட் தலைவர். போலீஸார் கண்ணில் பட்டால் சுடுபட இருந்தார் ஜீவானந்தம்.

தம்பி. என்ன திகைக்கிறாய்? அடே, இவள் தான் உன் மனைவியா? வணக்கம் தாயே..... பயப்பட மாட்டாளே. இது தான் உன் வீடு என்று யாரோ சொன்னார்கள். நுழைந்துவிட்டேன். ரொம்ப நாளாச்சு பார்த்து பசிக்கிறதப்பா. சாதம் இருக்கா?

அவர் வாயிலிருந்து வார்த்தைகள் குற்றாலத்து அருவி போல வந்தன. இளைஞன் கண்களிலும் ஓர் அருவி தோன்றியது.

அப்போது இரவு 1.30 மணி. இளைஞனும் அவனுடைய இளம் மனைவியும் இலை தேடுவதிலும் தண்ணீர் ஊற்றிய பழைய சாதத்தைப் பிழிவதிலும் ஈடுபட்டார்கள். அந்த அழகை ஜீவா ரசித்துக் கொண்டிருந்தார். அவருடைய முகம் முழு மலர்ச்சியில் பொலிந்தது. அந்த இளைஞன் காங்கிரஸ் காரன். ஜீவா கம்யூனிஸ்ட். மேற்கண்ட சம்பவத்தை நினைவு கூர்ந்தவர் தூக்கு மேடை ராஜகோபாலன்.

**தேடி வந்த மகள்**

1963ஆம் ஆண்டு ஒருநாள் ஜனசக்தி அலுவலகத்தில் ஜீவா மும்முரமாக எழுத்துப் பணியில் ஈடுபட்டிருந்தார். அப்பொழுது இளம்பெண்கள் இருவர் தயங்கித் தயங்கி ஜீவாவின் அறைப்பக்கம் வந்து நின்றனர்.

ஜீவா இருக்கிறாரா? என்று ஒரு பெண் மெதுவாகக் கேட்டாள். உடனே இருவரும் ஜீவாவின் அறைக்குள் அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் இருவரும் ஜீவா முன் சென்று அமர்ந்தனர்.

ஜீவா இயல்பான பரிவுக் குரலுடன் என்னம்மா வேண்டும் என்று கேட்டார். உங்களைத்தான் பார்க்க வந்தோம். என்று ஒரு பெண் கூறினாள்.

நீ யாரம்மா? என்று இருவரில் பேசாமல் இருந்த பெண்ணைப் பார்த்துக் கேட்டார் ஜீவா. அந்தப் பெண் பதில் சொல்லவில்லை.

ஏற்கனவே பேசிய பெண் நாங்கள் ஆசிரியர் பயிற்சி முடித்த மாணவிகள் என்றாள். மீண்டும் ஜீவா பேசாமல் தன்னையே பார்த்துக் கொண்டிருந்த இளம் பெண்ணைப் பார்த்து நீ யாரம்மா? என்று கேட்டார்.

**அப்பெண்ணின் கண்கள் கலங்கின. ஒரு துண்டுக் காகிதத்தை அப்பெண் ஜீவாவிடம் நீட்டினாள். அதில் என் தாத்தாவின் பெயர் குலசேகர தாஸ். எனது அன்னையின் பெயர் கண்ணம்மா. உங்கள் மகள் நான் என்று எழுதி இருந்தது.**

அந்த வாக்கியங்களை வாசித்த ஜீவா என்ன சொல்வது என்று தெரியாமல் திகைத்தார். ஆனால் உடனடியாக அந்த துண்டு காகிதத்தில் இறுதியில் என் மகள் என்று எழுதி அந்த இளம்பெண்ணிடம் நீட்டினார்.

அந்தவார்த்தைகளைக்கண்கொட்டாமல் அந்தப் பெண் உணர்ச்சிகரமாக பார்த்துக் கொண்டிருந்தார். எழுதிய துண்டுக் காகிதத்தை ஜீவா திரும்பக் கேட்டார். அப்பெண் அதைக் கொடுக்கவில்லை.

என் மகள் என்று சொல்வதற்குக் கூச்சப்பட்டுத்தானே தலையைச் சுற்றி மூக்கைத் தொடுகிறாய் என்று ஜீவா மனம் திறந்து கேட்டு விட்டார். அப்பெண் சிரிப்பினால் பதில் சொன்னாள்.

பிறந்தது முதல் 17 ஆண்டுக்காலம் தந்தை ஜீவாவைக் கண்டிராமல் இப்பொழுது துண்டுக் காகிதம் கொடுத்து அறிமுகம் செய்து கொள்ளும் அந்தப் பெண்ணின் பெயர் குமுதா. ஜீவாவின் முதல் துணைவியார் கண்ணம்மாவின் ஒரே பெண்.

கண்ணம்மாவின் தகப்பனார் பெயர் குலசேகர தாஸ். கடலூரில் இருந்து சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் ஹரி ஜன வகுப்பு எம்.எல்.ஏ.

குமுதாவைப் பெற்றெடுத்த சில நாட்களில்கண்ணம்மாகண்களைமூடினார். குமுதா அதன் பிறகு தாய்மாமன் வீட்டில் வளர்ந்து வந்தார். அவர்களையே பெற்றோர் என எண்ணி குமுதா வளர்ந்து வந்தார். அந்த குமுதா தனது 17 ஆண்டுக்கால வாழ்க்கையை தந்தையிடம் சொல்ல, ஜீவா தனது 17 ஆண்டுக்கால வரலாற்றை எடுத்துக் கூறினார். நாடு கடத்தப்பட்டது. சிறை வாழ்வு, இத்தனை ஆண்டுகளாக குமுதாவைப் பார்க்க முடியாமல் போனது. ஆகிய விவரங்களையெல்லாம் கூறினார்.

என் பிறவிப் பயனை இப்பொழுதுதான் அனுபவிக்கிறேன் கண்ணா. என்று மகிழ்ந்து போய்க் கூறிய ஜீவா, ஏண்டி உன் அப்பன் இறக்கும் வரை உடனிருந்து பணிசெய்வாயா? என்று உருக்கமாகக் கேட்டார்.

குமுதா உணர்ச்சிகரமாகத் தலையசைத்தார். நாளைக்கே பிணக்கம், சுணக்கம் என்று உன் மாமன் வீட்டிற்கே போய் விடுவாய். எங்கே சத்தியம் செய் பார்ப்போம் என்று நம்ப மறுத்த மனத்தினராய் ஜீவா கேட்டார்.

குமுதா ஜீவாவின் தலையில் அடித்து சத்தியம் செய்தார். உள்ளம் குளிர்ந்து போனார் ஜீவா. குமுதாவை அழைத்துக் கொண்டு ஜீவா தாம்பரத்தில் உள்ள தனது வீட்டுக்கு வந்தார்.

**என் தந்தையைக் காட்டிய ஜீவா**

1946 ஆம் ஆண்டு வாக்கில் நாகர்கோவிலில் பாரதி விழா நடைபெற்றது. அந்த விழாவில் பாரதியின் மகள் சகுந்தலா பாரதி கலந்து கொண்டு உலகத்து நாயகியே எங்கள் முத்துமாரி, எங்கள் முத்துமாரி என்ற பாரதியின் பாட்டு முழுவதையும் விழாத் தொடக்கத்தில் கடவுள் வணக்கப் பாடலாகப் பாடினார்.

அன்று தேசம் வேறு தெய்வம் வேறு அல்ல என்றும், தனது தந்தை அப்படித்தான் கற்றுக் கொடுத்தார் என்றும் கூறிய சகுந்தலா பாரதி. அந்த முறையில் விழாவிலும் பேசினார். பின்னர் அந்த விழாவில் ஜீவா என்ன செய்தார் என்பதை சகுந்தலாபாரதி வாயிலாகவே காண்போம்.


சற்று நேரத்தில் ஜீவா பேசினார். ஜீவாவின் பேச்சை முதன் முதலாக நான் கேட்டது அப்போதுதான். என் தந்தையைப் பற்றி அவர் புதுப்புது விதமாக, புதுப்புது வண்ணங்களாகப் பேசினார். அவரது பேச்சு என்னை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்திற்று. உணர்ச்சி ஆவேசத்தோடு ஜீவா பேசியபோது என் அப்பாவை நான் நேரில் பார்த்தது போலவே ஆகிவிட்டது. அன்று முதல் எனக்கு வாய்ப்பு கிடைத்தபோதெல்லாம் ஜீவா பேசும் கூட்டத்துக்குப் போவேன். பாரதி விழா என்றால் அதில் ஜீவா பேசுகிறார் என்றால் எவ்வளவு தூரமாக இருந்தாலும், வேலைகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு அக்கூட்டங்களுக்குச் செல்வேன்.

(எம்.ஏ.பழனியப்பன் எழுதிய ஜீவா வாழ்வில் 100 சம்பவங்கள் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை நூலிலிருந்து)

தொகுப்பு: ரவிவர்மா

# இளைஞர்பெருமன்ற தென்மண்டல பொறுப்பாளர்கள் கூட்டம்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் விருதுநகர் அலுவலகத்தில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற தென் மண்டல பொறுப்பாளர்கள் கூட்டம் நடைபெற்றது. மாநில துணைத்தலைவர் செந்தில்குமார் தலைமை வகித்தார். சிபிஐ மாநில துணைசெயலாளர் என்.பெரியசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ கலந்து கொண்டு நடைபயணத்தின் முக்கியத்துவத்தை விளக்கி பேசினார். இளைஞர் பெருமன்ற மாநில செயலாளர் பாரதி மாநில குழு முடிவுகளை விளக்கி பேசினார். சிபிஐ தேசியகுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ., மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ்.எம்.பி. ஆகியோர் பேசினர். எங்கே எனது வேலை? என கேட்டு மார்ச் 3ல் கன்னியாகுரியிலிருந்து புறப்பட்டு திருநெல்வேலி, தென்காசி , தூத்துக்குடி, விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம், மதுரை, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் நடை பயணமாக சென்று 20ல்திருச்சியில் மற்ற 3குழுக்களுடன் சங்கமிப்பது என முடிவு செய்யப்பட்டது.



1 ம் பக்கத் தொடர்ச்சி

மாதிரி தலைவரை விமர்சனம் செய்து பேச தலைவர் அனுமதிப்பாரா? தலைவர்கள் அனுமதித்தாலும் தொண்டர்கள் அனுமதிக்க மாட்டார்கள். நாலு பேர் சேர்ந்து கொண்டு தாக்க ஆரம்பித்து விடுவார்கள்.

பெரியாரை விட்டு விலகிய பலரையும் தந்தை பெரியார் விமர்சனம் செய்திருக்கிறார். ஆனால் திருத்துறைப்பூண்டியில் ஜீவா விலகிய போது பெரியார், அருமைத் தோழர் ஜீவா மிகக் கடுமையான உழைப்பாளி, அவருக்குரிய வேலையை நம்மால் கொடுக்க முடியவில்லை, ஆகவே அவர் செல்லுகிற இடம்தான் சிறந்த இடம், செல்லட்டும் வாழ்த்துகிறேன் என்று வாழ்த்தி அனுப்பினார். இப்படி ஏராளமான சம்பவங்கள் உண்டு.

திருத்துறைப்பூண்டி அருகில் உள்ள பாண்டி என்கிற கிராமத்தில் திருமணம் ஒன்று நடைபெற்றது. மூத்தவர் பெயர் பாண்டியன் இளையவர் பெயர் சுரேஷ். இருவருக்கும் ஒரே நாளில் திருமணம். மூத்தவர் பாண்டியன் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். அவருடைய தம்பி சுரேஷ் தி.மு.க.வை சேர்ந்தவர். இரண்டு பேருக்கும் ஒரே இடத்தில் திருமணம். மூத்தவருக்கு ஜீவாவின் தலைமையில் திருமணம். இளையவருக்கு கலைஞரின் தலைமையில் திருமணம். இரண்டு தலைவர்களும் திருமணத்திற்கு வந்திருந்தனர். நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் முதலில் பாண்டியனுக்கு ஜீவா திருமணத்தை நடத்தி வைப்பார், அடுத்து சுரேஷ்க்கு கலைஞர் திருமணத்தை நடத்தி வைப்பார் என்று சொன்னபோது, உடனடியாக மைக்கை பிடித்த கலைஞர் இரண்டு திருமணங்களையும் அண்ணன் ஜீவாவே நடத்தி வைப்பார் என்று கூறினார். இப்படியெல்லாம் சில சம்பவங்கள் நடைபெற்றது உண்டு.

ஒரு மிகச்சிறந்த முன்னுதாரணமான தலைவர் ஜீவா. தமிழ்நாட்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கிய மாபெரும் தலைவர்களில் ஒருவர். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தை தொடங்கி இன்று ஆல் போல் தழைத்து இருக்கிறது. தாமரை பத்திரிகையை தொடங்கியவரும் அவர்தான். ஜனசக்தியை தொடங்கி அதற்கு ஆசிரியாராக இருந்து பணியாற்றியதும் அவர்தான். பொதுவுடைமைச் சமுதாயம் காண்பதற்கு அனைத்து முயற்சிகளையும் செய்து தனது வாழ்நாள் முழுவதும், அர்ப்பணித்துக் கொண்ட ஒரு மாபெரும் தலைவருடைய 60ஆம் ஆண்டு நினைவு தினத்தில் நாம் மலர் அஞ்சலி செலுத்துவது பெயருக்கு அல்ல. அவர் ஏற்றுக் கொண்ட லட்சியத்தை வெற்றிபெறச் செய்வதற்கு. நமது வாழ்நாள் முழுவதும் நம்மை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்று உங்கள் அனைவரையும் மிகுந்த அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு பேசினார்.

## தமிழ்நாடு முழுவதும் அஞ்சலி

**விருதுநகர்:** விருதுநகர் மாவட்டத்தில் இலக்கிய பேராசான் ஜீவாவின் நினைவு நாளில் மாவட்டம் முழுவதும் அவரது படத்திற்கு மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தப்பட்டது. வத்திராயிருப்பில் தேசீயகுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, வட்ட செயலாளர் கோவிந்தன், நகர செயலாளர் காளிராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். சேத்தூரில் மாவட்ட செயலாளர் பி.லிங்கம், ஒன்றிய செயலாளர் கணேசமூர்த்தி, நகர செயலாளர் ராஜா, ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் பகத்சிங் உள்பட பலர் கலந்து கொண்டனர். ஸ்ரீ வில்லிபுத்தூரில் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் பொன்னுபாண்டியன் எக்ஸ்.எம்.எல்.ஏ., நகர செயலாளர் மூர்த்தி உள்ளிட்டோரும், இராஜபாளையத்தில் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் வி.இரவி, நகர செயலாளர் விஜயன் உள்ளிட்டோரும், திருச்சுழியில் வட்ட செயலாளர் செல்வம் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் தனுஷ்கோடி அரங்கில் தமிழ்நாடு கலை இவக்கியப் பெருமன்றம் சார்பில், இலக்கிய பேராசான் ஜீவா நினைவு நாளில் மலரஞ்




சலி செலுத்தப்பட்டது. ராமசுப்பிரமணியம் தலைமை வகித்தார். சிபிஐ மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார் ஜீவா படத்திற்கு மாலை அணிவித்து மலரஞ்சலி செய்தார். மாநில பொதுச் செயலாளர் மருத்துவர் த.அறம் ஜீவா குறித்து சிறபபுரையாற்றினார். கவிஞர்கள் சாமிநாதன், கணேசன் ஜீவா பாடல்களை பாடினர். மாவட்ட செயலாளர் நவநீதகிருஷ்ணன், பொருளாளர் முத்துகுமாரசாமி ஆகியோர் பேசினர்.

**திருத்துறைப்பூண்டி:** திருத்துறைப்பூண்டியில் காமராசர் சிலை அருகில் பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக ஜீவாவின் உருவப்படம் வைக்கப்பட்டது. தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற பொறுப்பாளர்கள் ஆர். ஏகாம்பரம், ராஜேந்திரன், தாஜுதீன் ஆகியோர் நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்திருந்தனர். கோ.பழனிசாமி எக்ஸ்.எம். எல்.ஏ., கே.உலகநாதன் எக்ஸ்.எம். எல்.ஏ., அ.பாஸ்கர் ஊ. ஒ.பெருந்தலைவர் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு ஜீவாவுக்கு அஞ்சலி செலுத்தினர்.

**கோவை:** அமரர் ஜீவாவின் 60 ம் ஆண்டு நினைவு தினம் கோவை ஜீவா இல்லத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில பொருளாளர் எம். ஆறுமுகம் ஜீவா சிலைக்கு மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினார்.

அஞ்சலி மற்றும் கருத்தரங்கம் நிகழ்ச்சிகளுக்கு ஜே. ஜேம்ஸ் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் சி. சிவசாமி, மாவட்ட துணை செயலாளர் மௌ. குணசேகர், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் கே. எம். செல்வராஜ், வி.ஆர். பாண்டியன், இந்திய கலாச்சார நட்புறவுக் கழகத்தின் மாநில பொதுச் செயலாளர் எஸ். ராதாகிருஷ்ணன், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநில பொருளாளர் கே. சுப்பிரமணியன், தமிழ்நாடு கலை இலக்கிய மன்றத்தின் கோவை மாவட்ட செயலாளர் ப.பா. ரமணி, எம்.வி. ராஜன், கோட்டியப்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு ஜீவா சிலைக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

மாவட்ட துணை செயலாளர் எம். குணசேகர் வரவேற்புரை நிகழ்த்தினார். மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் பி. மௌனசாமி ஜீவாவின் காலுக்கு செருப்பும் இல்லை என்ற பாடலை பாடினார். மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் கே. ரவீந்திரன், சாந்தி சந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**தஞ்சாவூர்:** பேராசான் ஜீவாவின் நினைவு நாள் நிகழ்ச்சி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தஞ்சாவூர் மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது. நிகழ்விற்கு மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் வெ.சேவையா தலைமை வகித்தார். மாநகர செயலாளர் ஆர்.பிரபாகர் முன்னிலை வகித்தார். கட்சியின் மூத்த தலைவர் ஜி.கிருஷ்ணன், மாவட்ட பொருளாளர் என். பாலசுப்பிரமணியன், ஒன்றிய செயலாளர் ஜி.ஜார்ஜ்துரை, ஏ ஐ டி யூ சி மாவட்ட துணை செயலாளர் துரை. மதிவாணன், மாவட்ட குழு உறுப்பினர் எஸ்.தியாகராஜன், அலுவலக செயலாளர் சுதா, மற்றும் ஆசிரியர் சுந்தரமூர்த்தி (ஓய்வு), ஆறுமுகம், பீர்முகமது ஆகியோர் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

**அரியலூர்:** அரியலூரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் ஜீவாவின் திருவுருவப் படத்திற்கு மாலை வித்து புகழஞ்சலி கூட்டம் நடைபெற்றது. ஏஐடியூசி மாவட்டப் பொதுச் செயலாளர் த.தண்டபாணி, அரியலூர் நகரகிளை ந.கோவிந்தசாமி, தெரு வியாபாரம் சி. பன்னீர்செல்லம், முகமது யூசுப், தனபால், வால்பாறை மாணிக்கம், நகராட்சி கிருஷ்ணம்மாள், மகளிர் சுய உதவிக் குழு பெ.அஞ்சலை, கு.வெள்ளையம்மாள், ரா. தனலட்சுமி, கு.விக்னேஷ், அ. கி. துரை உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**சேலம்:** சேலம் மாவட்டம் சேலம் மாநகரம் சூரமங்கலம் மண்டலம் இரண்டாவது டிவிசன் ஜாகீர் அம்மாபாளையத்தில் ப.ஜீவா 60 ஆம் ஆண்டு நினைவு தினத்தன்று ஜாகீர் அம்மாபாளையம் கிளைச் செயலாளர் இன்ஜினியர் பி. விஜயபாஸ்கர் தலைமையில் கட்சியின் கொடியினை ப. தங்கமணி ஏற்றினார்.

பின்னர் சேலம் மாவட்ட செயலாளர் ஏ.மோகன் ப.ஜீவானந்தம் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மாவட்ட செயலாளர் கே.வி.ராஜேந்திரன், இஸ்கப் மாவட்ட கவுரவ தலைவர் கே. சுவாமிநாதன், கட்சியின் மாநில குழு உறுப்பினர் இன்ஜினியர் எம்.ராமன், மாவட்டத் துணைச் செயலாளர் ஏ.கந்தன், ஏஐடியுசி தேசியக் குழு உறுப்பினர் எம்.முனுசாமி, விவசாய சங்க மாவட்ட செயலாளர் என்.கே.செல்வராஜ், ஏ.ஐ.ஓய்.எப் மாவட்ட செயலாளர் இரா.ரமேஷ், ஏ.ஐ.எஸ். எப். மாவட்டச் செயலாளர் பா.தினேஷ் இஸ்கப் மாவட்ட பொது செயலாளர் டி.வி. கருணைதாஸ், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் மாவட்டச் செயலாளர் ஜெ. கணியன் பூங்குன்றன் மற்றும் ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டு நினைவஞ்சலி செலுத்தினர்.

**குமரி:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி குமரி மாவட்ட செயலாளர் தா.சுபாஷ்சந்திரபோஸ் தலைமையில் அண்ணா விளையாட்டு அரங்கம் முன்பு உள்ள ஜீவாவின் முழு உருவ சிலைக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். குமரிமாவட்ட சிறு பிரசுர வெளியீடாக தமிழ்நாடு பொதுவுடமை இயக்கு முகவரி தோழர் ஜீவா என்கின்ற பிரசுரத்தை வடக்கு தாமரைக்குளம் முன்னாள் பஞ் சாயத்து தலைவர் வி.அருணாசலம் வெளியிட தோழர்கள் எஸ்.சுந்தரம், எஸ்.கே. கங்கா, ந.நாகராஜன், வி.அருள்குமார், மஞ்சாலுமூடு மரியதாஸ், செல்வராணி, சுரேஷ், நாகர்கோவில் மாநகரப் செயலாளர் ஆர்.இசக்கிமுத்து, அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாவட்ட தலைவர் கிருஷ்ணகுமார் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

நிகழ்வில் வெள்ளிமலை பேரூராட்சி உறுப்பினர் சுதா மதன், ஆரல் செல்வராஜ், சுப்பிரமணியம், குருசாமி, மாநகரபொருளாளர் கே.நாகராஜ் உட்பட 50க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து சிறப்பித்தனர். மாநகர செயலாளர் ஆர்.இசக்கிமுத்து தலைமையில் மாவட்டக்குழு உறுப்பினர் அருள்குமார், கே.நாகராஜன் ஆகியோர் கொண்ட பிரச்சார குழு ஜீவா நினைவு வாகனபிரச்சாரம் மூலம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைப் பிரச்சாரத்தை மேற்கொண்டனர்.

**திருச்சி மாநகர்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி திருச்சி மாநகர் மாவட்ட குழு சார்பில் மாவட்ட கட்சி மாவட்ட அலுவலகத்தில் மத்திய கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் எம்.செல்வராஜ் தலைமையில் அஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் டி.எம்.மூர்த்தி, மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம், ஏ.ஐ.டி.யு.சி மாநில தலைவர் காசிவிஸ்வநாதன் உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினார். இறுதியாக ஏ.ஐ.டியு.சி மாவட்ட பொது செயலாளர் க.சுரேஷ் நன்றி கூறினார்.

அதே போல் மேற்குபகுதி குழுவில் 23வது வார்டில் மாமன்ற உறுப்பினர் க.சுரேஷ், 22வது வார்டில் காமராஜ், 8வது வார்டில் சரண்சிங், 27வது வார்டில் ராமச்சந்திரன் உள்ளிட்டோர் தலைமையில் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றது. கோ.அபிஷேகபுரம் பகுதியில் கிளை செயலாளர் நல்லு தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சிகளில் மாநகர் மாவட்ட செயலாளர் எஸ்.சிவா, துணை செயலாளர் சி. செல்வகுமார், பொருளாளர் எஸ்.சண்முகம், விவசாய சங்க செயலாளர் சிவ.சூரியன், மாணவர் பெருமன்ற தலைவர் க. இப்ராகிம், மாதர் சங்கம் க.ஆயிஷா, வை.புஷ்பம், ராஜேஸ்வரி, அந்தநல்லூர் ஒன்றிய செயலாளர் எம்.ஆர். எஸ்.ராஜலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**தருமபுரி:** இலக்கிய பேராசன் பா.ஜீவானந்தம் நினைவு தினம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தருமபுரி மாவட்டக்குழு சார்பில் அனுசரிக்கப்பட்டது.

தருமபுரி பிஎஸ்என்எல் அலுவலகம் முன்பு நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் எஸ்.கலைச்செல்வம் தலைமையில் உருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

நிகழ்ச்சியில் ஏஐடியூசி மாவட்ட பொது செயலாளர் கே.மணி, நல்லம்பள்ளி வட்டார செயலாளர் ப.பிரசாத், வட்டார நிர்வாகக்குழு உறுப்பினர் சிவன், விசைத்தறி தொழிற்சங்க மாவட்ட செயலாளர் சாமிநாதன் மற்றும் நிர்வாகிகள் மரியாதை செய்தனர்.

**ஜனசக்தி அலுவலகம்:** ஜனசக்தி சென்னை அலுவலகத்தில் நடைபெற்ற ஜீவா நினைவஞ்சலி கூட்டத்திற்கு தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற சென்னை மாவட்டச் செயலாளர் கணபதி இளங்கோ தலைமை தாங்கினார்.

ஜீவா படத்திற்கு கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர் த.லெனின் மாலை அணிவித்தார். ஜீவா குறித்து கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர் இளசை எஸ்.எஸ்.கணேசன் புகழுரை ஆற்றினார்.

இதில், ஜனசக்தி ஊழியர்கள் என்.எஸ். பிரதாப் சந்திரன், ஜெ.முருகேசன், மணிமாறன், ஜனகராஜ், முத்துக்குமார், பாவை ஊழியர்கள் சேதுலெட்சுமி, விஜயன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




**ஐரோப்பிய, ஆசிய நிலப் பரப்பில் நிலவும் போர்ச் சூழலை மையமாகக் கொண்டு, சற்று பழையதாகிப் போன போர்க் கருவிகளை, வடிவமைப்புக்களை மாற்றிடவும், புது சகாப்தத்திற்கான போர்த் தொழில் நுட்பத்தைப் பெற முதலீடு செய்யவும்,, சர்வ நாச யுத்தக் கருவிகள், உபகரணங்கள் இவற்றுக்காகத் தங்கள் பட்ஜெட்டை அதற்கேற்றவாறு உருவாக்கிக் கொள்ளவும், ஒரு பெரிய அறுவடைக்குப் போர்த் தளவாடங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் தயாராகி நிற்கின்றன.**

அவை, மத்திய கிழக்கு நாடுகள் தங்கள் எதிரிகளோடு மோதுவதற்கும்,, ஐரோப்பிய நாடுகள் தங்கள் ராணுவ (பாதுகாப்பை) பலத்தை அதிகரிப்பதற்கும், ஜப்பான், இந்தியா இவை தங்களது மிகப்பலம் வாய்ந்த அண்டை நாட்டின் (சீனா) விரிவாக்க நடவடிக்கைகளை எதிர் கொள்வதற்கும், மற்றும் உக்ரைன் ரஷ்யப் போரினாலும், ராணுவ ரீதியில் பலம் வாய்ந்ததாக உருவாகி வரும் சீனாவின் செயல்பாடுகளாலும் போர்க் கருவிகளின் விற்பனையை அதிவேகப் படுத்தியுள்ளன.

விற்பனைக்கான ஆர்டர்கள் கூடிக் கொண்டே உள்ளன. கையிருப்பிலுள்ள போர்த் தளவாடங்களின் விலை ஏறுகின்றன. சந்தையின் தேவைக்கேற்ப போர்க் கருவிகளின் உற்பத்தியை விரிவாக்க வேண்டியுள்ளது.

(ஷிஜிளிசிரிபிளிலிவி மிழிஜிணிஸி ழிகிஜிமிளிழிகிலி றிணிகிசிணி ஸிணி ஷிணிகிஸிசிபி மிழிஷிஜிமிஜிஹிஜிணி, ஸ்வீடன்)

“போர்க் கருவித் தேவைகளை முழுமையாக ஈடு செய்யாமலேயே, 2021 ஆம் அண்டில், முதல் 100 போர்த் தளவாட நிறுவனங்களின் வணிகம் வரலாற்றில் என்றும் இல்லாத அளவு 592 பில்லியன் டாலராக இருந்துள்ளது. (ஏறத்தாழ 59200 கோடி டாலர் )

ஊக்ரைன்–ரஷ்யப் போரிலும், அஜர்பைஜான் –ஆர்மீனிய போரிலும் ஈடுபடுத்தப்படும் ஆயுதங்களின் வெற்றி, தோல்வி, வீச்சு இவற்றை உற்று நோக்கிப் பார்த்துத் தங்கள் ராணுவத்திலும் அவற்றைச் சேர்த்துப் பயன் படுத்தப் பல நாடுகள் தங்கள் நிதித் தொகுப்பில் அதற்காகக் கூடுதலாய்ப் பணம் ஒதுக்க முன் வந்துள்ளன.

உலகளவில் ராணுவக் கருவிகளின் உற்பத்தியில் முழு ஆதிக்க நிலையில் இருப்பவை அமெரிக்கக் கம்பெனிகளும், ஐரொப்பியக் கம்பெனிகளுமே அமெரிக்கக் கம்பெனிகள் பெரும்பாலும் அமெரிக்கச் சந்தையையும், ஐரோப்பியக் கம்பெனிகள் வேறு நாடுகளுக்குஅனுப்பும் ஏற்றுமதியையும் சார்ந்துள்ளன. சீனாவும் போர்த் தளவாடங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் வேகமாக முன்னேறி வருகிறது. சீனாவின் 8 நிறுவனங்கள் உலகளாவிய ராணுவக் கருவி உற்பத்தி நிறுவனங்கள் 100ல் அடங்கும். என்பதை சிப்ரி உறுதி செய்கிறது.

உக்ரைன்ரஷ்யப் போர் அமெரிக்காவின் போர்க் கருவி உற்பத்தி நிறுவனங்களை எந்த அளவு முன்னெடுத்துள்ளதெனில், அவை சுமார் 20 பில்லியன் (ரூ.2000 கோடி ) டாலர் மதிப்பிலான ஆயுதங்களை ரஷ்யாவிற்கெதிரான அமைப்புக்களுக்கு கடந்த ஒரு வருடத்திற்குள்ளாக அனுப்பி உள்ளன. இதன்படி, இவை, அமெரிக்க ராணுவக் கையிருப்பில் உள்ளவற்றை போரின் முதல் நிலைகளுக்கு அனுப்பப்பட்டு, அமெரிக்காவில் அவை மீள் நிரப்பல் செய்யப்படுமாம். உதாரணத்திற்கு, இந்தப் பணியில் முன்னேறி வரும் ரஷ்யப் படைகள் மீது ஏவுதற்காக பேரழிவு தரும் 8500 ஜேவலின் ஏவுகணைகள் விற்கப்பட்டிருந்தன. சிப்ரியின் குறிப்புப்படி, இந்த எண்ணிக்கையானது, உலகின் 1 ஆம் கம்பெனி லாக்ஹீட் மற்றும் ராய்தீன் இவற்றின் 4 வருடக் கூட்டுத் தயாரிப்பின் அளவாம். இப்போது இந்தக் கம்பெனிகளின் உற்பத்தியை இரட்டிப்பாக்கியுள்ளது.

அதே போல 2022ல் அமெரிக்கா உக்ரைனுக்கு 10,04,00 துப்பாக்கி குண்டுகளை அனுப்பியுள்ளது. உற்பத்தித் திறன் ஒரு அளவிற்கே இருப்பதால், வரும் 3 ஆண்டுகளின் கூடுதல் தேவைகளை மீட்டெடுக்கவும், தன் கையிருப்பை நிரப்பிக் கொள்ளவும் அமெரிக்கா தன் நிறுவனங்களின் திறனை 3 மடங்காக மாற்றிக் கொண்டிருக்கிறது

ஐரோப்பாவில் உலகைச் சுற்றிலும் நிகழ்ந்து வரும் மோதல்கள், பிணக்குகள் மிகக் கூர்மையான நுட்பமான ராஃபேல் போர் விமானங்கள் போன்றவற்றின் தேவையை ஏற்படுத்தியுள்ளது. இதைத் தயாரிக்கும் டஸ்ஸால்ட் நிறுவனம், 2029

# பொருளாதார அடிப்படையிலான இட ஒதுக்கீட்டை



இட ஒதுக்கீடுஎன்பது தலித்துகளுக்கு வரலாற்று ரீதியாக அடிப்படையிலேயே இழைக்கப்பட்டுவிட்ட அநீதிக்கான நிவாரணம் என்பதை அடிப்படையாகக் கொண்டது. சாதிய சமூகரீதியிலான அடக்குமுறைக்கெதிரான இயக்கம் உருக்கொண்ட ஒரு சூழலில், ஒரு சமத்துவமான ஏற்றத்தாழ்வற்ற சமூக சூழலை உருவாக்குவதையும், அரசியலில் பிரதிநிதித்துவப்படுத்துவதையும், அம்மக்களுக்கு அதுநாள்வரை கிடைக்கப் பெறாத அவர்களுக்கான நியாமான உரிமையை கிடைக்கச்செய்யும்பொருட்டும், அவர்கள் அதுநாள்வரை அநுபவித்துவந்த இழிநிலையை ஓரளவுக்காவது குறைக்கும் நோக்கிலும் அவர்களுக்கான ஒரு நிவாரணமளிக்கும் நோக்கிலும் இட ஒதுக்கீடு என்பது கொண்டுவரப்பட்டது.

அத்தகைய இட ஒதுக்கீடானது, அரசியல், கல்வி, பொதுத்துறையில் வேலைவாய்ப்பு, ஆகிய அனைத்துத் துறையிலும் பங்கேற்பதன்மூலம் இந்த நாட்டை கட்டமைப்பதில் ஒரு சமத்துவமான பங்களிப்பை தரமுடியும் என்பதை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் இத்தகைய நோக்கம் துரதிஷ்டவசமாக அன்றைய தேசியவாதிகளுக்குமட்டுமல்ல இன்றைய தேசியவாதிகளுக்கும் உவப்பைத் தரவில்லை. அவர்களைப் பொருத்தவரை அதுவரை இருந்துவந்த பாரம்பரியமான நிலையே தொடரவேண்டுமென்பதும் ஒரு சமத்துவமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கான நிலைக்கு எதிர்நிலையையே கொண்டிருந்தனர்.

இட ஒதுக்கீடு என்பது என்ன?

டாக்டர் அம்பேத்கர் அவர்களும், ஈ.வே.ரா அவர்களும் இட ஒதுக்கீட்டின் அடிப்படை நோக்கம் என்பது ஒடுக்கப்பட்டோரை பிரதிநிதித்துவப்படுத்துவதே தவிர அவர்களுக்கான பொருளாதார நிவாரணமல்ல. நூற்றாண்டு காலமாக கடைபிடிக்கப்பட்டுவந்த இந்த நிலைப்பாட்டை மறுதலிக்கும்விதமாக உச்சநீதிமன்றமானது பொருளாதார ரீதியாக பின்தங்கிய உயர்சாதியினருக்கான இட ஒதுக்கீட்டை, அரசியலமைப்புச் சட்டத்தின் 103 வது திருத்தத்தின் மூலம் நிறைவேற்றியுள்ளது.

“தகுதி” என்ற சொல், இட ஒதுக்கீட்டுக்கெதிரான ஒரு மந்திரச் சொல்லாகவே பயன்படுத்தப்பட்டுவருகிறது. கோவிலுக்கு தானம் தருதல், மக்களிடமிருந்து தானம் பெறுதல், கோவில் பூசாரியாக இருத்தல், கல்வி கற்பித்தல் போன்ற துறைகளில் வரலாற்றுரீதியாகவே பிராமணர்கள் மட்டுமே இருந்து வருகிறார்கள். வைசியர்கள் என்பவர்கள் தங்கள் சொத்தைப் பெருக்குவதிலேயே கவனம் செலுத்துகிறார்கள். மேற்கண்ட சமூகம் சார்ந்த தொழில்களானது மனுஸ்மிரிதி மற்றும் அர்த்தசாஸ்திரம் போன்றவைகளை தங்கள் வேர்களாகக் கொண்டவை.

கல்வி கற்றல் என்பது மேலிருக்கும் மூன்று சாதியினருக்கு மட்டுமே உரியதாக இருந்தது. காலனீய ஆதிக்கம் ஏற்பட்டபின்பு முற்போக்கான சிந்தனைகளும் செயல்பாடுகளும் ஏற்பட்டதன் மூலம் அது நாள்வரை இருந்து வந்த சாதீய ரீதியான பிரத்யேக உரிமையாக அநுபவித்துவந்த அரசு அதிகாரம், சட்டம், கல்வி ஆகிய அனைத்தும், அனைத்து சாதியினருக்கு மானதாக மாறியது. ஜோதிராவ் ஃபூலே, ஈ.வெ.ரா, அம்பேத்கர் போன்ற சமூக சிந்தனையாளர்கள், தொழில்களை, புராணங்களில் கூறப்பட்டுள்ளதன் அடிப்படையில் சாதிய ரீதியாக பிரிக்கப்பட்டிருந்ததை முற்றிலுமாக ஒழிக்கப்படவேண்டிய ஒன்று என்பதை தங்கள் கொள்கையாகக் கொண்டிருந்தனர். நாடு சுதந்திரம் அடையயிருந்த சூழலில், அடிப்படையில், அது நாள்வரை ஒரு சிலரே அநுபவித்துவந்த கல்வியையும் வேலை வாய்ப்பையும், அதுவரை மறுதலிக்கப்பட்ட அனைவருக்குமானதாக மாற்றவேண்டுமென்பதே நோக்கமாக இருந்தது.

‘தகுதி’ என்ற மந்திரச் சொல் இட ஒதுகீட்டுக்கு எதிராக ஓரளவுக்கு செயல்பட்டு வந்தாலும் அவசரகதியில் 2019 ல் இயற்றப்பட்ட, முற்பட்ட சமூகத்திற்கான பொருளாதார ரீதியிலான இட ஒதுக்கீடானது, இதுநாள்வரை சொல்லப்பட்டுவந்த “தகுதி” யை சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் கொள்ளவில்லை.

ஏழ்மையை வகைப்படுத்துதல்

முற்படுத்தப்பட்டோருக்கான பொருளாதார ரீதியான இட ஒதுகீட்டுக்கான தீர்ப்பை, ஏழைகளுக்குக் கிடைத்த சமூக நீதியாக ஆளும் பிஜேபியினர் கொண்டாடுகின்றனர். அவர்கள் கூறும் ஏழைகள் உண்மையிலேயே ஏழைகளா? முற்பட்ட வகுப்பில் 8 லட்சம் ஆண்டு வருமானம் பெறுபவர்களும் 1000 சதுர அடி வீடு உள்ளவர்களும் ஏழைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர். இந்தியாவில் 30 கோடிக்குமேல் வறுமைக்கோட்டுக்கு கீழ் (நகரத்தில் நாளொன்றுக்கு 32 ரூபாய்க்குக் கீழும் கிராமத்தில் 27 ரூபாய்க்கும் கீழும் செலவு செய்பவர்கள்) உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளனர். இந்தியா முழுமைக்கும் மற்றும் மாநிலவாரியான புள்ளியியல் தகவலறிக்கையின்படி

# ...ந்தையில், ...க் கம்பெனிகள் ...டைக்கு ஆயத்தமாய்!



ஆம் ஆண்டுவரை தயாரிப்பில் ஈடுபடும் நிலையை எட்டியுள்ளது. இது தவிர இந்தியாவில் அந்த நிறுவனம் தொழில் நுட்பம், திட்டம் மட்டும் தந்து இங்கேயே உற்பத்தித் தளமொன்றை உருவாக்க உள்ளது.

முன்னணிப் போர்க்கருவி நிறுவனங்கள் பற்றிய தன் அறிக்கையில் ‘ சிப்ரி’ இவ்வாறு குறிப்பிடுகிறது: ஜெர்மனியின் டாங்குகள் முதல் வான்வழிப் பாதுகாப்புக் கருவிகள் வரையிலான உற்பத்தி 2022ல் 100% முதல் 150% வரையிலும், 2023ல் 3040% வரையிலும் இருக்கும்.

போர்க் கருவிகள் உற்பத்தி படு வேகமாய் வளர்ந்து வரும் ஆசியாவில், சீனா அதில் முதன்மை வகிக்கிறது. ஏற்கனவே சீனாவின் 4 பெரிய போர்க்கருவி நிறுவனங்கள், உலகின் முதன்மை நிறுவனங்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. தவிரவும், விமானம் தாங்கிய போர்க் கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள், ஃப்ரிகேட்ஸ் இவற்றைத் தயாரிப்பதிலும் அவை இடம் பெறுகின்றன. சீனா எற்கனவே விமானம் தங்கிய போர்க்கப்பல்கள் 3 ஐக் கொண்டுள்ளது. இவற்றுக்கான நிதி விபரங்கள், ஆதாரங்கள் பற்றித் துல்லியமாய்த் தகவல் தருவது கடினம். எனினும், விமானம் தாங்கிய போர்க் கப்பல் செய்வதற்கு ஆகும் செலவு சுமார் 4 பில்லியனுக்கு மேலாகுமாம்.

சீனாவின் இந்த வலிமை, விரிவாக்கம், கடல்படையில் மேலோங்கிய நிலை, தயார் நிலைஅந்த நாட்டை உலகின் கப்பல் படைத் திறனில் உயர்ந்த இடத்தைக் காட்டுகிறது. இதன் விளைவு அண்டை நாடுகளான இந்தியா, ஜப்பான் இவை தங்கள் கப்பல் படைத் திறனை, விரிவாக்க வைத்துள்ளது. 3பில்லியன் டாலர் மதிப்பிலான ஐ.என்.எஸ். விக்ராந்த்தைக் கொண்டுள்ள இந்தியக் கப்பற்படை இரண்டாவது விமானம் தாங்கிய போர்க் கப்பலை வாங்கும் முனைப்பில் உள்ளது.இந்தியாவின் ராணுவக் கருவிகள் ஏற்றுமதியும் சுமார் 2 பில்லியன் டாலரைத் தொடும் எனத் தெரிகிறது.

தன் கடல் பரப்பிலுள்ள பல தீவுகள் பற்றிச் சீனாவுடன் மோதல் நிலை யிலுள்ள ஜப்பான் தன் வசமுள்ள ராணுவ ஹெலிகாப்டர்களை, அமெரிக்க நிறுவனம் லாக்ஹீட்மார்டின் கம்பெனியின் எஃப்35 பி. போர் ஜெட் விமானங்களாக மாற்றும் பணியில் உள்ளது.

உக்ரைன் –ரஷ்யப்போரில் தன் வியாபாரத்தை விரிவாக்கிய உலகின் முதல் போர்க் கருவி நிறுவனமான அமெரிக்காவின் ‘லாக்ஹிட்மார்டின்’ 31% செல்வ உயர்வைக் கண்டுள்ளது.

போர்கள் முளைப்பதும், போர்க் கருவிகளின் தேவையும் போர்த் தளவாட நிறுவனங்களின் வருமான உயர்வைத் தந்து, உலகப் பங்குச் சந்தையில் அவைகளின் பங்கு மதிப்பு பன்மடங்கு உயர்ந்திருப்பதைக் காட்டுகிறது. அந்தக் கம்பெனிகளின் பங்கு மதிப்பு, கிட்டத் தட்ட 30 முதல் 140% வரை உயர்வு கண்டுள்ளன.

“போர்” என்பது மிகப் பெரும் வணிகச் செயல். ஆஃப்கன் நாட்டில் போர் தீவிரவாதத்துக்கெதிரான நடவடிக்கைகள் எனச் சொல்லிக் கொண்டு ஒரு 20 வருடங்களில் சுமார் 14 டிரில்லியன் டாலர் அமெரிக்கா செலவு செய்ததாக “ப்ரவுன் பல்கலைக்கழக” ஆய்வு கூறுகிறது. இதில் பாதிப் பணம் போர்த் தளவாடங்களை ராணுவங்களுக்கு விற்க உதவும் காண்டிராக்டர்களுக்கும், போர்கள் தொடரத் தூண்டும் குழுக்களுக்கும் போய்ச் சேர்ந்திருக்கிறது. பிரவுன் பல்கலைக்கழக ஆய்வறிக்கையின்படி, “ அஃப்கன் போர்ச் செலவில்” போர்க்கருவிகள் விற்பனைக்குத் துணை நின்ற ஏஜெண்டுகளுக்கு மட்டும் சுமார் 2.5 பில்லியன் டாலர் செலவழிக்கப் பட்டிருக்கிறது.

இந்தக் கம்பெனிகளின் உயர்நிலை அதிகாரிகள், உலகின் மிக அதிக ஊதியம் பெறுபவராய் ஆனதுதான். அவர்களின் பணியே போர்த் தளவாடங்கள் உடனுக்குடன் விற்றுத் தீர்வதும், அடுத்து வரும் கருவிகள் மிகுந்த கூர்மையானதாக ஆக்குதலுமே.

உலகளவிய சக்தி வாய்ந்த, பிரபலமானவர்களின் பட்டியலை வருடம் தோறும் வெளியிடும் “ ஃபோர்ப்ஸ்” வெளி யிட்ட தகவல் படி, அமெரிக்காவின் பெரும் ராணுவக் கருவி நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகளின் சராசரி ஊதியம் 21 மில்லியன் டாலர். (சுமார் 150 கோடி ரூபாய்) இதை ஒப்பிட்டால், ஒரு ராணுவ உயர் மட்ட ஜெனரலின் ஊதியத்தைப் போல 95 மடங்காகும்.

“உலகப் பாதுகாப்பை அச்சுறுத்துவதைக் குறியாய்க் கொண்ட போர்க் கருவி உற்பத்தியாளர்கள் வரும் 5 ஆண்டுகளில் இதை அதிகரிக்கவே செய்வார்கள்”

Source :Manu.pubby@times-group.com
ECONOMIC TIMES 11 JAN 2023

**மொழி பெயர்ப்பு: ஆர்.ஆர்.**
**தொடர்புக்கு: 94498 26636**

# ...ஏன் எதிர்க்க வேண்டும்?

முன்னேறிய வகுப்பை விட மிக அதிக அளவிலான ஏழைகள் நகர மற்றும கிராமங்களில் தாழ்த்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்திலேயே உள்ளனர்.

தற்போது நமது நாட்டில் 75 ரூபாய்க்கு மேல் வருவாய் இருந்தால் அவர்கள் வறுமைக்கோட்டுக்கு மேல் உள்ளவர்களாகக் கருதப்படும் சூழலில், இச்சட்டத்தின் மூலம், நாளொன்றுக்கு 2222 ரூபாய் வரை பெறும் முற்பட்ட வகுப்பினரை மட்டும் பொருளாதாரத்தில் பின் தங்கிய வராகக் கருதப்படுவார். வருமான வரித்துறை தகவலின்படி 1% க்குக் கீழானவர்களே 10 லட்சத்துக்கு மேல் ஆண்டு வருமானம் பெறுகிறார்கள்.

1990 களில் மண்டல் குழுவின் பரிந்துரையை சரியான புள்ளிவிவரமின்றி தயாரிக்கப்பட்டுள்ளதாக இதே முற்பட்ட வகுப்பைச் சேர்ந்த கற்றவர்கள் கூக்குரலிட்டார்கள். உண்மையில் மண்டல் குழு அறிக்கையானது புள்ளியியல் துறையின் 1891 மற்றும் 1931 ன் தகவலறிக்கையின்படியே தயாரிக்கப்பட்டது. மேலும் பி.பி.மண்டல் அவர்களின் அறிக்கையானது “பின்தங்கிய நிலை” என்ற வரையறையானது அனைத்து சாதியிலான சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலை ஆகிய அனைத்தையும் அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்பட்டது.

ஆனால் இப்போது இயற்றப்பட்டுள்ள சட்டம் எந்தவிதமான தர்க்கரீதியான நியாயத்தையோ எந்தவிதமான புள்ளியியல் ரீதியிலான தகவலின் அடிப்படையிலோ இந்த 10% இட ஒதுக்கீட்டு சட்டம் இயற்றப்படவில்லை. ‘சமமற்றவர்களை சமமாக்குவது” என்ற மண்டல் குழுவின் கூற்று இங்கு நினைவுகூறத்தக்கது. இந்த சட்டத்திருத்தம் என்பது கிஞ்சித்தும் ஏற்றுகொள்ள முடியாதது ஏனெனில் இது காலம்காலமாக நசுக்கப்பட்டவர்களிடமிருந்து அவர்களுக்கான உரிமையைப் பிடுங்கி நசுக்கியவர்களுக்கே தாரைவார்க்கிறது.

மண்டல் குழுவின் பரிந்துரை 1990 களில் பரிந்துரைக்கப்பட்டபோது அரசியலரங்கிலிருந்து நாடளாவிய அளவில் எதிர்ப்பலைகள் கிளம்பின. வலதுசாரிகள் ரதயாத்திரையை தொடங்கியதன் மூலம் பிற்படுத்தப்பட்ட மக்களின் பார்வையை வெற்றிகரமாகத் திசைதிருப்பினர். ராமர் கோவில் மற்றும் பாபர் மசூதி இடிப்பு போன்ற மதம் சார்ந்த செயல்களின் மூலம் பிற்படுத்தப்பட்ட மக்களின் கவனத்தை அவர்களின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு போன்றவைகளிலிருந்து வெற்றிகரமாக திசைதிரும்பினர். மண்டல் பரிந்துரைக்கு ஏற்பட்ட பரவலான எதிர்ப்பலைகளுக்கு மாறாக உயர்சாதியினருகான பொருளாதார அடிப்படையிலான இட ஒதுக்கீட்டுக்கு அரசியல் கட்சிகளிடம் பரவலான ஆதரவு நிலையே காணப்படுகிறது.

தனது முந்தைய தீர்ப்புக்களை கணக்கில் கொள்ளாமல், 50% உச்சவரம்பு ஒன்றும் புனிதமானதும், மீறக்கூடாததுமல்ல என்ற நிலைப்பாட்டை எடுத்திருக்கிறது. எவ்வாறாயினும் 50% உச்சவரம்பு நீக்கம் என்ற நிலையானது பெரியார் சொல்லி வந்த சாதிவாரியிலான எண்ணிக்கை அடிபடை யிலான இட ஒதுக்கீடு என்ற அடுத்த நிலைக்கு இட்டுச்செல்லும்பட்சத்தில் வரவேற்கத்தக்கதே.

**– கார்த்திக்ராஜா கருப்பசாமி**
**மொழிபெயர்ப்பு : அ.சம்பத்குமார்.**





**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி**
**கண்ணம்பாளையம் 11வது வார்டு அலுவலகம்**
**கே.டி.கே.தங்கமணி இல்லத்தின்**
**முதல் தளத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள**

**கட்சி அலுவலகம் திறப்பு விழா**

நாள் : 22.01.2023 ஞாயிறு மாலை 5 மணி
இடம் : வ.உ.சி. நகர், கண்ணம்பாளையம்.
தலைமை : தோழர் வே.வசந்தகுமார் வட்டார செயலாளர், CPI
வரவேற்புரை : தோழர் கே.அங்கப்பன் கிளைச் செயலாளர், CPI

பங்கேற்கும் தோழர்கள்

**டி.ராமச்சந்திரன்** MLA
மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் -
சட்டமன்றக் குழுத் தலைவர், CPI

**சி.சிவசாமி** மாவட்டச் செயலாளர், CPI
**ஜே.ஜேம்ஸ் - மௌ.குணசேகர்** மாவட்ட துணைச் செயலாளர்கள், CPI

**பெ.மௌனசாமி பி.சுப்பிரமணியம் கே.கண்ணன்**

அனைவரும் வருக!

**CPI கண்ணம்பாளையம் பேரூராட்சிப் பகுதி கிளைகள்**
சூலூர் தெற்கு வட்டாரம், கோவை

# சுவரொட்டி ஒட்டிய நிர்வாகிகள் மீது வழக்கு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி முற்றுகை போராட்டம்

தமிழக ஆளுநர் ரவியை திரும்ப பெற வலியுறுத்தி டிசம்பர் 29 அன்று சென்னையில் ஆளுநர் மாளிகையை முற்றையிட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முடிவு எடுத்தது.

இதனை பொதுமக்களுக்கு விளம்பரப்படுத்த பவானிசாகர் தொகுதி முழுவதும் பல்வேறு இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. சுவர் விளம்பரமும் செய்யப்பட்டன.

இந்த சுவரொட்டிகளை உடனடியாக அகற்றுமாறு தாளவாடி, ஆசனூர், கடம்பூர், சத்தியமங்கலம், புளியம்பட்டி, பவானிசாகர் ஆகிய ஆறு காவல் நிலையங்களில் இருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு சுவரொட்டிகளை அகற்றுமாறு கடிதம் அனுப்பப்பட்டது.

மேலும் சுவரொட்டிகளை ஒட்டிய கட்சி நிர்வாகிகள் மீதும் வழக்கு பதியப்பட்டுள்ளது.

இதனை கண்டித்து சத்தியமங்கலத்தில் அமைந்துள்ள காவல்துறை துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.எல்.சுந்தரம் தலைமையில் கட்சி நிர்வாகிகள் முற்றுகையிட்டனர்.

இதில் ஈரோடு வடக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.மோகன் குமார், துணைச் செயலாளர் கே.சக்திவேல், மாவட்ட பொருளாளர் பி.என். ராஜேந்திரன், மாவட்டக் குழு உறுப்பினர் ஸ்டாலின் சிவக்குமார், சத்தியமங்கலம் நகர செயலாளர் ஜமேஷ், பவானிசாகர் வடக்கு ஒன்றிய செயலாளர் பி.ஏ.வேலுமணி, தெற்கு ஒன்றிய செயலாளர் மகேந்திரன், சத்தியமங்கலம் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.சுரேந்தர், தெற்கு ஒன்றிய செயலாளர் எஸ்.சி.நடராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# ஜனவரி 24ல் ஏஐடியூசி மறியல்

| தலைமை தோழர்கள் விவரம் | | |
|---|---|---|
| எண் | பகுதி | மறியல் தலைமை தோழர்கள் |
| 1. | சென்னை | டி.எம்.மூர்த்தி |
| 2. | செங்கல்பட்டு | ம.இராதாகிருஷ்ணன் |
| 3. | காஞ்சிபுரம் | ஏ.எஸ்.கண்ணன் எக்ஸ்.எம்.எல்.ஏ. |
| 4. | திருவள்ளூர் | கே.இரவி |
| 5. | வேலூர் | ஜி.லதா எக்ஸ்.எம்.எல்.ஏ. |
| 6. | திருப்பத்தூர் | எஸ்.ஆர்.தேவதாஸ் |
| 7. | திருவண்ணாமலை | வி.ஆதிமூலம் |
| 8. | விழுப்புரம் | எம்.சங்கையா |
| 9. | கடலூர் | ஏ.வளர்மதி |
| 10. | நாகப்பட்டினம் | எம்.செல்வராசு எம்.பி. |
| 11. | திருவாரூர் | க.மாரிமுத்து எம்.எல்.ஏ. |
| 12. | தஞ்சாவூர் | ஆர்.தில்லைவனம் |
| 13. | அரியலூர் | எஸ்.சந்திரகுமார் |
| 14. | பெரம்பலூர் | அ.சாமிக்கண்ணு |
| 15. | திருச்சி | வஹிதாநிஜாம் |
| 16. | புதுக்கோட்டை | வே.நடராஜா |
| 17. | சிவகங்கை | எஸ்.குணசேகரன் எக்ஸ்.எம்.எல்.ஏ. |
| 18. | ராமநாதபுரம் | மீனாள் சேதுராமன் |
| 19. | தூத்துக்குடி | ஈ.கிருஷ்ணராஜ் |
| 20. | கன்னியாகுமரி | பி.சின்னத்தம்பி |
| 21. | திருநெல்வேலி | ஆர்.சடையப்பன் |
| 22. | தென்காசி | எம்.நந்தாசிங் |
| 23. | விருதுநகர் | டி.ராமசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ. |
| 24. | மதுரை | எஸ்.காசிவிஸ்வநாதன் |
| 25. | தேனி | எம்.முனுசாமி |
| 26. | திண்டுக்கல் | ஆர்.ஆறுமுகம் |
| 27. | கரூர் | ஆர்.துரைசாமி |
| 28. | நாமக்கல் | என்.செல்வராஜ் |
| 29. | சேலம் | நா.பெரியசாமி |
| 30. | ஈரோடு | என்.சேகர் |
| 31. | திருப்பூர் | கே.சுப்பராயன் எம்.பி. |
| 32. | கோயம்புத்தூர் | எம்.ஆறுமுகம் எக்ஸ்.எம்.எல்.ஏ. |
| 33. | நீலகிரி | கே.எம்.செல்வராஜ் |
| 34. | கிருஷ்ணகிரி | டி.ராமச்சந்திரன் எம்.எல்.ஏ. |
| 35. | தருமபுரி | எஸ்.சின்னசாமி |

# தமிழர் வாழ்வில் சனாதனத்துக்கு இடமில்லை

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பொங்கல் வாழ்த்து

இயற்கையோடு இயந்து வாழ்வதும், அனைத்து உயிர்களையும் நேசித்து மகிழ்வதும் தமிழர் பண்பாட்டின் தொன்மை மரபாகும். மனித குல வரலாற்றில் ஓடும் குடிகளாக இருந்த நிலை மாறி, ஓரிடத்தில் நிலைத்து வாழும் முறைக்கு வேளாண் தொழில் ஆதாரமானது. மண்ணில் விழும் விதைகள் வளர்வது தண்ணீர் தரும் ஈரத்தால் மட்டும் அல்ல, அதற்கு "சூரியன்" தருகிற வெப்பமே இன்றியமையாதது என்பதை அறிந்த மனிதன் சூரியனுக்கு நன்றி கூறி குதூகலித்த நாள் பொங்கல் திருநாளாக மலர்ந்து, வளர்ந்து, தொடர்கிறது.

தமிழர் வாழ்வில் வாழையடி, வாழையாக வளர்ந்த அறிவு முதிர்ச்சி "ஆடிப்பட்டம் தேடி விதை " என்ற முதுமொழி கூறியது. ஆடியில் விதைத்தது மார்கழி, தையில் அறுவடையாகும். வாழ்வில் கலங்கி நிற்கும் மனிதனுக்கு துயரம் நீங்கி, "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்ற தன்னம்பிக்கை தரும் திருநாளாக தை முதல் நாள் அமைந்தது. நொடி, நாழிகை, கிழமை, ஆண்டு, ஊழி என காலத்தை கணக்கிட்டு வாழ்ந்த தமிழர்கள், வைகறை, காலை, நண்பகல், எற்பாடு. மாலை, யாமம் என ஒரு நாளை ஆறாக வகைப்படுத்தியுள்ளனர். இதன் தொடர்ச்சியாகவே தை முதல் நாள் தமிழர் ஆண்டின் முதல் நாளானது. இந்தத் திருநாளுடன் மனித உழைப்பின் ஆற்றலை பெருக்கி, உற்பத்தி சக்தியை உயர்த்த உதவிய கால் நடைகள், குறிப்பாக மாடு, எருதுகளின் உழைப்புக்கு வணங்கி நன்றி கூறும் "மாட்டுப் பொங்கல்" தமிழர் வாழ்வின் தனிச் சிறப்பாகும்.

தொன்மை மரபு சார்ந்த பண்பாட்டு விழாவான பொங்கல் திருநாளில் சமூக, பொருளாதார, அரசியல் தளங்களில் நிகழும் நிகழ்ச்சிப் போக்குகள் பெருங்கவலையளிக்கின்றன.

மனிதனை, மனிதனே பகைத்தும், இழித்தும், பழித்தும் பேசும் வெறுப்பு அரசியல் அதிகார மண்டபத்தில் அமர்ந்து கொண்டது.

வேற்றுமையில் ஒற்றுமை கண்ட மரபுகளை மறைத்து, ஒரே நாடு, ஒரே கலாச்சாரம், ஒரே மொழி, ஒரே தேர்தல், ஒரே தலைமை என தனிநபர் மையப்பட்ட, சிறு கும்பல் சர்வாதிகாரம் ஆட்சி நடைமுறையாகி வருகிறது.

மனித சமூகத்தை பிளவுபடுத்திய நால்வர்ண முறையும், இதனை ஆதாரப்படுத்தி கட்டமைக்கப்பட்ட சாதிய அடுக்குமுறையும் நியாயப் படுத்தப்படுகின்றது. மனிதன் குடிக்கும் குடிநீரில் மலத்தை கலக்கும் ஈனச் செயல்கள் நடைபெறுகின்றன.

சமூகநீதி சார்ந்த ஜனநாயக முறைக்கு பேராபத்து ஏற்பட்டிருக்கிறது. மாநிலங்கள் ஒருங்கிணைந்த ஒன்றிய அரசு என்பதை அரசியல் அமைப்பு சட்டம் உறுதி செய்துள்ளது. ஆனால், அரசியல் அதிகாரப் பொறுப்பில் இருக்கும் மனிதர்கள் அதனை நிராகரித்து, சித்தம் களங்கிய, பித்தர்களாக செயல்பட்டு வருகின்றனர்.

ஜனநாயக நெறிமுறைகள் அழிக்கப்பட்டு, சட்டத்தின் ஆட்சி அகற்றப்பட்டு, "மனுதர்மம்" மறுவாழ்வு பெறும் பேராபத்து கதவு தட்டி நிற்கிறது.

சவால்களை சந்தித்து வென்று வாழும் தமிழர் வாழ்வில் சனாதனத்துக்கு இடமில்லை என்று வெற்றி முழக்கமிடும் பொங்கலாக, தமிழ்நாடு முழுவதும் கட்சி அலுவலகங்களிலும், இல்லங்களிலும் பொங்கலிட்டு தமிழ்நாடு வாழ்க, தமிழ்நாடு வாழ்க என குலவையிடுவோம். ஜனநாயக, மதச்சார்பற்ற, சமூக நீதி, தேசபக்தி உணர்வு கொண்ட அனைவரும் ஒருங்கிணைந்து "பொங்கல் திருநாளில்" குறுகிய மதவெறி, சாதிவெறியை முறியடிக்க தைத் திருநாளில் உறுதி ஏற்போம். முன்னேற்றத்தின் தடைச் சுவராகும் பழைமை குப்பைகளை எரித்து, புதுயுகம் படைக்க பொங்கல் திருநாளில் உறுதி ஏற்போம் எனக் கூறி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு அனைவருக்கும் பொங்கல் திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

# ஏழைகளுக்கு வழங்கப்பட்டு வரும் உணவு தானியங்களை நிறுத்த அரசு முடிவு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

உணவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் ஏழைகளுக்கு வழங்கப்பட்டு வரும் உணவு தானியங்களை நிறுத்த வேண்டும் என்ற அரசாங்கத்தின் சமீபத்திய முடிவு குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கிறது.

இந்த முடிவு ஏழை மக்களை மிக மோசமாகப் பாதிக்கும் என்பதோடு தங்களின் உணவு தானிய தேவைகளுக்காக அவர்களைச் சந்தைகள் நோக்கிச் செல்ல கட்டாயப்படுத்தும். குறைந்தபட்ச ஆதார விலையை (MSP ) உத்தரவாதப்படுத்தும் சட்டம் வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தி வரும் அதே நேரத்தில், குறைந்தபட்ச ஆதார விலையை நிர்ணயிக்கும் முறையை அரசாங்கம் வருங்காலங்களில் நிறுத்திவிடக் கூடும் என்பதன் அறிகுறியாக இந்த முடிவு உள்ளது.

எனவே, ஏழை மக்களுக்கு உணவு தானியங்கள் வழங்குவதை நிறுத்தும் அரசாங்கத்தின் இந்த முடிவு திரும்பப் பெறப்பட வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வலியுறுத்துகிறது.

# ஜோஷிமடம், கர்ணபிரயாக் பகுதிகளில் நிலவரத்தை மதிப்பீடு செய்க!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

ஜோஷிமடம் மற்றும் கர்ணபிரயாக் பகுதிகளில் நிலவரத்தை மதிப்பீடு செய்திடவும், மக்களின் மறுவாழ்வுக்கான திட்டத்தை வகுத்திடவும், ஒன்றிய அரசாங்கம் அனைத்து கட்சி கூட்டத்தைக் கூட்ட வேண்டும்!

ஜோஷிமடம் மற்றும் கர்ண பிரயாக் பகுதிகளில் வீடுகளுக்கு ஏற்பட்டுள்ள பெரும் சேதங்கள் குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு ஆழ்ந்த வேதனை தெரிவிக்கிறது. ஒப்பீட்டளவில் இமயமலை பழமையான மலையன்று என்பதால் அதன் தன்மை மற்றும் அந்தப் பகுதியின் சுற்றுச்சூழல் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு, அந்தப் பகுதியின் மேம்பாட்டுப் பணிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் திட்டமிடப்பட வேண்டும்.

அங்கு மேற்கொள்ளப்படும் மேம்பாட்டுப் பணிகளில் இப்போது இருக்கும் ஒன்றிய மற்றும் மாநில அரசாங்கங்கள் கொண்டிருக்கும் அணுகுமுறை, நீடித்த தன்மை மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைக் கருத்தில் கொள்வதில்லை. எனவே, அவற்றைத் திருத்திக் கொள்ள வேண்டிய தேவையுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிவாரணம் போதுமானதாக இல்லை; மறுவாழ்வு திட்டப் பணிகளில் பொதுமக்களின் கருத்துக்கள் பரிசீலிக்கப்பட வேண்டும்.

சுற்றுச்சூழல் பிரச்னைகளைக் கருத்தில் கொள்ளாமல் மேம்பாட்டுப் பணிகளை அவசர கதியில் மேற்கொள்ளும் போக்கிற்கு ஜோஷிமடம் மற்றும் கர்ணபிரயாக் பகுதிகளில் ஏற்பட்டுள்ள சேதங்கள் ஒரு எச்சரிக்கை ஆகும்.

மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும் போது சுற்றுச்சூழல் குறித்து கருத்தில் கொள்ள வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது. ஜோஷிமடம் மற்றும் கர்ணபிரயாக் பகுதிகளில் நிலவரத்தை மதிப்பீடு செய்திடவும், மக்களின் மறுவாழ்வுக்கான திட்டத்தை வகுத்திடவும், ஒன்றிய அரசாங்கம் அனைத்து கட்சி கூட்டத்தைக் கூட்ட வேண்டும்.

இவ்வாறு கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



# சங்கே முழங்கு!

## வனவிலங்குகளிடமிருந்து பாதுகாப்பு வழங்கிடுக!



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம், மாவட்ட செயலாளர் சி.சிவசாமி, ஜெகநாதன், சண்முகசுந்தரம் ஆகியோர் கோவை மாவட்ட ஆட்சியரை சந்தித்து கொடுத்த மனுவில், கூறியுள்ளதாவது:

“கோவை மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம், கூடலூர் நகராட்சி, ஸ்ரீ பாரதி நகர் பகுதியில் சுமார் 450 குடும்பங்கள் வசித்து வருகிறார்கள். அவர்கள் வறுமை கோட்டுக்கு கீழ் வாழ்ந்து வரும் குடும்பங்கள் ஆகும்.

அரசால் வழங்கப்பட்ட மனையில் அவர்கள் வீடு கட்டி வாழ்ந்து வருகிறார்கள். அரசு பட்டா வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் வசித்து வரும் வீடுகள் பாதுகாப்பு இல்லாத வீடுகளாகும். அப்பகுதியில் மின் விளக்குகள் கூட இல்லை.

மலையை ஒட்டிய பகுதியானதால் யானை, கரடி, காட்டுப்பன்றி போன்ற மிருகங்களின் நடமாட்டம் இருந்து வருகிறது. மக்கள் அனுதினமும் உயிருக்கு பயந்து வாழ்ந்து வருகிறார்கள்.

தொடர்ந்து யானைகள் அப்பகுதியில் வந்து முகாமிட்டு சேதங்களை ஏற்படுத்தியும் வருகிறது.

கடந்த 13.01.2023ஆம் தேதி இரவில் இரண்டு யானைகள் அப்பகுதிக்கு வந்து சுந்தரவேல், தெய்வானை ஆகியோர் குடியிருப்புகளை துவம்சம் செய்துள்ளது. அவர்கள் உயிருக்கு ஆபத்தான நிலையில் தப்பித்துள்ளார்கள்.

அதேபோல், கடந்த நவம்பர் மாதம், ரங்கசாமி, லட்சுமி ஆகியோர் குடியிருந்து வரும் வீட்டையும் இடித்துத் தள்ளி, வீட்டில் இருந்த அரிசியை முழுமையாக சூறையாடி சென்றுள்ளது.

ஒவ்வொரு முறையும் வனத்துறை அதிகாரிகள் வந்து பார்த்துச் செல்லுகிறார்கள். தவிர பாதுகாப்பு நடவடிக்கை இதுவரை எடுத்ததாக தெரியவில்லை.

எனவே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உடனடியாக அப்பகுதியில் மின்விளக்குகள் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

யானைகள் குடியிருப்பு பகுதிக்குள் நுழையாமல் இருக்க பாதுகாப்பு நடவடிக்கையாக அகழிகள் வெட்டி, மின் வேலி அமைத்துக் கொடுக்கவும் வேண்டும்.

நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பஸ் மீண்டும் பெரியநாயக்கன்பாளையத்திலிருந்து இரவு 7.30 மணிக்கு புறப்பட்டு ஸ்ரீ பாரதி நகர் பகுதிக்கு வர ஏற்பாடு செய்ய வேண்டும்.

பாதுகாப்பில்லாத மன்சுவர் ஓட்டு வீடுகளை அப்புறப்படுத்தி, அரசு வீடு கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தார் ரோடு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும்‘‘. என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மின்சார வாரிய தொழிலாளர்களின் விடிவெள்ளி எஸ்.சி.கே. நூற்றாண்டு



தோழர் எஸ்.சி.கிருஷ்ணன் அவர்கள் 1924ம் ஆண்டு ஜனவரி மாதம் 14ந் தேதி சீனிவாச அய்யர் வேதவல்லி தம்பதியின் எட்டாவது புதல்வராக பிறந்தார்.

இண்டர்மீடியட் படிக்கும்வரை எஸ்.சி.கே. அவர்களுக்கு அரசியல் என்றாலே பிடிக்காது. பி.ஏ. வகுப்பின் முதலாண்டின்பொழுது லூயி பிஷர் எழுதிய “இந்தியாவை விட்டு வெளியேறு” என்ற நூலை எஸ்.சி.கே. படித்தார். அதன்பின் வங்காளத்தை அச்சமயத்தில் உலுக்கி வந்த மிகக் கொடூரமான பஞ் சத்தைப்பற்றி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பி.சி.ஜோஷி எழுதிய “வங்கம் அழிந்தால் வாழ்வேது” (who lives’ in Bengal dies?) என்ற ஆங்கில பிரசுரத்தை படித்தார். அந்த பிரசுரம் எஸ்.சி.கே. அவர்களை மிகவும் பாதித்தது. அதன்பின்தான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை நோக்கி நகரலானார்.

மேலும் பி.சி. ஜோஷி, ஜி.அதிகாரி போன்ற தலைவர்களது கட்டுரைகள் அவரை மிகவும் கவர்ந்தது.

கம்யூனிஸ்டாக விளங்க வேண்டும், விடுதலைக்காக போராட வேண்டும் என்ற ஆவேசத்துடன் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு கிளை அலுவலகத்திற்கு சென்றார். அச்சமயம் டேவிட்சன் தெருவில் இருந்தது கட்சி அலுவலகம். இளம் கம்யூனிஸட் கட்சி தலைவர்களான தோழர்கள் கே.பாலதண்டாயுதம், வி.ராதாகிருஷ்ணன் ஆகியோரிடம் உரையாடினார்.

பி.ஏ. வகுப்பில் படிக்கும்போதே 1943ம் ஆண்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினரானார். 1944ம் ஆண்டில் கம்யூனிஸ்ட் கட்சியின் சென்னை மாவட்டக்குழு உறுப்பினரானார்.

டிராம்வே தொழிற்சங்க பணியில் ஈடுபட்டு வந்த எஸ்.சி.கே. டிராம்வே மூடப்பட்டவுடன் பேசின் பிரிட்ஜ் மின் நிலைய தொழிலாளர் சங்கத்தை பலப்படுத்துவதில் அவரது கவனம் சென்றது.

இதே நிலையில் தமிழகம் முழுவதும் பல்வேறு நிறுவனங்களில் பணிபுரிந்த மின்சார தொழிலாளர்களை அணி திரட்டுவதில் மேட்டூர் சௌரிராஜன், கோவை ஈப்பன், நெல்லை பி.சி.வேலாயுதம், மதுரை மீனாட்சி சுந்தரம் போன்ற முக்கிய தோழர்களுடன் தொடர்பை ஏற்படுத்தி மாநில அளவிலான மின் தொழிலாளர் இணைப்புக்குழு உருவாக்கப்பட்டது. இதன் விளைவாக பிப்.23 1958ல் தமிழ்நாடு மின்சார தொழிலாளர் சம்மேளனம் உருவாக்கப்பட்டது.

1958ல் 9600 தொழிலாளர்கள் மட்டுமே நிரந்தர தொழிலாளர்களாக இருந்தனர். இதன்பிறகு எஸ்.சி.கே. முயற்சியால் 1978ம் ஆண்டில் 22000 என்.எம்.ஆர் தொழிலாளர்கள் நிரந்தரம் செய்யப்பட்டனர்.

1967ம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்கள் தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் தமிழ்நாடு மின்சார சம்மேளனத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

1.12.1969 முதல் ஊதிய ஒப்பந்தம் உருவானது. இதனையடுத்து 1974, 1979, 1984, 1988, 1996 என நான்காண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய உயர்வு ஒப்பந்தத்தை நிகழ்த்திகாட்டினார். மேலும் வாரிய பணியாளர்களுக்கு தனித்த நிலையாணைகள், பென்சன் 1.07.1986 முதல் அரசு ஊழியர்களைப் போல ஓய்வூதியம் என எண்ணற்ற சாதனைகளை நிகழ்த்திக் காட்டிய பெருமை எஸ்.சி.கே. அவர்களைச் சாரும்.

இத்தகைய மகத்தான ஆளுமை கொண்ட எஸ்.சி.கே. அவர்கள் 26.06.2003ல் மறைந்தார். தான் மறையும் வரை தமிழ்நாடு மின்சார தொழிலாளர் சம்மேளனத்தை பேரலாமரமாய் நிலைக்கச் செய்தார்.

தோழர் எஸ்.சி.கே. அவர்களின் நூற்றாண்டு விழா 14.1.2023ல் தொடங்குகிறது. இன்று ஏற்பட்டிருக்கிற நெருக்கடிகளிலிருந்து மின் வாரியத்தை காத்திடவும், மின் தொழிலாளர் நலன்களை பாதுகாத்திடவும் இந்த நூற்றாண்டு நாளில் உறுதியேற்போமாக.

**எஸ்.சி.கிருஷ்ணன் வகித்த தொழிற்சங்க, கட்சி பொறுப்புகள்**

| | |
|---|---|
| 1948 – 1953 | டிராம்வே யூனியன் சென்னை |
| 1948 – 1956 | சென்னை மின்சார தொழிலாளர் சங்கம், பொதுச் செயலாளர் |
| 1956 – 1958 | அட் ஹாக் கமிட்டி / தமிழ்நாடு மின்சார தொழிலாளர் சம்மேளனம் |
| 23.2.1958 – 45 ஆண்டுகள் | பொதுச் செயலாளர், தமிழ்நாடு மின்சார தொழிலாளர் சம்மேளனம் |
| 23.6.1956 முதல் 1964 வரை | பொதுச்செயலாளர், அகில இந்திய மின்சார தொழிலாளர் சம்மேளனம் |
| 1986 – 1990 | பொதுச் செயலாளர், அகில இந்திய மின்சார தொழிலாளர் சம்மேளனம் |
| 1990 – 1999 | செயல் தலைவர், அகில இந்திய மின்சார தொழிலாளர் சம்மேளனம் |
| 1994 – 1999 | தலைவர், தமிழ்நாடு ஏஐடியூசி மற்றும் ஏஐடியூசி தேசிய கவுன்சில் உறுப்பினராகவும் பல ஆண்டுகள் |
| 1943 நவம்பரில் | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் |
| 1949 – 1953 | சென்னை மாவட்ட செயலாளர் |
| கட்சி தடை செய்யப்பட்ட போது 3 ஆண்டுகள் 8 மாதங்கள் தலைமறைவு வாழ்க்கை. | |

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய கவுன்சில் மற்றும் மாநில நிர்வாககுழு, மாநில செயற்குழு உறுப்பினராகவும் 1963 முதல் பணியாற்றி வந்துள்ளார்.

தமிழ்நாடு மின்சார நூற்றாண்டு விழா தொடக்க நிகழ்வுகள் 14.1.2023ல் தொழிலாளர் சம்மேளனம் தொடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

– வி. ராஜேந்திரன்
தொடர்புக்கு: 9894791306

# விடுபட்டவர்களையும் இணைத்து நிவாரணம், காப்பீட்டு திட்ட முழு இழப்பீட்டு தொகையையும் வழங்கிடுக

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோரிக்கை

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

கடந்தாண்டு இறுதியில் பொழிந்த பெருமழை மயிலாடுதுறை மாவட்டத்தின் குறிப்பாக கீழ்ப்பகுதி வட்டாரங்கள் முழுமையாக பாதிக்கப்பட்டது.

சீர்காழி, தரங்கம்பாடி ஆகிய வட்டத்தில் உள்ள கிராமங்கள் பெரிய அளவு பாதிப்பு ஏற்பட்டன. வேறு வழியின்றி கொள்ளிடத்தில் மூன்று முறை திறந்து விடப்பட்ட கூடுதல் தண்ணீரால் மழை பொழிவு முடிந்தும் கிராமங்களில் வயல்வெளிகளில் தண்ணீர் வடிய இயலாமல் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. தமிழக முதல்வர் மழையிலும் வந்து பார்வையிட்டு ஆறுதல் கூறினார்கள். தொடர்ந்து நாங்களும் நேரில் சென்று பார்வையிட்டு அரசிடம் உரிய உதவி கேட்டு விண்ணப்பித்தோம்.

இந்த நிலையில் விவசாயிகளுக்கு ஒரு ஏக்கர் நெல் சாகுபடி இழப்பீடாக பேரிடர் ஆணையம் வரன்முறையின்படி ரூபாய் 5400 மற்றும் பயிர் காப்பீடு திட்டத்தின் மூலம் ரூபாய் 8,762 தமிழக அரசின் சார்பில் முன் பணமாக வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்து கொடுத்து வருவதை பாராட்டுகிறோம். இதன் மூலம் ஒரு ஏக்கர் நெல் சாகுபடிக்கு 14,162 ரூபாய் மட்டுமே கிடைக்கிறது. பெரும்பகுதி நெல் பயிர்கள் முழுமையாக அழிந்து, தான் செலவு செய்த தொகையையும் எதிர்கால குடும்ப தேவைக்கான வருமானத்தையும் இழந்துவிட்ட இந்த விவசாயிகளுக்கு இந்த தொகை போதுமானது அல்ல. மேலும் மாவட்டத்தில் பாதிப்புகளான பல கிராமங்கள் விடப்பட்டுள்ளன.

முழு பாதிப்பிற்கு காப்பீடு திட்டத்தின் மூலம் 80% தொகையாக ரூபாய் 26,140 கிடைக்க பெறும்.எனவே இதில் தற்போது வழங்கப்படும் காப்பீடு தொகை ஏக்கருக்கு ரூபாய் 5,400 போக எஞ்சிய தொகையையும் பின் வழங்கிட உரிய உறுதியை முதல்வர் அவர்கள் விவசாயிகளுக்கு அறிவித்து அமல்படுத்திட வேண்டும். மேலும் விடுபட்டுள்ள கிராமங்களையும் இணைத்து நிவாரணம் இழப்பீடு வழங்கிட வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

## தோழர் எஸ்.சி.கே. நூற்றாண்டு நிகழ்வு



தோழர் எஸ்.சி.கிருஷ்ணன் நூற்றாண்டு தொடக்க நிகழ்வு மேட்டூர் அனல் மின்நிலையம் முன்பு நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு எஸ்.சரவணன் தலைமை தாங்கினார்.

செயலாளர் வி.ராஜேந்திரன், எஸ்.சி.கே.வும் மின்சாரதொழிலாளர்களும் என்கிற தலைப்பில் பேசினார். தலைவர் ஆர்.ராஜ்குமார் அனல்மின் நிலையமும் – எஸ்.சி.கே.வும் என்கிற தலைப்பில் பேசினார். சிஐடியு செயலாளர் செந்தில்வேலன் இன்றைய சூழலில் எஸ்.சி.கே. வின் தேவை குறித்து விளக்கினார்.

மூத்த தோழர் தங்கவேலு எஸ்.சி.கே. திருவுருவத்திற்கு மாலை அணிவித்தார். முதுபெரும் தோழர் இராமசுப்ரமணியம் மேட்டூர் திட்டசெயலாளர் சண்முகம் உள்ளிட்ட சம்மேளன தோழர்கள் பங்கேற்றனர். அனல்மின் நிலைய பொருளாளர் ஜி.சம்பத்குமார் நன்றி கூறினார்.

மேட்டூர்,ஈரோடு,நாமக்கல்,சேலம்,மேட்டூர் பணிமனை உள்ளிட்ட விநியோக வட்ட அலுவலகங்கள் முன்பும் நூற்றாண்டு நிகழ்வுகள் நடைபெற்றது.

## அரியலூர் நகரில் செயலற்ற சிக்னல் விளக்கு

மாவட்டத் தலைநகரமான அரியலூர் நகரத்தில் கல்லங்குறிச்சி சாலை பைபாஸ் ரோடு ரவுண்டானா, கலெக்டர் ஆபீஸ் ரோடு பைபாஸ் ரவுண்டானா என இரண்டு மையமான இடமும் பேருந்துகள், கல் சுண்ணாம்புக்கல் லோடு உள்ளிட்ட ஏராளமான கனரக வாகனங்கள் சென்று வரக்கூடிய ரோடு. மேலும் ஏராளமான இலகுரக வாகனங்கள், இருசக்கர வாகனங்கள், ஆட்டோ, மற்றும் பொதுமக்கள் சென்றுவரும் சாலைப் பகுதியாகும்.

போக்குவரத்து மிகுந்த இச்சாலையில் விபத்து ஏற்படாமல் தடுத்து ஒழுங்குபடுத்திட, மேற்கண்ட பைபாஸ் ரோடு இரண்டு ரவுண்டானாக்கள், நகரத்தில் பேருந்து நிலையம் அருகில் அண்ணாசிலை ரவுண்டானா, மற்றும் நகரத்திற்குள் முக்கியசாலை சந்திப்பு ஆகியவற்றில் தானியங்கி சிக்னல் விளக்கு அமைக்கப்பட்டது. எந்த இடத்திலும் மேற்கண்ட சிக்னல் விளக்கு பயன்பாட்டிற்கு வராமல் செயலற்று காட்சி பொருளாக உள்ளது.

ஆகவே சம்பந்தப்பட்ட அரசு துறை விரைந்து செயல்பட்டு மேற்காணும் சிக்னல் விளக்குகளை பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும்.

## போக்குவரத்து கழக ஓய்வூதியர் ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மதுரை மண்டல ஓய்வு பெற்ற தொழிலாளர்கள் சார்பில், மதுரை மண்டல தலைமையக நிர்வாக இயக்குனர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாநில துணை பொது செயலாளர் எம். நந்தாசிங் கோரிக்கைகளை விளக்கி பேசினார். இதில் சங்க நிர்வாகிகள் திரளாக பங்கேற்றனர்.

தமிழ்நாடு அரசு ஓய்வூதிய நிலுவைத் தொகையை வழங்க வேண்டும் என்ற உயர்நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்ததை திரும்ப பெற வேண்டும், மருத்துவ காப்பீடு வழங்க வேண்டும், வாரிசு பணி தொழிலாளர்களுக்கு பணி நியமனம் வேண்டும், ஓய்வு பெற்றுள்ள தொழிலாளர்களுடைய பண பலன்களை உடனடியாக தாமதமின்றி வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பப்பட்டன. நிர்வாக இயக்குனரிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

## மதுரை எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி தலைவர் டாக்டர் வி.நாகராஜன் மறைவு

### சமூக சமத்துவத்திற்கான டாக்டர் சங்கம் இரங்கல்

சமூக சமத்துவத்திற்கான டாக்டர் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளதாவது:

மதுரை எய்ம்ஸ் மருத்துவ கல்லூரியின் தலைவரும், சிறந்த மூளை நரம்பியல் மருத்துவ நிபுணருமான டாக்டர் வி.நாகராஜன் மாரடைப்பால் காலமானார் என்ற செய்தி மிகுந்த அதிர்ச்சியையும்,துயரத்தையும் அளிக்கிறது. ஒரு மிகச் சிறந்த நரம்பியல் நிபுணரை தமிழ்நாடு இழந்துவிட்டது. சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் தனது அஞ்சலியை செலுத்துகிறது.

டாக்டர் வி.நாகராஜன் அவர்களை பிரிந்து வாடும் அவரது துணைவியார் மோகனராணி நாகராஜன்,மகள் கிருத்திகா ராதாகிருஷ்ணன், மருமகன் தமிழ்நாடு அரசின் தற்போதைய கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், பேரன் டாக்டர் அர்விந் ராதாகிருஷ்ணன் ஆகியோருக்கும் இதர குடும்பத்தினர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலை சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# தமிழ்நாடு முழுவதும் பொங்கல் விழா



**விருதுநகர்:** விருதுநகர் மாவட்டத்தில் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பொங்கல் வைத்து கட்சி கொடி ஏற்றப்பட்டது. வத்திராயிருப்பில் வட்ட செயலாளர் கோவிந்தன் தலைமையில் தேசிய குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ கொடியை ஏற்றினார். சேத்தூரில் நகர செயலாளர் ராஜா தலைமையில் மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ்.எம்.பி. ஏற்றி வைத்தார். வழக்கறிஞர் பகத்சிங், வீராச்சாமி, ராஜகுரு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் நகர செயலாளர் மூர்த்தி தலைமையில் ஒன்றிய செயலாளர் பலவேசம் கொடி ஏற்றி வைத்தார் . செல்வம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். திருச்சுழி கொட்டாங்கச்சிலில் கிளை செயலாளர் சின்னையா தலைமையில், ஒன்றிய செயலாளர் செல்வம் கொடி ஏற்றி வைத்தார். இளங்கோ உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இராஜபாளையத்தில் நகர செயலாளர் விஜயன் தலைமையில் மாவட்ட நிர்வாககுழு உறுப்பினர் வி.இரவி கொடி ஏற்றி வைத்தார். சத்திரப்பட்டியில் ஒன்றிய செயலாளர் இராமச்சந்திரன் தலைமையில் ஏஐடியுசி மாவட்ட செயலாளர் முத்துமாரி கொடி ஏற்றி வைத்தார். மற்றும் மாவட்டம் முழுவதும் கொடி ஏற்றப்பட்டது.

**மதுரை:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தெற்கு பகுதி குழு ஜீவா நகர் புலிப்பாண்டி, வீரவாஞ் சிநாதன் கிளை சார்பாக பொங்கல் விழா தெற்கு பகுதி செயலாளர் பா.சுமதி தலைமையில் சிறுவர், சிறுமியர்களுக்கான நடன, நாட்டிய, போட்டி, பெண்களுக்கான வண்ணக்கோலங்கள் இடும் போட்டிகளும் நடைபெற்றது.

மார்க்ஸிஸ்ட் கட்சியின் தோழரும், மதுரை மாநகராட்சியின் துணை மேயருமான ஜி. நாகராஜன் சிறப்பு விருந்தினராக பங்கேற்று போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு நினைவு பரிசுகள் வழங்கி நிகழ்ச்சிக்கு சிறப்பு செய்தார்.

மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முருகன், துணைச்செயலாளர் சி.தாமஸ், ஏஐடியூசி மாவட்ட தலைவர் எம்.நந்தாசிங், மாவட்ட பொறுப்பாளர்கள் இரா.ஜெயராமன், ராஜலட்சுமி, ரவிச்சந்திரன் பகுதி பொறுப்பாளர்கள் சி.ஆர்.பாலாஜி, அய்யனார், வி.ராமச்சந்திரன், ஏஐஓய்எப் பழனிமுருகன் ஆகியோர் நிகழ்வில் பங்கேற்றனர்.

**கோவை:** கோவை வெங்கிட்டாபுரம் பூபேஷ்குப்தா நினைவு படிப்பகமும், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றமும் இணைந்து நடத்திய 17 ஆம் ஆண்டு பொங்கல் விழா விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது.

விளையாட்டுப் போட்டிகளை இஸ்கஃப் அமைப்பின் மாநில பொதுச் செயலாளர் வழக்கறிஞர் எஸ்.ராதாகிருஷ்ணன் துவக்கி வைத்தார்.

பரிசளிப்பு விழா நிகழ்வுக்கு கிளைச் செயலாளர் ஜெ.பத்மநாபன் தலைமை தாங்கினார். எம்.சதாம் உசேன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

கொங்கு நாடு கலை அறிவியல் கல்லூரியின் பேராசிரியர் முனைவர் இரா.மணிமேகலை சிறப்புரையாற்றினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்ட பொருளாளர் சி. தங்கவேல் வாழ்த்துரை வழங்கினார்.

இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் வே.வசந்தகுமார், கலை இலக்கிய பெருமன்றத்தின் மாவட்ட செயலாளர் ப.பா.ரமணி, மாமன்ற உறுப்பினர் மல்லிகா புருஷோத்தமன் ஆகியோர் பரிசுகளை வழங்கி சிறப்பித்தனர்.

கார்ல் மார்க்ஸ் ஆவணப்படம் திரையிடப்பட்டது. அப்படத்தின் கலைஞர்களை பாராட்டி நினைவுப்பரிசுகள் வழங்கப்பட்டன.

**உளுந்தூர்பேட்டை:** அனைத்து பத்திரிகையாளர் சங்கம் மாநிலத் தலைவர் டாக்டர் ராஜேந்திரன் தலைமையில் கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையில் இருளர் பழங்குடி 30 குடும்பங்கள் வாழும் குடியிருப்பு பகுதியில் சென்று பொங்கல் வைத்து கொண்டாடப்பட்டது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் எம்.வெங்கடேசன், மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் மகேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வி.தொ.ச. கிருஷ்ணராயபுர ஒன்றிய மாநாடு

தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் கிருஷ்ணராயபுரம் ஒன்றிய 6 வது மாநாடு பஞ்சப்பட்டியில் விஏஓ அலுவலகம் அருகில் ஒன்றிய செயலாளர் எம்.ஆண்டியப்பன் தலைமையில் நடைபெற்றது.

சங்கத்தின் கொடியை விடுதலை போராட்ட வீரர் ஏ.பழனியப்பன் ஏற்றி வைத்தார். மாநாட்டை துவக்கி வைத்தும், சங்கத்தின் கடமைகள் குறித்தும் மாநில நிர்வாக குழு உறுப்பினர் பி.கணேசன் சிறப்புரையாற்றினார்.

மாவட்ட தலைவர் பி.பாலன், மாவட்ட செயலாளர் ஆர்.தங்கவேல், மாவட்ட துணை செயலாளர் எம்.பி.செல்வம் ஆகியோர் மாநாட்டை வாழ்த்திப் பேசினர்.

ஒன்றிய தலைவராக பி.மாணிக்கம், ஒன்றிய செயலாளராக எம்.ஆண்டியப்பன், ஒன்றிய துணை தலைவராக அண்ணாத்துரை, ஒன்றிய துணை செயலாளராக பி.காளியப்பன், ஒன்றிய பொருளாளராக ஆர்.கண்ணன் ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

## எஸ்.ஏ.அம்பிகாபதி 27 ஆம் ஆண்டு நினைவு தினம்

திருத்துறைப்பூண்டி அண்ணா நகர் 23 வது வார்டு சார்பில் விவசாயத் தொழிலாளர்களின் நலனுக்காக பாடுபட்ட எஸ்.ஏ.அம்பிகாபதி 27 ஆம் ஆண்டு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி கிளைச் செயலாளர் பி.குமார் தலைமையில் நடைபெற்றது. கே. உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, ஒன்றிய பெருந்தலைவர் அ.பாஸ்கர், மாவட்ட பொறுப்பாளர்கள் பி.வி.சந்திர ராமன், வி.முத்துக்குமரன், எல். பக்கிரிசாமி, எம்.முருகேசன், டி.பி.சுந்தர், நகர பொறுப்பாளர் டி.ராமலிங்கம், எச்.காந்தி, தாஜுதீன், வழக்கறிஞர் சிவசாகர், கார்த்தி, கிளை சார்பில் ஏ.கிட்டு, அன்பழகன், வீரமணி, ரமேஷ், மாணிக்கம், காத்தையன், பன்னீர், பேபி, நீலாவதி ஆகியோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

## குடிநீர் தொட்டியில் மலம் கலந்த வழக்கில் சிபிசிஐடி விசாரணை: இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு

புதுக்கோட்டை மாவட்டம் இறையூர் வேங்கை வயல் கிராமத்தில் தலித் மக்கள் குடியிருப்பில் குடிநீர் தொட்டியில் மனித கழிவு கலந்தது மிகுந்த அதிர்ச்சியளிக்கும் சம்பவமாகும். நாகரீக சமுகத்தில் ஏற்க முடியாத இத்தகைய நிகழ்வுகளை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டித்து வருகிறது.

விசாரணையை தீவிரப்படுத்தி சம்மந்தப்பட்ட குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தி உரிய தண்டனை வழங்க, தமிழ்நாடு அரசு, விசாரணையை சிபிசிஜடிக்கு மாற்றியிருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு வரவேற்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# ஆளுநர் ரவி பதவி விலக வலியுறுத்தி தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம்




தமிழ்நாடு சட்டமன்றத்தில் தன்னுடைய அதிகார வரம்பை மீறி ஆணவத்துடன் அராஜகமாக நடந்து கொண்ட ஆளுநர் ரவியை கண்டித்து தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**திருப்பூர்:** ஆளுநர் ஆர்.என்.ரவியே தமிழ்நாட்டை விட்டு வெளியேறு என்று திருப்பூரில் அனைத்துக் கட்சியின் சார்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் எம்.ரவி கண்டன உரையாற்றினார்.

**கோவை:** கோவை டாடாபாத் பவர் ஹவுஸ் அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு கோவை மக்களவைத் தொகுதி உறுப்பினர் பி.ஆர். நடராஜன் தலைமை தாங்கினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம், மாவட்ட செயலாளர் சி.சிவசாமி, மாவட்ட துணை செயலாளர் ஜே.ஜேம்ஸ், மௌ.குணசேகர், சி.தங்கவேல், சிபிஎம் மாவட்ட செயலாளர் சி. பத்மநாபன், யு.கே. சிவஞானம், காங்கிரஸ் மாநகர் மாவட்ட செயலாளர் கருப்புசாமி, மதிமுக சேதுபதி, தந்தை பெரியார் திராவிடர் கழகம் ஷாஜி, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி தனபால், சிபிஐ மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் கே.எம். செல்வராஜ், எஸ். ராதாகிருஷ்ணன், வெ.வசந்தகுமார், கே. ரவீந்திரன், என்.சந்திரன், வி.ஆர்.பாண்டியன், ஏ.சி.செல்வராஜ், பேரறிவாளன், ஆதித்தமிழர் பேரவை கோவை ரவிக்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**காஞ்சிபுரம்:** காஞ்சிபுரம் மாவட்ட ஆலந்தூர் தொகுதியில் சிபிஐ மாவட்ட துணைச் செயலாளர் ஜா.பூபாலன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் பா.கார்த்திக் கண்டன உரையாற்றினார். மாவட்ட குழு உறுப்பினர்கள் முனுசாமி, வெங்கடேசன், தொகுதி குழு உறுப்பினர்கள் மதி, தரணி, ராஜேந்திரன், சேகர், பல்லாவரம் கிளைச் செயலாளர் ரவி மற்றும் 30க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**வடசென்னை:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடசென்னை மாவட்டம் சார்பாக தண்டையார்பேட்டை தபால் நிலையம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சிபிஐ மாவட்ட துணை செயலாளர் எம்.ஜெய்சங்கர் தலைமை தாங்கினார். சிபிஐ மாவட்ட பொருளாளர் கீ.சு.குமார், ஏஐடியுசி மாவட்ட தலைவர் எஸ்.எஸ்.மூர்த்தி, சிபிஐ மாவட்டச் செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி, இந்திய மாதர் தேசிய சம்மேளனம் மாவட்டச் செயலாளர் ஜி.செண்பகம் ஆகியோர் கண்டன உரையாற்றினர். சிபிஐ மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் நிறைவுரையாற்றினார். சிபிஐ மாவட்ட துணை செயலாளர் ஜி.சுப்ரமணி நன்றி கூறினார். 42வது வார்டு மாமன்ற உறுப்பினர் எம்.ரேணுகா உட்பட்ட 100க்கும் மேற்பட்ட தோழர்கள் திரளாக பங்கேற்றனர்.

# மருத்துவர் இல்லாமல் செவிலியர் பிரசவம் பார்த்து தாய், சிசு உயிரிழப்பு

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி போராட்டம்

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு அருகில் வ.புதுப்பட்டியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. அந்த கிராமத்திலுள்ள ராம்குமார் மனைவி அரங்கநாயகி (18) பிரசவத்திற்காக வ.புதுப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சேர்க்கப்பட்டார். அங்கு மருத்துவர் இல்லை . செவிலியரே பிரசவம் பார்த்தார். சுகப்பிரசவம் மூலம் குழந்தை பிறந்தது. சிறிது நேரத்தில் குழந்தைக்கு மூச்சு திணறல் ஏற்பட்டு உயிரிழந்தது. மருத்துவமனையில் ஆக்ஸிஜன் வசதி இல்லை. மருத்துவரும் வரவில்லை. அரங்கநாயகிக்கு அதிக ரத்தப்போக்கு ஏற்பட்டதால் செவிலியர் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். ஆனால் வழியிலேயே அரங்கநாயகி இறந்தார்.

வத்திராயிருப்பில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தாய், சிசு உயிரிழந்ததற்கு நீதி கேட்டு ஆர்ப்பாட்டம் நடந்தது.

வட்ட செயலாளர் கோவிந்தன் தலைமை வகித்தார். தேசிய குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, தலைவாஇ மாவட்ட செயலாளர் எஸ்.பழனிக்குமார், தவிச சவுந்திரபாண்டியன் உள்ளிட்டோர் . மருத்துவர் ,செவிலியர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும், குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வழங்க வேண்டும் என பேசினார்கள். அரங்கநாயகியின் கணவர் ராம்குமார் உள்பட அவரது உறவினர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டார்கள்.

# ஆதித்யவர்தன் நினைவுநாள்



சமூக விரோதிகள் மற்றும் அதிக்க சக்திகளை எதிர்த்து போராடிய தோழர். ஆதித்யாவர்தனஸ்ரீ அவர்கள் படுகொலை செய்யப்பட்டு 31 ஆண்டுகள் நிறைவு அடைந்து 32 ஆம் ஆண்டு நினைவுநாள், அனுசோனை கிராமத்தில் அனுசரிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தளி சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன், விவசாயிகள் சங்க மாநில துணை தலைவர் இலகுமையா, மாநில குழு உறுப்பினர்கள், மாவட்ட குழு உறுப்பினர்கள், கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு ஆதித்யாவர்தனஸ்ரீயின் கல்லறையில் மலரஞ்சலி செலுத்தினர்.

# நாமக்கல் மாவட்ட ஏஐடியூசி அலுவலகம் திறப்பு விழா



நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம் எஸ்.பி.பி. பேப்பர் மில் அருகில் ஆயக்காட்டூர் பகுதியில் நாமக்கல் மாவட்ட ஏஐடியூசி அலுவலகம் திறப்பு விழா ஜனவரி 15 அன்று நடைபெற்றது. ஜீவாசங்கத்தலைவர் ஆர்.நல்லப்பன் முன்னிலை வகித்தார்,

என்.செல்வராஜ் மாவட்ட செயலாளர் ஜீவா சங்கம் தலைமை வகித்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் கே.அன்புமணி அலுவலகத்தை திறந்து வைத்தார். எஸ்.ஜெயராமன் ஏஐடியூசி மாவட்ட தலைவர் துவக்கி வைத்தார். மற்றும் ஏஐடியூசி மாவட்ட பொதுச்செயலாளர் பி.தனசேகரன் சங்க பெயர் பலகையை திறந்து வைத்தார்.

ஏஐடியூசி மாவட்ட செயலாளர் எஸ்.ராமகிருஷ்ணன், வி.தொ.ச மாவட்ட செயலாளர் சி.ஜெயராமன், ஏஐடியுசி மாவட்ட பொருளாளர் கே.எஸ்.பாலசுப்பிரமணியம், சிபிஐ திருச்செங்கோடு நகர செயலாளர் எஸ்.சுகுமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

# கோயில்மனை குடியிருப்போர் சங்க பிரிதிநிதிகள் பொங்கல் திருநாள் சந்திப்பு நிகழ்ச்சி

சென்னை பாலன் இல்லத்தில், தமிழ்நாடு கோயில்மனை குடியிருப்போர் சங்க பிரிதிநிதிகள் பொங்கல் திருநாள் சந்திப்பு நிகழ்ச்சி ஆங்கில புத்தாண்டு 2023 உதயம், மற்றும் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, தமிழ்நாடு கோயில்மனை குடியிருப்போர் சங்க, தென்சென்னை, வடசென்னை, மத்தியசென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்ட நிர்வாகிகள் ஜனவரி 11 அன்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில தலைமை அலுவலகமான தி.நகர் பாலன் இல்லத்திற்கு சென்று, சிபிஐ மாநில செயலாளர் இரா.முத்தரசனை சந்தித்து வாழ்த்துக்களை பரிமாறிக்கொண்டனர். மேலும் எதிர்காலத்தில் சங்கத்தினை வழிநடத்துவது பற்றியும் ஆலோசனை மேற்கொண்டனர். இதில் தமிழ்நாடு கோயில்மனை குடியிருப்போர் சங்க மாநில தலைவர் வி.அ.பாலசுப்பிரமணியன், மாநில பொருளாளர் எஸ்.ஏழுமலை, மகளிர் அணி அமைப்பாளர் போரூர் ஆர்.பூங்கொடி உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# அரியலூரில் ஏஐடியூசி ஆட்டோ சங்க துவக்க கொடியேற்று விழா



அரியலூரில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மேற்கு நுழைவுவாயிலில் (அரசுக் கல்லூரி அருகில்) ஏஐடியூசி ஆட்டோ தொழிலாளர் சங்க துவக்க விழாவும், பெயர் பலகை திறப்பு விழாவும், கொடியேற்று விழாவும் நடைபெற்றது.

மாவட்டப் பொதுச் செயலாளரும், சங்க கௌரவ தலைவருமான த.தண்டபாணி ஏஐடியூசி கொடியை ஏற்றி வைத்தார். சங்க துணைத் தலைவர் கே.அறிவொளி, தலைமையில் நடைபெற்ற விழாவில் சிபிஐ அரியலூர் நகரகிளை ந.கோவிந்தசாமி, நகராட்சி ஏஐடியூசி செயலாளர் ரெ.நல்லுசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தலைவராக பூ.சரவணன், செயலாளராக சி.ஏ.பி.பெரியசாமி, துணைத் தலைவர்களாக எஸ்.பி.அருண் ஆனந்த், சி.மணிவண்ணன், ஆர்.பாலாஜி, துணைச் செயலாளர்களாக மணி, குமார், பொருளாளராக எம். துரைமுருகன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# தோழர் கே.முருகையன் எக்ஸ்.எம்.பி. 18 ஆம் ஆண்டு நினைவேந்தல்

திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியம், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கே.முருகையனின் 18 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி குறிச்சி மூலை ஊராட்சியில் உள்ள அவரவது இல்லத்தில் நடைபெற்றது. தியாகி களப்பால் குப்புவின் வழிதோன்றலாய் தமிழ்நாடு விவசாய சங்கத்தின் தலைவராக மிக சிறப்பாக பணியாற்றியவர். கோட்டூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவராக இருந்த காலத்தில் அந்த பகுதி மக்களின் வாழ்க்கை தரம் முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்ட கே.எம்., இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒப்பற்ற தலைவராக வலம் வந்தவர். கே.எம். இம்மண்ணை விட்டு பிரிந்து 18 ஆண்டுகள் ஓடிவிட்டன. தோழரது நினைவேந்தல் நிகழ்ச்சியில் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் கே.உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ. கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினார். கட்சியின் கோட்டூர் ஒன்றிய செயலாளர் செந்தில்நாதன் நிகழ்ச்சிக்கு தலைமை ஏற்றார். நிகழ்ச்சியில் திருத்துறைப்பூண்டி சட்டபேரவை உறுப்பினர் க.மாரிமுத்து, எம்.எஸ்.ஆர், குறிச்சி மூலை ஊராட்சி மன்ற தலைவர் கே.எம். அறிவுடைநம்பி, கிளை செயலாளர் மகேந்திரன் மற்றும் 500க்கும் மேற்பட்ட தோழர்கள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

## இந்த வார தம்பிக்குறள்

### 104. கல்வி

**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவழியா**
**மாந்தர்க் குதவுமாம் வந்து.**

ஒருவன் தான் முயன்று கற்கும் கல்வியானது முடிவில் அது மக்களுக்கு பயன்படும்படியாக அமைய வேண்டும். (அமையும்)

**உலகத்துள் உற்றதுணை ஒன்றுண்டாம் அத்துணை**
**நற்றுணை கல்வித் துணை.**

உலகவாழ்க்கைக்குமிகச்சிறந்ததுணையாக ஒன்று உண்டு. அது கல்வித்துணையே. (கல்வியின் ஊங்கில்லை சிற்றுயிர்க் குற்ற துணை – நாலடியார்) அத்துணையை நீங்காது பெறுக.

# நூல் நயம்

## அம்பேத்கரியர்கள் நெருக்கடியும் சவால்களும்




இன்றைய உலகமய சூழலில் பல்வேறு சித்தாந்தங்களும் தத்துவங்களும் நெருக்கடிகளுக்கும் , சவால்களுக்கும் உள்ளாகியுள்ளன. அதே நெருக்கடி அம்பேத்கரியர்களுக்கும் ஏற்பட்டுள்ளது. இது குறித்த முனைவர் ஆனந்த் டெல்டும்டேவின் சொற்பொழிவே ‘அம்பேத்கரியர்கள் நெருக்கடியும் சவால்களும்‘ என்னும் இந்நூல்.

இந்தியாவின் உள்நாட்டு ஏகாதிபத்தியமான சாதியத்தின் ஒடுக்குமுறை ,இந்திய முதலாளித்தத்தை இயக்குவிக்கும் வெளிநாட்டு ஏகாதிபத்தியத்தின் சுரண்டல் ஆகிய இரண்டும் முன் எப்போதையும்விட கூர்மையான வடிவங்களை மேற்கொண்டுள்ள இந்த காலகட்டத்தில். அம்பேத்கரிய சிந்தனையின் பெயரால் இயங்கும் அமைப்புகள் பற்றிய மதிப்பீட்டையும், அந்த அமைப்புகளில் முக்கியமான பல எவ்வாறு மேற்சொன்ன இரு ஏகாதிபத்தியங்களின் முகவர்களாக செயல்படும் அரசியல் கட்சிகளுடன் அணி சேர்ந்துள்ளனர் என்னும் விமர்சனத்தை முன் வைத்துள்ளார் முனைவர் ஆனந்த் டெல்டும்டே.

இன்றைய இந்தியாவின் அபாயமாக விளங்கும் இந்துத்துவ மதவெறிபாசிச சக்திகளுடன் பல்வேறு அம்பேத்கரிய இயக்கங்கள் கூட்டு சேர்ந்துள்ளன என்பதும் கவலைக்குரியது. ஒடுக்கப்பட்ட மக்களை அச்சுறுத்துகிற அதே காவி பயங்கரவாதிகளுடன் கூட்டு சேர்ந்து எவ்வாறு அம்பேத்கரின் சிந்தனைகளை மேல் எடுத்துச் செல்ல முடியும் என்பது கேள்விக்குறியாக உள்ளது. சில அம்பேத்கரிய சிந்தனைவாதிகள் நட்பு முரணையும், பகை முரணையும் பிரித்தறிய முடியாத குழப்பத்தில் தத்தளிக்கிறார்கள். எனவே இந்தியாவில் மார்க்சிய மரபுக்கும், அம்பேத்கர் மரபுக்கும் ஒரு இணைப்பு பாலம் அவசியம் தேவைப்படுகிறது. இதன் மூலமாகத்தான் இன்றைய அபாயத்தை கடந்து ஒரு சமூக நல்லிணக்கத்தை நம்மால் படைக்க முடியும்.

சித்தாந்த ரீதியாக வகுப்பு வாதிகளுக்கு பெரும் சவாலாக விளங்கியவர் ஆனந்த் டெல்டும் டே. இதனால்தான் அவர் பொய் குற்றச்சாட்டின் பேரில் பல ஆண்டுகாலம் சிறையில் வதைபட நேர்ந்தது. இனியாகிலும் தத்துவார்த்த நெருக்கடிகளையும், சவாலையும் முன் உணர்ந்து, அவற்றை முறியடித்து முன்னேறுவதற்கு நாம் முயல வேண்டும் என்பதை காலத்தே உணர்த்திய நூல் இது. இந்நூலை அனைவரும் வாங்கி படிக்க வேண்டுகிறோம்.

– இன்சுவை பாரதி

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | ஆனந்த் டெல்டும் டே |
| பக்கம் | : | 56 விலை: 60 |
| வெளியீடு | : | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 50 |

## தெய்வங்களும் பண்பாட்டு அசைவுகளும்




மிழ்நாட்டின் தாய் தெய்வ வழிபாட்டு முறைகளும், அவை உருவாக்கிய பண்பாட்டு அசைவுகள் குறித்தும் இந்நூல் விரிவாக பேசுகிறது.

பழம் தமிழர்களின் தாய் தெய்வ கோவில்களாக அம்மன் கோயில்கள் விளங்குகின்றன.பழம் தமிழர்களின் தாய் தெய்வம், அரசுகள் உருவானபோது போர்த் தெய்வமாக மாற்றப்பட்டு ‘கொற்றவை’ என்ற பெயரோடு வழங்கப்பட்டது இப்பெருக்கான வேர் சொல், ‘கொல் என்பதாகும்.பெருந்தெய்வ கோவில்களில் ஆண் தெய்வத்திற்கு அருகில் நின்று கொண்டு அல்லது அமர்ந்து கொண்டிருக்கும் உமை, திருமகள் ஆகிய தெய்வ படிமங்களின் கையில் நீலம், தாமரை ஆகிய மலர்களே இருக்கும்.ஆனால் தாய் தெய்வங்களோ பெரும்பாலும் சிங்கத்தின் மீது அமர்ந்த கோலத்தில் . நான்கு அல்லது எட்டு கைகளுடன், எல்லா கைகளிலும் ஆயுதங்கள் ஏந்தி படி போருக்கு ஆயத்தமான நிலையில் உள்ளன.இவை ரத்த பலி பெறுகின்ற தெய்வங்களாகும். எனவே இவற்றின் பூசாரிகளாக பண்டாரம், வேளார் (குயவர்), உவச்சர் (கம்பர் ) போன்ற பார்ப்பனர் அல்லாத சாதியினரே உள்ளனர் .

ஆனால் பிற்காலத்தில் கிழக்கிந்திய பகுதியில் இருந்து வந்த காளி வழிபாடும், அது குறித்த கதைகளும் பழைய தாய் தெய்வ வழிபாட்டோடு இணைக்கப்பட்டன. இந்த இணைப்பு வைதிக மதத்தின் எழுச்சியால் உருவானதாகும்.தமிழ்நாட்டில் பல்லவ, பாண்டிய, சோழ அரசர்களின் காலத்தில் சைவ, வைணவ சமயங்கள் பேரெழுச்சி பெற்றன. இருந்த போதிலும் , வைதிகத்தின் முயற்சிகளால் தாய் தெய்வத்தின் தனித்தன்மையை முற்றிலுமாக அழித்துவிட முடியவில்லை.சிவன், திருமால் ஆகிய பெருந்தெய்வ கோவில்களில். அம்மன் சன்னதி, தாயார் சன்னதி ஆகிய பெயர்களில் தாய் தெய்வம் குடியமர்த்தப்பட்டுள்ளது.இருந்தபோதிலும் ‘ஆண் வாடையின்றி’ தனியாக தாய் தெய்வம் அமர்ந்துள்ள கோவில்களே தமிழ்நாட்டில் இன்றும் அதிகம் காணப்படுகின்றன.

எனவே தமிழ்நாட்டின் பண்பாட்டு அசைவுகளை நாம் தாய் தெய்வ வழிபாட்டில் இருந்து அறிந்து கொள்ள முடியும். தெய்வங்களைப் பற்றி பேசாமல் ஒரு பண்பாட்டினை ஆய்வு செய்ய இயலாது. பேராசிரியர் தொ. பரமசிவன் அவர்களின் கள ஆய்வு அடிப்படையிலான நூல் இது. இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம்.

–சமரன்

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | தொ: பரமசிவன் |
| பக்கம் | : | 200 விலை :215 |
| வெளியீடு | : | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 50 |

# மக்கள் நினைவில் வாழும் தலைவர் பி.பக்கிரிசாமி



அ.பாஸ்கர்

ஒன்றுபட்ட தஞ்சாவூர் மாவட்டத்தின் கிழக்குப் பகுதியில், வீரம் விளையும் மண்ணாக திகழும் முத்துப்பேட்டை வட்டாரத்தில் உள்ள ஓவரூர் கிராமத்தில் பிறந்தவர் தோழர். பி பக்கிரிசாமி. சாதிய அடுக்கு முறையில் கட்டமைக்கப்பட்ட சமூகத்தில், அடித்தளத்தில் ஒடுக்கப்பட்ட சமூகப் பிரிவு அடையாளம் பெற்றவர். மிகவும் பின்தங்கிய கிராமத்தில் உழைக்கும் மக்களோடு சேர்ந்து செங்கொடி இயக்கத்தில் பணியாற்றத் தொடங்கியவர். அவரது பள்ளிப் படிப்பும், பட்டறிவும் அவரை விரைவில் கிராம கமிட்டியின் செயலாளராக உயர்த்தியது.

அரசியல் வழிப்பட்ட பொது வாழ்வில் அவர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை துணைச் செயலாளர், கிளை செயலாளர், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் ஒன்றிய தலைவர் மற்றும் ஒன்றியச் செயலாளர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய செயலாளர், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர், மாநில குழு உறுப்பினர், தமிழ்நாடு விவசாய சங்கத்தின் மாவட்ட தலைவர், மாநில துணைத்தலைவர் என பல்வேறு பொறுப்புகளை ஏற்று சிறப்பாக பணியாற்றி அனைவரும் ஏற்கதக்க தலைவராக வாழ்ந்தவர்.



ஒன்றுபட்ட தஞ்சாவூர் மாவட்டம் பிரிக்கப்பட்டு தஞ்சாவூர், நாகை, திருவாரூர் என மூன்று மாவட்டங்களாக உருவானது.

ஊரக ஊராட்சிகள் தான் ஜனநாயகத்தின் பயிற்சிக் களமாக விளங்குவது. மக்களின் அன்றாட வாழ்வில் இரண்டறக் கலந்து நிற்பது. அரசு அதிகாரத்தின் அடித்தளமாக அமைந்திருப்பது. இதற்கான தேர்தல் நடத்தப்படாமல் ஆளும் அதிகார வர்க்கத்தின் ஆதிக்கத்தில் இருந்து வந்தது.

ஊரக மற்றும் நகர்புற அமைப்புகளில் மக்கள் பிரதிநிதிகள் செயல்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் ஒன்றிய அரசு, அரசியல் அமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்து, பஞ்சாயத் ராஜ், நகர் பாலிக சட்டங்களை நிறைவேற்றியது. புதிய சட்டங்கள் படி 1996 உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடைபெற்றது. இதில் திருவாரூர் மாவட்ட ஊராட்சிக்கு கம்யூனிஸ்டு கட்சி தலைமை ஏற்கும் வாய்ப்பு வாய்த்தது. புதிய சட்டம். புதிய முறை நிர்வாகம், இதில் யாரை தலைமை ஏற்க செய்வது என்ற கேள்வி எழுந்தது. “இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்” என்ற குறள் வழி நின்று, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, திருவாரூர் மாவட்ட ஊரட்சிக் குழுத் தலைவராக தோழர் பி.பக்கிரிசாமியை தேர்வு செய்தது. அந்தப் பொறுப்பில் அவர் ஆற்றிய அரும் பணிகள் என்றென்றும் மக்கள் மனதில் நிலைத்து நீடிக்கும்.

ஆங்கிலக் கல்வியும், உயர்கல்வியும் பெறும் வாய்ப்பு அவருக்கு எட்டாது போனது. ஆனாலும் கம்யூனிஸ்ட் கட்சி என்ற சர்வ கலா சாலையில் பயின்று தேறியவர். விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள், வர்த்தகர்கள் என அனைவரது நன் மதிப்பையும் பெற்றவர். சாதி, மதம்,என்ற எல்லா எல்லைகளையும் கடந்து, தலைசிறந்த மனிதராக வாழ்ந்து காட்டியவர்.

சொல்லுக்கும், செயலுக்கும் நூலிழை அளவும் வித்தியாசம் இல்லாத வாழ்க்கையின் வாழும் அடையாளமானவர். புதிய புதிய செய்திகளை தெரிந்து கொள்ள வேண்டும் என்ற தேடல், அடங்காப் பசி கொண்டோர் உணவு தேடி அலைவது போல், வெறிகொண்டு அலைந்து பல்வேறு தகவல்களை சேகரித்து செறிவு படுத்திக் கொண்டவர்.

கற்றறிந்த உயர்நிலை அதிகாரிகளை தனது பட்டறிவு நுட்பத்தால் திணற வைக்கும் வல்லமை கொண்டவர். விவசாயிகளின் நலனுக்காகவும் உரிமைகளுக்காகவும் தொடர்ந்து போராடியவர், சிறைச்சென்றவர். போராட்டங்களில் ஆறடி உயரமும், கட்டுமஸ்தான உடலைப்பும் கொண்ட பி.பக்கிரிசாமி, வாரி அழுத்தி சீவப்பட்ட சிகை, கறுத்த வட்ட முகம், கம்பீரமாக முறுக்கிவிடப்பட்ட மீசை, உருட்டி திரட்டும் கண்கள், அதற்கு மேலும் அழகூட்டும் அடர்த்தியான புருவங்கள், தும்பைப் பூ நிறத்தில் வேட்டி, சட்டை, கம்பீரத்தின் அடையாளமாக தோளில் போட்டிருக்கும் சிவப்பு துண்டு. அட, அடா. அந்த மாவீரன் நடந்து வரும் மிடுக்கு நடை, பார்ப்போர் கரம் கூப்பி வணங்குவர்.

காவிரி டெல்டா மாவட்டங்களில் ஏற்படும் புயல், வெள்ளம், இயற்கை இடர்பாடுகளில் மக்களை பாதுகாப்பதற்கு நிவாரண உதவிகளை பெற்றுக் கொடுப்பதற்கு பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உயர்நிலை அதிகாரிகளையும், மக்கள் பிரதிநிதிகளையும், கட்சியின் மாநில தலைவர்களையும் அழைத்துச் சென்று மக்களுக்கு ஆறுதல் கூறுவதிலும் மாற்றுத் திட்டத்திற்கான ஆக்கப்பூர்வமான அரிய யோசனைகளை எடுத்துக் கூறும் ஆற்றல் பெற்றவர் தோழர் பி.பி.முத்துப்பேட்டையில் ஏற்படும் சாதி மத கலவர காலங்களில், சமூக அமைதி குலையாமல் பாதுகாத்து நிற்பதில் அரணாக திகழ்ந்தவர். அவர் வாதத்திறனால், பதற்ற நிலையை தணித்து, சமூக நல்லிணக்கம் பேணிய மனித நேயர்.

ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக போராடி துப்பாக்கிக் குண்டை மார்பில் தாங்கி, “செங்கொடி வாழ்க” என “உரத்து முழுங்கி, மண்ணில் சாய்ந்த “தியாகி சிவராமன்“ நினைவாக, முத்துப்பேட்டை நகரத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய அலுவலகத்தை கட்டி எழுப்பியவர்

திருத்துறைப்பூண்டி ஒன்றியம் .நகரம் முத்துப்பேட்டை ஒன்றியம் இவைகளின் ஒரு பகுதியின் வடிகால் வளவனாறு. இதன் கரைகள் அகலமும் உயரமும் இல்லாமல் தூர்வாரப்படாமல் மழைக்காலங்களில் கரைகள் உடைப்பெடுத்து ஆண்டுதோறும் 200க்கும் மேற்பட்ட கிராமங்கள் நீரில் மூழ்கி பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தும் வளவனாறு வடிகால் கடலில் கலக்கும் வடிகாலில் ஒன்று. விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள் மீனவர்கள் நலன் காக்க அன்றைய சட்டமன்ற உறுப்பினராக இருந்த கே. உலகநாதன் தலைமையில் அரசியல் பாகுபாடு இன்றி எல்லோரையும் ஒருங்கிணைத்து வளவனாற்றை சீர்படுத்த சிறப்பு திட்டம் வேண்டுமென தொலைநோக்கு பார்வையில் அரசுக்கு தீர்மானம் கொடுத்தவர்.

இதனை முன்னெடுத்து சட்டமன்றத்தில் கே. உலகநாதன் முயற்சியால், நிதிநிலை அறிக்கையில் தமிழக முதல்வர் வளவனாற்றை மேம்படுத்த சிறப்பு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்து கரைகள் பலப்படுத்தப்பட்டுள்ளது. இன்று வெள்ள அபாயத் திலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளது இதற்கு பி. பக்கிரிசாமி எடுத்துக் கொண்ட முயற்சியும் வழிகாட்டலும் என்றும் மறக்க இயலாது.

திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் பெரும் வெள்ள பெருக்கை ஏற்படுத்தும் ஆறு என்றால் மறைக்காகோரையாறு இதன் நீளம் 21கிலோ மீட்டர் தூரம் கடந்து செல்லும், சால்வனாறு, புது பாண்டியாறு, பழ பாண்டியாறு போன்ற ஆறுகளின் வடிகால் ஆறாக மறைக்கா கோரையாறு கடலில் கலக்கும் தண்ணீர் வடிய முடியாமல் கரை உடைப்பு எடுக்கும் நிலையில் மாவட்ட நிர்வாகம், பொதுப்பணித்துறையும் என்ன செய்வது என தெரியாமல் இருந்த நிலையில், தோழர் பி.பி அவர்கள் 15 ஊராட்சி மக்களை திரட்டி ஊதியம் இல்லாமல் சிரமதான பணியில் கொட்டும் மழையில் கரைதழும்பிய நீரில், அடர்ந்து பரந்து கிடந்த வெங்காய தாமரையையும், நீர் வடிய தடையாக இருந்த துளிரிகளையும் சுத்தம் செய்து 15 ஊராட்சிகளை வெள்ள அபாயத்தில் இருந்து பாதுகாத்த பெருமை பி.பி.க்கு உண்டு. மாவட்டம் முழுவதும் புது புது பாலங்களை கட்டி கிராமங்களை இணைத்தவர். ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் வரும் நிதியை முழுமையாக பயன்படுத்தி மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றியவர் பி.பி.

தோழர் பி. பக்கிரிசாமியின் அபார ஆட்சித் திறனை மதிப்பீடு செய்த தமிழ்நாடு அரசு, அவருக்கு “சிறந்த மாவட்ட ஊராட்சி தலைவர்“ விருது வழங்கி சிறப்பித்தது. இதன் மூலம் மாவட்டத்துக்கு பெருமை சேர்த்தவர். மனித உடம்பின் ஓடும் நரம்பு மண்டலம் போன்று தஞ்சை மண்டலத்தில் ஆறுகளும் அதன் வடிகால்களும் பின்னி பிணைந்து கிடக்கும். ‘இதுபற்றி ஆய்ந்து, தெளிந்தவர் தோழர் பி. பி.

இயற்கை இடர்பாடுகளில் இருந்து மக்களை பாதுகாக்கவும், விவசாயிகளின் நலனுக்காகவும் வாழ்ந்து சமூகத்தின் அடித்தள மக்கள் பிரச்சனைகளை அனுபவத்தால், உணர்ந்தும், சட்ட விதிகளை புரிந்தும், சமூக மாற்றத்திற்காக போராடி வந்தவர். அந்த மகத்தான போராளியின் உயிர் மூச்சு ஜனவரி 17ம் நாள் நின்றுவிட்டது.

(ஜனவரி 17, தோழர் பி.பக்கிரிசாமியின் 13ஆம் ஆண்டு நினைவு நாள்)

# தமிழ்நாடு என பெயர் சூட்டியதில் தி.மு.க.வுக்கும் கம்யூனிஸ்ட்களுக்கும் பங்கு உள்ளது

## சட்டமன்றத்தில் டி.ராமச்சந்திரன் பேச்சு

தளி சட்டமன்ற உறுப்பினர் இராமச்சந்திரன் ஜன.12 அன்று சட்டமன்றத்தில் ஆற்றிய உரை வருமாறு:



டி.இராமச்சந்திரன்: பேரவை தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். முதலமைச்சர் உள்ளிட்ட அவையோர் அனைவருக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் உரை என்பது மாநில அரசின் கொள்கைகளையும் சமூக நீதி மற்றும் மாநில உரிமைகளை பிரகடனப்படுத்துகின்ற உரையாக அமைந்திருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கிறேன்.

நம்முடைய அரசு ஆட்சி பொறுப்பேற்ற காலம் கொரோனா பேரிடர் காலம். கடுமையான நிதி நெருக்கடி, ஒன்றிய அரசு மாநில அரசிற்கு வழங்க வேண்டிய நிதி ஆதாரங்களை வழங்காமல் பாராபட்சம் காட்டி வந்த நிலையில் தமிழகத்தில் மட்டுமல்ல இந்தியாவிலேயே சிறந்த முதலமைச்சராக நம்முடைய முதலமைச்சரின் செயல்பாடுகளை ஊடகங்களும் பத்திரிகைகளும் புகழாரம் சூட்டிய போது, இந்தியாவின் நம்பர் ஒன் முதல்வர் நான் என்பதை விட, இந்தியாவின் நம்பர் ஒன் மாநிலமாக தமிழ்நாடு திகழ வேண்டும் என்று முதலமைச்சர் தன்னுடைய எண்ணத்தை பிரதிபலித்தார்.

இன்றைக்கு வளர்ந்த பெரிய மாநிலங்களில் பல்வேறு குறியீடுகளில் குறிப்பாக கல்வி, சுகாதாரம், சமூக பொருளாதாரம் ஆகியவற்றில் தமிழ்நாடு 63.3 குறியீடுகளைப் பெற்று இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக திகழ்கிறது என்றால், முதலமைச்சரின் அயராத உழைப்பும், நிர்வாகத் திறமையும் தான் காரணம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் இன்றைக்கு மகளிர்க்கான கட்டணமில்லா பேருந்து திட்டம் பெண்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றிருக்கிறது. பெண்களுக்கு சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது. ஆனால் போக்குவரத்து துறையில் பணியாளர்கள் பற்றாக்குறை பராமரிப்பு பணிகளில் தேக்கம் நிலை உள்ளதால் இதனை சரி செய்ய வேண்டும் என்று அரசை கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல முதலமைச்சரின் காலை உணவு திட்டம். இந்த திட்டம் இந்தியாவிலேயே முன்னோடி திட்டமாக உள்ளது. இந்தத் திட்டத்தை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் விரிவுபடுத்த வேண்டும்.

புதுமைப்பெண் திட்டம், பெண் கல்விக்கு உயர் கல்விக்கு முன்னோடி திட்டமாக உள்ளது. அரசு பள்ளிகளில் படித்த ஆறு முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்த மாணவிகளுக்கு மட்டும்தான் இந்தத் திட்டத்தின் கீழ் ஆயிரம் ரூபாய் மாதம் வழங்கப்படுகிறது. இதனை அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்று அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

வடகிழக்கு பருவமழை மற்றும் மாண்டோஸ் புயல் போன்றவற்றை நம்முடைய முதல்வர் எதிர்கொண்டதை, சென்னை மட்டுமல்ல தமிழ்நாடு முழுவதும் உள்ள மக்கள் இந்த அரசை பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் வட கிழக்கு பருவமழை வந்தால் ஒட்டுமொத்த சென்னை முழுவதும் வெள்ளக்காடாக மாறிவிடும்.

அதேபோல நீர் வடிவதற்கு பத்து நாட்கள் ஆகும். மக்களுடைய இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படும். ஆனால் போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு அனைத்து மக்களுடைய பாராட்டை இந்த அரசு பெற்றிருக்கிறது. அதேபோல் வடகிழக்கு பருவமழை காரணமாக டெல்டா மாவட்டங்களில் சுமார் இரண்டு லட்சம் ஏக்கர் சம்பா நெற்பயிர்கள் மூழ்கியிருக்கின்றன. ஆகவே ஏக்கருக்கு குறைந்தபட்சம் 30 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்க வேண்டும் என்பது விவசாயிகளின் கோரிக்கையாக இருக்கிறது. முதலமைச்சரின் பதிலுரையில் விவசாயிகள் எதிர்பார்க்கின்றார்கள். ஆகவே முதலமைச்சர் அந்த நிவாரணத் தொகையை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தெற்கு ஆசியாவிலேயே தொழில் தொடங்க உகந்த இடமாக தமிழ்நாடு திகழ்கின்றது. ஏனென்றால் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சரியான முறையில் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் நிலைநாட்டப்படுகிறது. ஆகையால் தொழில் முதலீடுகள் தமிழ்நாட்டை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன. இந்த அரசு ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 207 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டு 223210 கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டு இருக்கின்றன. அதன் வாயிலாக தமிழகத்தில் 344150 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது.

அதேபோல சிப்காட் தொழிற்பேட்டைகள் குறிப்பாக ஒசூரில் ஏற்கனவே 4 தொழிற்பேட்டைகள் உள்ள நிலையில், 5 வது சிப்காட் அமைப்பதற்காக நாகமங்கலம், உத்தனப்பள்ளி, அயர்னபள்ளி போன்ற ஊராட்சிகளில் 3500 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்த அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதை எதிர்த்து விவசாயிகள் காலவரையற்ற போராட்டத்தை அங்கே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் ஏற்கனவே 4 சிப்காட்களுக்கு விவசாயிகள் நிலம் வழங்கியிருக்கிறார்கள். 5 வது சிப்காட்க்கு எடுத்தால் ஒட்டுமொத்த விவசாயிகளின் நிலமும் பறிபோய்விடும். அவர்கள் கூலி விவசாயிகளாக மாறவேண்டிய நிலை ஏற்படும். ஏற்கனவே அரசுக்கு சொந்தமான தரிசு நிலங்கள் ஏராளமாக அந்தப் பகுதியில் இருக்கின்றன. அந்த தரிசு நிலங்களில் சிப்காட் தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் அரசை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல அண்ணன் வேல்முருகன் சொன்னதைப் போல தனியார் வேலை வாய்ப்புகளில் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு 80 சதவீத இட ஒதுக்கீட்டை அரசு சட்டமாக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் முதலமைச்சரை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல ஒப்பந்த செவிலியர்கள் பணிப் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

தொகுப்பூதியத்தில் ஒப்பந்த அடிப்படையில் கிராம உள்ளாட்சி அமைப்புகள், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, சமூக நலத்துறை உள்ளிட்ட அரசின் பல்வேறு துறைகளில் 10 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றக் கூடியவர்களுக்கு காலமுறை ஊதியம் மற்றும் பணி நிரந்தரம் செய்ய இந்த அரசு முன் வர வேண்டும்.

11 ஆண்டுகளாக 12,000 பகுதி நேர ஆசிரியர்கள் பத்தாயிரம் ரூபாய் தொகுப்பூதியத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு காலமுறை ஊதியம் மற்றும் பணி பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்த வேண்டும்.

அதேபோல இந்தியாவில் நடைபெற்ற போராட்டங்களில் மிகவும் முக்கியமானது மொழிவாரியான மாநிலம் அமைக்க வேண்டும் என்ற போராட்டம், குறிப்பாக மக்கள் நடத்திய மக்கள் போராட்டம் தான் அது. பின்னர் தான் மொழியை அடிப்படையாகக் கொண்டு மாநிலங்கள் உருவாக்கப்பட்டன. சென்னை மாகாணம் என்பது தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்பதற்காக 75 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்தார் சுதந்திர போராட்டத் தியாகி சங்கரலிங்கனார். பேரறிஞர் அண்ணா மாநிலங்களவைக்கு தேர்வு செய்யப்பட்டு சென்னை மாகாணம் என்பதை தமிழ்நாடு என பெயரிட வேண்டும் என பேசும்போது, இன்றைய பாஜகவின் முன்னோர்களான ஜன சங்கத்தினர் அனுமதிக்க முடியாது என முழக்கமிட்டனர்.

பேரறிஞர் அண்ணாவின் நெருங்கிய தோழர் பூபேஷ் குப்தா, பேரறிஞர் அண்ணாவை பேச அனுமதிக்க வேண்டும் என்றும், சென்னை மாகாணம் என்பது ஆங்கிலேயர் காலத்தில் பெயர் சூட்டப்பட்டது, தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்ய சட்ட திருத்தத்தை பூபேஷ் குப்தா முன்மொழிந்தார். இந்த சட்ட திருத்தத்திற்காக தமிழ் தொன்மையை வாசித்துப் பார்த்தேன். தமிழ் மொழியைப் போல வளர்ச்சி பெற்ற மொழிகள் மிக அரிதாக தான் உலகிலேயே இருக்கிறது. அந்த மொழி பேசும் மக்களுக்கான நிலத்தை தமிழ்நாடு என அறிவிக்க வேண்டாமா? என பூபேஷ் குப்தா நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார். பிறகு திராவிட முன்னேற்ற கழகம் 1967 ஆம் ஆண்டு ஆட்சி பொறுப்பேற்றவுடன் தமிழ்நாடு என பெயர் சூட்டினார் பேரறிஞர் அண்ணா. ஆகவே தமிழ்நாடு என பெயர் சூட்டியதில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், கம்யூனிஸ்ட் கட்சிக்கும் பங்கு உள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். தமிழ்நாட்டின் வரலாறு தெரியாதவர்கள் தமிழ்நாட்டை தமிழகம் என திரித்து போகிற போக்கிலே வழிப்போக்கனைப் போல இன்றைக்கு பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

என்னுடைய தொகுதி கோரிக்கைகள்: தளி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாக பிரித்து அஞ்செட்டியை மையமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்பட வேண்டும்.

தளி தொகுதியில் வனவிலங்குகள் மற்றும் மனித மோதல்களை தடுக்க சோலார் மின்வேலி அமைக்க வேண்டும்.

அஞ்செட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்டார மருத்துவமனையாக தரம் உயர்த்த வேண்டும்.

தேன்கனிக்கோட்டை தாலுகாவை இரண்டாக பிரித்து ராயக்கோட்டையை மையமாகக் கொண்டு புதிய தாலுகா உருவாக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி வணக்கம்.

## நீர்தேக்க தொட்டியில் மலம் கலந்தவர்கள் மீது நடவடிக்கை

தமிழக சட்டப்பேரவையில் தளி சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன், புதுக்கோட்டை மாவட்டம், முத்துக்காடு ஊராட்சி, வேங்கைவயல் கிராமத்தில் மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் மனித கழிவுகளை கலந்த நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்து பேசியதாவது:

பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், முத்துக்காடு ஊராட்சி, வேங்கைவயல் கிராமத்தில் 80 க்கும் மேற்பட்ட பட்டியலின குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அந்த பகுதியிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் மனித கழிவுகளை சில விஷமிகள் கலந்திருக்கிறார்கள். இது மனித குலத்திற்கே மாபெரும் தலைகுனிவு, அதேபோல் அந்த பகுதியில் தொடர்ந்து இரட்டை குவளை முறை, தனி சுடுகாடு, மேலும் கோவில் கருவறைக்குள் நுழைய தடை போன்ற பல்வேறு தீண்டாமைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இத்தகைய சனாதன நச்சு மரத்தை வேரோடு பிடுங்கி எறிய வேண்டும். அதேபோல் இந்த சம்பவத்தில் ஈடுபட்ட அத்தனை பேரையும் காவல் துறையினர் தயவு தாட்சணையின்றி கைது செய்ய வேண்டும். வன்கொடுமை சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்ய வேண்டும். சட்டத்தின் முன் நிறுத்தி அவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுத் தர வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

Janasakthi Tamil Weekly Published by R. Mutharasan and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: K.Subbarayan .,
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by A.Sivakumar at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 21.01.2023 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# மனிதர்களின் துன்பங்களை, துயரங்களை அறிந்தவர்தான் மிகச்சிறந்தவர்

## பாலன் இல்லத்தில் அலெய்டா குவேரா பேச்சு

**கியூபாவில் பிடல் காஸ்ட்ரோவுடன் இணைந்து புரட்சியில் ஈடுபட்டு அரசியல் மாற்றத்துக்கு வித்திட்டவர் புரட்சியாளர் சேகுவேரா. இவரது மகள் டாக்டர் அலெய்டா குவேரா, பேத்தி டாக்டர் எஸ்டானிபா குவேரா ஆகியோர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில தலைமையகமான பாலன் இல்லம் வருகை தந்தனர்.**




அவர்களை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு, மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மாநில கட்டுப்பாட்டுக்குழு தலைவர் கே.சுப்பராயன் எம்.பி., மாநில துணைச் செயலாளர்கள் நா.பெரியசாமி, மு.வீரபாண்டியன், முன்னாள் தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் சி.மகேந்திரன், மாநில செயற்குழு உறுப்பினர் வஹிதா நிஜாம், மாநில நிர்வாகக்குழு உறுப்பினர்கள் டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திரநாத், க.பாரதி, மாநிலக்குழு உறுப்பினர்கள், த.லெனின், ஏ.ஆர்.சாந்தி, மாவட்டச் செயலாளர்கள் தென் சென்னை எஸ்.கே. சிவா, மத்திய சென்னை பா.கருணாநிதி, வடசென்னை த.கு.வெங்கடேஷ் வேம்புலி,

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், வி.சி.க. தலைவர் தொல்.திருமாவளவன், ஓவியர் புகழேந்தி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு வரவேற்பு அளித்தனர்.

வரவேற்பை தொடர்ந்து பேசிய அலெய்டா குவேரா, ``என் தந்தையின் மீது நீங்கள் கொண்டுள்ள பேரன்பை என்னால் உணர முடிகிறது. உங்களின் அன்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன், சிலவற்றுக்கு நன்றி சொல்வதற்கான வார்த்தைகள் என்னிடம் இல்லை. நான் சேகுவேராவின் மகளாக இருப்பதில் பெருமை கொள்கிறேன். போராளியின் மகளாக இருந்தால் மட்டும் போதாது, மனித உரிமைகளுக்காக நானும் போராட வேண்டும். அதற்கான செயல்பாடுகளில் ஈடுபட்டிருப்பது எனக்கு பெருமகிழ்ச்சி அளிக்கிறது.

இந்த நாட்டின் மிகப்பெரும் தலைவர், மிகப்பெரிய போராட்ட வீரர் தோழர் நல்லகண்ணு அவர்களுடன் இருப்பது எனக்கு பெருமையாக இருக்கிறது. அவருடன் இருப்பது எனக்கு மரியாதையையும், மதிப்பையும் கொடுத்திருக்கிறது. அவர் சாதாரண மக்களுக்காக உழைக்கக் கூடிய, பணியாற்றக் கூடிய மிகச்சிறந்த மனிதர். இதனால் இன்றைய நாளை மிகச்சிறந்த நாளாகக் கருதுகிறேன்.

என்னுடைய தந்தை சேகுவேரா மீது நீங்கள் காட்டிய அன்பை என்னால் உணர முடிகிறது. கியூபாவில் புகழ் பெற்ற ஹோரசே மார்தே என்பவர் இருந்தார். மற்ற மனிதர்களுடைய துன்பங்களை, துயரங்களை அறிந்தால் தான் மிகச்சிறந்த மனிதராக இருக்க முடியும் என்று அவர் அடிக்கடி கூறுவார். அதை உணர்ந்து இருப்பதால்தான் சேகுவேராவின் உணர்ச்சியை என்னால் பிரதிபலிக்க முடிகிறது. சேகுவேராவின் மகள் என்ற முறையில் உங்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நாட்டு மக்களின் சக்தியை, ஆற்றலை நீங்கள் வெளிப்படுத்துகிறீர்கள். மக்கள் சக்தியுடன் இணைந்து தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். நாம் தொடர்ந்து போராடிக் கொண்டே இருக்க வேண்டும். வெற்றியைத் தொடும் வரை நாம் தொடர்ந்து போராடிக் கொண்டே இருக்க வேண்டும்.

மருத்துவராகவும், மக்களுக்கு சேவை செய்வதிலும் பெருமை கொள்கிறேன். மக்களுக்காக தொடர்ந்து நாம் போராடிக்கொண்டே இருக்க வேண்டும், கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணுவை சந்தித்தது மகிழ்ச்சி அளிக்கிறது என பேசினார்.

# தாராபுரம்: தொடரும் நில மீட்பு போராட்டம்





திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தை அடுத்த தளவாய்பட்டிணம், ஊத்துப்பாளையம் ஆகிய கிராமங்களில் நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் அரசால் கையகப்படுத்தப்பட்ட நிலம் 54.76 ஏக்கர் உள்ளது.

இந்த நிலத்தை நிலமற்ற ஏழை விவசாயிகள் மற்றும் கூலித் தொழிலாளர்களுக்கு பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக எழுந்ததைத் தொடர்ந்து, கடந் 2003 ஆம் ஆண்டு நிலமற்ற ஏழை கூழித் தொழிலாளர் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது.

தளவாய்பட்டணத்தில் மட்டும் 54.76 ஏக்கர் நிலம் 45 நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கி அரசு பட்டா விநியோகம் செய்தது.

ஆனால் அன்று தொட்டு இன்று வரை அந்த கூலி விவசாய தொழிலாளர்கள் தங்களுடைய நிலம் எது என்று அறியாமல், பட்டாவை மட்டும் கையில் வைத்துக் கொண்டு, நிலத்தை தங்களுக்கு அளந்து வழங்க வேண்டும் என போராடத் தொடங்கினார்கள்.

இந்தப் போராட்டத்தை திருப்பூர் மாவட்ட கம்யூனிஸ்ட் கட்சி தலைமை தாங்கி நடத்தியது. குறிப்பாக மக்களவை உறுப்பினர் கே. சுப்பராயன், தமிழ்நாடு விவசாய தொழிலாளர் சங்க பொதுச் செயலாளர் நா. பெரியசாமி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் எம்.ரவி, தாராபுரம் தாலுகா செயலாளர் பி. ரகுபதி ஆகியோர் நிலமற்ற ஏழை கூலி விவசாய தொழிலாளர்களுக்கு நிலத்தை பெற்றுக் கொடுப்பதில் முனைப்பாக இருந்து போராட்டத்தை நடத்தினார்கள்.

இந்தப் போராட்டம், சட்டப் போராட்டமாக மாறியது, இது சம்பந்தமான வழக்கு உச்சநீதிமன்றம் வரை சென்றது. நில உடமையாளர் பழனிசாமி கவுண்டர் மகன் அரங்கசாமி குடும்பம், நிலத்தை அரசாங்கம் எடுத்துக் கொண்டது தவறு என்று கூறி நில சீர்திருத்த தீர்ப்பாயம், உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் என கொண்டு சென்றது.

தமிழ்நாடு நில சீர்திருத்த சட்டம் 1961, நில சீர்திருத்த சட்டம் 1970 ஆகியவற்றின் கீழ் மேற்படி நிலத்தை எடுத்தது சரிதான் என்றும் அரசு வாதிட்டது. இறுதியாக உச்ச நீதிமன்றம் அரசு நிலத்தை எடுத்தது சரி என்று தீர்ப்பளித்தது.

மேற்படி நிலத்தை சம்பந்தப்பட்ட பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் திருப்பூர் மக்களவைத் தொகுதி உறுப்பினர் கே. சுப்பராயன் மேற்கொண்ட முயற்சியில், நிலச் சீர்திருத்த துறை கமிஷனர் மற்றும் செயலர், மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு நிலத்தை அளந்து ஒப்படை செய்ய உத்தரவிட்டார்.

அதன்படி கடந்த மாதம் நில அளவைத் துறை அதிகாரிகள், வட்டாட்சியர் உட்பட நேரில் வந்து நிலத்தை அளந்து சம்பந்தப்பட்ட 45 விவசாய கூழித் தொழிலாளர்களுக்கும் வழங்கி உள்ளார்கள்.

திருப்பூர் மக்களவைத் தொகுதி உறுப்பினர் கே. சுப்பராயன் தளவாய்பட்டினத்திற்கு நேரில் சென்று பயனாளிகளை சந்தித்து, ‘‘கம்யூனிஸ்ட் கட்சி மேற்கொண்ட தொடர் போராட்டத்தின் விளைவாக நிலத்தை அரசாங்கம் அளந்து உங்களிடம் ஒப்படைத்து இருக்கிறது.

நீங்கள் இனி பயன்படுத்திக் கொள்ளலாம், யாதொரு மிரட்டலுக்கும் அஞ்ச வேண்டாம் கம்யூனிஸ்ட் கட்சி உங்களோடு நிற்கும், தொடர்ந்து போராடும்‘‘ என்றும் நம்பிக்கை ஊட்டினார்.

இதுகுறித்து அவர் கூறும்போது, ‘‘தேச விடுதலைக்கான போராட்டம் நடைபெற்ற காலத்திலேயே நிலக்குவியல் என்பதை தவிர்த்து, உழுகிற விவசாயிகளுக்கு, உழத் தெரிந்தவர்களுக்கு நிலம் விநியோகிக்கப்பட வேண்டும் என்ற வாதப் பிரதிவாதங்கள் நடை பெற்றன.

அதனுடைய தொடர்ச்சியாகத்தான் நாடு சுதந்திரம் பெற்றதற்கு பின்னர், நீண்ட பல முயற்சிகளுக்கு பின்னர், நிலச் சீர்திருத்த சட்டம் கொண்டு வரப்பட்டது.

ஒருவர் எவ்வளவு நிலம் வைத்துக் கொள்ளலாம் என்று சட்டம் வரையறுத்துக் கூறி, அதற்கு மேல் இருந்தால் அதை சர்க்கார் எடுத்துக்கொள்ளும் என்றும் சட்டம் இயற்றப்பட்டது.

அந்த சட்டம் இயற்றப்பட்டதற்கு பின்னர் பல திருத்தங்களை அது சந்தித்து வந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் டாக்டர். கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, அது மேலும் திருத்தப்பட்டு 15 ஸ்டேண்டர்ட் ஏக்கருக்கு மேல் யாருக்கும் நிலம் இருக்கக் கூடாது.

அதற்கு அதிகமாக நிலம் இருந்தால் அதை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும், அதை நிலமற்ற ஏழைகளுக்கு விநியோகிப்பது என்ற நிலை வந்தது.

இதற்காக நீண்ட போராட்டம் நடந்து வந்துள்ளது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியால் விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள் அமைப்பின் கீழ் இந்த போராட்டம் நடத்தப்பட்டது. அவற்றின் விளைவாக வந்ததுதான் நில உச்சவரம்பு சட்டம்.

அதன் அடிப்படையில் கடந்த 1970 ம் ஆண்டிலேயே அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1973ம் ஆண்டு இந்த இடம் உபரி நிலமாக அறிவிக்கப்பட்டது.

அரசால் எடுக்கப்பட்ட 54. 76 ஏக்கர் நிலத்தை நிலமற்ற ஏழைகளுக்கு பிரித்து பட்டா கொடுக்கப்பட்டது. 2003ல் பட்டா கொடுக்கப்பட்டு 19 ஆண்டு காலம் அந்த நிலத்தை அனுபவிக்க முடியாமல் சம்மந்தப்பட்ட மக்கள் சட்டப் போராட்டத்தை நடத்தினார்கள்.

அரசாங்கமே உச்ச நீதிமன்றம் வரை சென்று இந்த நிலம் அரசுக்கு சொந்தமானது, இது அரசாங்கத்தின் சொத்து, என்று வாதாடியது. உச்ச நீதிமன்றம் அதை உறுதிப்படுத்தி விட்டது.

2003ல் பட்டா வழங்கப்பட்டது. மாநில அரசு பட்டா கொடுத்து இருக்கிறது. ஆனால் பட்டா காகிதத்தில் மட்டும் இருக்கிறது. காகிதத்தில் குறிக்கப்பட்டுள்ள நிலம் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களின் உரிமைக்கு வரவில்லை.

இப்பொழுது பட்டா வழங்கப்பட்டவர்களுக்கு நிலத்தை அளந்து கொடுங்கள் என்று முறையிட்டோம். உயர் நீதிமன்ற உத்தரவுப்படி 45 பயனாளிகளுக்கும் பட்டாவில் என்ன அளவு குறிப்பிட்டுள்ளதோ அந்த அளவை அரசாங்கம் அளந்து கொடுத்திருக்கிறது.

இதற்கிடையில் நில சீர்திருத்த கமிஷனர் ஆர்.டி.ஓ. அவர்களுக்கு ஒரு நேரடி உத்தரவை போட்டார்கள். உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிற படி சம்பந்தப்பட்ட பயனாளிகளை அழைத்து அவர்களுக்கு நிலத்தை அளந்து, எல்லை எது என்று அத்துக்காட்டி அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிட்டு இருக்கிறார்கள்.

அந்த இடத்தில் கேட்பிரீஸ் கம்பெனி 10 ஏக்கர் நிலம் வாங்கி இருக்கிறார்கள். அந்த நிலம் வாங்கியதும் சட்டப்படி தவறு, விற்றதும் சட்டப்படி தவறு என்று ஹைகோர்ட் தீர்ப்பு சொல்லி இருக்கிறது.

தற்போது அந்த நிலம் பயனாளிகளின் பயன்பாட்டிற்கு வந்திருக்கிறது. இது சர்க்கார் கொடுத்த பட்டா அந்த நிலத்தை மக்கள் எடுத்துக் கொள்ளலாம் என்று அளந்து சர்க்கார் கொடுத்து விட்டது.’’ என்றும் அவர் கூறினார்.

இந்த நிகழ்வின் போது அவருடன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் நா.பெரியசாமி, மாநில நிர்வாக குழு உறுப்பினர் எம். ரவி, திருப்பூர் மாநகர் மாவட்ட செயலாளர் எஸ். ரவிச்சந்திரன், ஊரக மாவட்ட செயலாளர் கே. எம். இசாக், தமிழ்நாடு விவசாய தொழிலாளர் சங்கம் மாவட்ட செயலாளர் வி. பி. பழனிசாமி, தாராபுரம் தாலுகா செயலாளர் பி. ரகுபதி ஆகியோர் உடன் இருந்தனர்.